தமிழ்த்தாய் வாழ்க.

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு.

அட்சய ஆண்டு.

(1926 - 1927.)

இரண்டாந் துணர்.

பொழிற்றொண்டர் { ஆர். வேங்கடாசலம்பிள்ளை.
நீ. கந்தசாமிப்பிள்ளை.

இதன் முதல் எட்டு மலர்கள் தஞ்சை பூர்ணனந்தா அச்சுக்கூடத்தும், ஒன்பது முதல் பன்னிரண்டுவரை யுள்ள மலர்கள் தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தும் அச்சிடப்பெற்றன.

I. கட்டுரைகள்.

அஞ்ஞானக் குறிப்பு	...	175.
இயல்நூற் குறிப்பு	...	190.
உலகவரலாறு	...	24, 165.
எட்டு ஒன்பது முதலியவை	...	122.
ஒரு துயரம்	...	1.
ஓர் நல்வரவேற்பு	...	86.
கம்பரும் மக்களுள்ளமும்	...	161.
கல்லூரி நிகழ்ச்சிகள்	...	47.
கல்வி	...	459.
கற்புடையமகள் கண்ணகி	...	51, 241.
குமாரகுருபரவடிகளும் அவர் நூல்களும்	...	196, 337.
குற்றியலுகரப் புணரியல்	...	297.
கூவலாமை	...	4.
சம்புவராயமன்னர்	...	142.
சிலப்பதிகார நாடகத்து ஒரு பகுதி	...	304.
சோதிமரம்	...	235.
தஞ்சையரசர்	...	30, 126.
தமிழ் மக்களும் கப்பற்றொழிலும்	...	206.
தமிழர் வீரம்	...	169, 264, 428.
தமிழிற் பிறமொழிக் கலப்பு	...	321.
தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்	...	68, 151, 403.
திருவிழா	...	398.

தொல்காப்பிய பாயிரவியல் ... 80.
"நத்தம் போற்கேடு" என்னும் குறளுரை 18.
"நத்தம் போற்கேடு" என்னும் குறளுரை
யாராய்ச்சி ... 60.
நற்றிணைப் பதிப்பு ... 156.
நெசவுத்தொழிலும் நம்மவரும் ... 277.
பல்கலைக்கழகங்களின் பாடநூல்கள் ... 392.
பிறப்பொக்கும், சிறப்பொவ்வா ... 342.
மத்தியகாலத்துச் சோழர் ... 75, 137.
மழவர் வரலாறு ... 8.
மற்றொரு துயரம் ... 80.
முதலாங் குலோத்துங்கன் ... 441.
முடத்தாமக் கண்ணியார் ... 415.
மூவர்தமிழ் ஆராய்ச்சி ... 357.
மூவர்தமிழின் சிறப்பு ... 100.
வரலாற்று மொழிகள் ... 39, 115, 175.
வரலாற்று மொழியாராய்ச்சி விளக்கம் ... 226.
வள்ளல்கள் வரலாறு ... 216, 304.

2. கட்டுரை யெழுதினோர்.

திருவாளர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்,
திருச்சிராப்பள்ளி.

,, L. உலகநாத பிள்ளையவர்கள், திருவையாறு.

,, அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், கோயமுத்தூர்.

,, P. V. மாணிக்க நாய்க்கர் அவர்கள், சென்னை.

,, T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
கும்பகோணம்.

,, சோமசுந்தரதேசிகர் அவர்கள், திருவாரூர்.

,, இ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், திருவையாறு.

,, T. N. அப்பனையங்கார் அவர்கள், மதுரை.

,, சாமி. சிதம்பரனார் அவர்கள், அரசர்மடம்.

,, வீ. உலகவூழியர் அவர்கள், பூளைமேடு.

,, சி. சோமசுந்தரமுதலியாரவர்கள், கரந்தை.

,, ந. மு. கோவிந்தராய நாட்டாரவர்கள், B.A., L.T.,
அரசர்மடம்.

,, கோ. குப்புசாமிராசு அவர்கள், பள்ளியக்கிரகாரம்.

,, மா. வே. கோபாலகிருட்டினையரவர்கள், கரந்தை.

,, N. விசுவநாதையாவர்கள், கரந்தை.

,, சிவ. குப்புசாமி பிள்ளையவர்கள், கரந்தை.

,, கு. தங்கவேலுப் பிள்ளையவர்கள், B.A., B.L.,
திருச்சிராப்பள்ளி.

,, K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், தஞ்சை.

,, ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள், கரந்தை.

,, நீ. கந்தசாமி பிள்ளையவர்கள், பொழிற்றொண்டர்.

,, R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்,
பொழிற்றொண்டர்.

இவர்கட்குச் சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்து உரியதாகும்.

நீடு வாழ்க.

அன்பர்கட்கு வேண்டுகோள்.

நமது பொழிலின் இரண்டாந் துணர், இறைவன் திருவருளால் இன்று முற்றி வெளிவந்துளது. தத்தமக்குரிய பற்பல அலுவல்கட்கிடையே இதற்குக் கட்டுரை யெழுதிவந்த தமிழறிஞர்களாய நண்பர்கட்கும், பொழிலின் தாழ்ச்சிகளைப் பொருட்படுத்தாது புரந்துவந்த உறுப்பினர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியறிவினையும் வாழ்த்தினையும் தெரிவிக்கின்றோம்.

முன்னர்க் குறித்தவாறு பொழில் மலராது தாழ்த்து வந்ததற்குற்ற குறைகள், கட்டுரைகள் போதிய அளவில் வந்துறாத குறையும், அச்சுநலமின்மையுமேயாகும். இக்குறைகள் இவ்வாண்டில் நிகழ்வதற்கில. எங்ஙனமெனின், பொழிலிற்கு ஆசிரியர்குழு ஒன்று நாட்டப்பெற்றுளது. இதன்கண் இதுபோது அமைந்துளார் பண்டிதராய திருவாளர்கள் எல். உலகநாத பிள்ளையவர்கள், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கள் எனும் இவர்களாவர். வேறு சில பண்டிதர்களும் இடையறாது கட்டுரை யெழுதிவர உறுதி கூறியுள்ளார்கள். சங்க அன்பர்களால் நிறுவப்பெற்ற கூட்டுறவுப் பதிப்பகத்தில் நமதுபொழில் அச்சிடப்பெறுகிறது. இதன் அச்சுவேலைகளை நடாத்துவார் திருவாளர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள். ஆகவே, இத்தகைய நலங்களால், இனி, நமது பொழில் தாழ்வுறாது உடன்உடன் வெளிவந்து கொண்டிருக்குமென்பது உறுதி.

நமது பொழிலின் மூன்றாந்துணர் பிரபவ, தைத்திங்கள் முதலில் வெளிவரும். இருபது நாட்களின் மேற்போகாமல், மூன்றாம் துணரின் மலர்கள் ஒவ்வொன்றாக வந்துகொண்டிருக்கும்.

தமிழ்த்தாயின் தொண்டுகுறித்து, ஊதியத்தை எதிர்நோக்காது தமிழ்த்தொண்டு செய்துவரும் நமது பொழிலை, தமிழன்பர்கள் புரந்து வருதல் ஒப்பில் அறச்செயலாகும். அன்றியும், பொழிலை நாட்டிய சங்க உறுப்பினர்க்கோ, பொழிலைப்புரந்துவருதல் ஒரு கடமையுமாகும். ஆகவே, சங்க உறுப்பினரும் சங்க அன்பரும் பொழிலின் உறுப்பினராகிப் புரந்துவர மிகமிக வேண்டுகின்றேம்.

பொழிற்றொண்டர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

௧௫, ௧௬-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்.

ஆங்கிலம் ஆரியம் தீந்தமிழ்க் கலைகள்
நிறைதிரு வாளர் மறைமலை யடிகள்.

R011-98
: 11.85
1-462
(472)

உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர் : உ அட்சய-ஐப்பசி. மலர் : க, உ.

உ

ஒரு துயரம்.

இச்சங்கத்தலைவரவர்களின் முதன்மகனும், சங்கத்தின் அருமைத் தொண்டனுமாகிய **பஞ்சாபகேசன்** என்னும் பதினாறாண்டுச் சிறுவன் விண்ணுலகிற் றமிழ்த்தொண்டியற்றப்புக்கது தமிழ் அன்பர்கட்குப் பெருந்துயர் விளைவித்தது, விளைவிப்பதொன்றாகும்.

இவ்விளைஞன் தன் நுண்ணறிவால், யாவர்க்கும் பொதுவாகவும், கல்விபயிற்றிய ஆசிரியர்கட்குச் சிறப்பாகவும் மிகு வியப்பினையும், மகிழ்ச்சியினையும் தந்துவந்தவன். தான் பயின்றுவந்த S. S. L. C. வகுப்பில் தனக்கு இணையில்லையென முதன்மைபெற்று விளங்கினவன். தமிழ்க்கல்வியில் மேவிய ஆர்வத்திற்கும் தெளிவிற்கும் அளவிலதென மிளிர்ந்தவன். ஒரு நாட் பழகியோரும் தனது அன்பு, அடக்கம் ஒழுக்கம் முதலிய உயர்குணங்களை நன்கு அறிந்து பெருமகிழ்வுற நின்றவன். தன் கடமைகள் எத்துணையவாயினும் எச்சம் வையாது அவ்வப்போது முடித்துவிடுதலில், தவக்குறையுடைய தன் தந்தையாரினும் சிறந்தவன். 'கன்றும் உதவும் கனி,' என்பதற்கு ஒரு சிறந்தசான்றாக நின்று சங்கத் தொண்டுகளைத் திறம்பெற இயற்றிவந்தவன்.

இவ்வரிய சிறுவனை யிழந்ததினால் இச்சங்கத்திற்கு எய்திய பெருந்துயரினுக்கும், நலக்கேட்டினுக்கும் அள வின்று.

இம்மாணவனை இழந்த ஆசிரியர்களும், அன்பர்களும் வருந்திக்கூறியன:—

திருச்சிராப்பள்ளி, தமிழ்ப்புலவர், திருவாளர். ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறிய வெண்பாக்கள்:

நுண்மாண் புலனும் நவனும் வினைத்திறனும்
எண்மாண் குணனு மியைந்தெவர்க்கு—கண்மானும்
பஞ்சாப கேசவன்பின் பாலனே மெய்ம்மையினில்
துஞ்சாய்நீ துஞ்சுவதோ சொல். (1)

மாயா விசித்திரமா மண்ணுலக நாடகத்திற்
பேயான வஞ்சப் பெரும்பிழைகள்—தோயாத
நல்லங்க மொன்றே நடித்தா யெனினுமிஃ
தல்லன்முடி வாய தறி. (2)

திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் கூறியன:

என்றும் பொழின்மிளிர எவ்வழியுந் தாய்நிழற்றுங்
கன்றே! நின் பொற்கனியைக் காண்பதெஙன்-நன்றில்லேன்
பாங்ககலா மாணவனே! பான்மதியாம் நின்னொளியை
யாங்கையோ காண்குவனே யான். (1)

அந்தோபாழ்ங் கூற்றே!யெம் மண்ணல்நற் கண்கொண்டாய்
முந்துபுரி தீச்செயல்கள் முற்றுவோ-சிந்தையிலாய்!
மன்மக்க ளெல்லாந்தன் மக்களெனக் கொள்வானை
என்னையினிச் செய்வ திடர்? (2)

திரு. பேதுரு உயர்பள்ளிக்கூடத்தின் VI. A. வகுப்பு உபாத்தியாயர் திருவாளர் R. சுந்தரமையரவர்கள் B. A., L. T., கூறியது:

"*My dear boys,!*"

"We all meet to-day under very bad circumstances It is sad to learn that VI-A is to-day one less than when we last dispersed for Michaelmas. It is a great pity that we have lost one of our very bright, intelligent and quiet boys, in fact, the very best among us. I mean the sad demise of U. Panchapakesan. After a short illness of two days which was not thought to be of a serious kind, the poor boy succumbed to fate and the school has lost one of its brightest gems."

இம்மணியினை யிழந்ததுபற்றிய சங்கக் கல்லூரி ஆசிரியர்-மாணவர்களது துயர நிகழ்ச்சிகளைத் தலைமையாசிரியர் அவர்கள் எழுதியுள்ள தனிக்குறிப்பாலறிக.

ஒப்பி லாதவொண் பஞ்சாப கேசனே !
இப்பு விப்பிறப் பென்னுமி டையிலா
வெப்ப நீங்கிட மேவுக வீடரோ
தப்ப மார்தமிழ்த் தாயருள் தாங்கியே !

வே.

௨

கூவலாமை.

"கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்"

என்பது திருநாவுக்கரசுநாயனாரால், குறுகியஅறிவுடையார் பரந்த அறிவின் பயனையறியமாட்டார் என்னுங்கருத்தை விளக்குவதற்காகக் கொள்ளப்பட்ட ஓர் உவமையாகும். "கிணற்றில் வாழும் ஆமை கடலில் வாழும் ஆமையை நோக்கி 'எம் கிணற்றுக்கு நும் கடல் இணையாகுமோ' என்பதுபோல்" என்பதே இதன் பொருள். ஈண்டுக்கூறிய கிணற்றில் வாழும் ஆமை, தான் வாழ்கின்ற நிலையைச்சூழ்ந்த உலகப்பரப்பையும், அவ்வுலகைச்சூழ்ந்துள்ள கடலின் விரிவையும் அறிதற்கியலாததாகி, அவ்வறியாமையினால் ஏற்பட்ட ஆணவமிகுதியால், தான்வாழ்கின்ற கிணற்றையே பெரிதெனத் தனக்குள் எண்ணிக் கொண்டதோடமையாது அக்கிணற்றினும் கடல் மிகச்சிறியதாகவேயிருக்கவேண்டும் என்னும் தன் கருத்துத்தோன்ற 'கூவலோடொக்குமோ கடல்?' எனவும் ஏளனத்துடன் வினவுகின்றது. கடலின் உயர்வை அறிந்துகோடற்காய முயற்சிகள் கூவலாமையின்பால் ஒன்றுமில்லையேனும், கடல், தான் எல்லையற்ற பெருவெளியோடு கலந்த ஒருவெளி யென்னுந்தகுதிக்கேற்ப, தனது இயற்கையாய அருள் மேம்பாட்டால் "எல்லையற்ற தொன்றுள்ளது" "பரந்த தொன்றுள்ளது" "பரவெளியின் பெருநிலை கண்டனைவரு மின்புறுமின்" என அனைவரையும் அன்போடழைப்பதுபோன்று திரைக்கை காட்டி ஒலிக்குமன்றே: அவ்வாறு ஒலிக்கும்ஒலியேனும் கூவலாமையின் செவியையெட்டி அதற்குக் கடலின் மாண்பைத் தெரிவித்தபாடில்லை. இது குறித்தே அடிகள். கடல் எனக்கூறுவதோடமையாது 'ஒலி' யென்னும் அடைகொடுத்து ஒலிகடலென வருளினர். தானேயறிந்து கோடற்கேற்றவன்மையும், பொதுப்படக் கூறுவதைக்கொண்

டேனும் தெரிந்துகொள்ளும் திறனுமற்ற இக்கூவலாமையின் பால் கடலின் பரப்பையும், பெருமையையும் நேரேயுணர்ந் தின்புறும் கடலாமையொன்று சென்று, அக்கடலின் உயர்வை யுணர்த்தினும், கூவலாமை தன் குறுகிய நோக்கத்தினின்று மகலாது கூவலே பெரிதெனக்கொண்டு இறுமாந்திருக்கின்றது. இதனால் குறுகியநோக்கமுடையார்க்குப் பெருநோக்கம் வருவது சிறிது இடர்ப்படும் என்பதும், குறுகியநோக்கில் ஆணவமும் ஏனையவிருளும் குடிகொள்ளுமென்பதும் தெரிகின்றன.

இவ்வுவமை, இக்காலத்து, அறிவுக் கடலின் பரப்பை அறிந்து இன்புறுவதற்கு ஒருசிறிதும் முயலாது, ஒரு சிறு கூவலிடத்தே தங்கித் தாண்டிக்குதித்தின் புறும்நம் தமிழ் மக்களுக்கே நன்குபொருந்தும் எனக்கூறின் ஒரு சிறிதும் பிழை யாகாதென வெண்ணுகின்றோம். உலகமுழுதும் பலவகையா லும் சிறப்புற்றோங்கவும், அவ்வாறு சிறப்புற்றோங்கும் செய்தி நம் செவியிடத்தொலிக்கவும், அவ்வாறு சிறப்புற்றோரை நேரிற் கண்டும் நம்மக்கள் தங்கள் துயிலினின்று எழுதற்கு ஒரு சிறி தும் முயலாதிருக்கின்றனர். பிறர் புகழொலியனைத்தும் தங்களைப் படுக்கையைவிட்டெழுப்பும்சங்கொலியெனக்கருதாது, தங்களைத் துயிலுறச்செய்யும் பாட்டொலியெனக்கருதி அயர்ந்துறங்கல் பெரிதும் நகைக்கிடனாகின்றது.

மொழிவளர்ச்சியென்ற ஒரு துறையை நோக்குவோமா யின், உலகத்தவர்க்கு யாம் எவ்வளவு பிற்பட்டிருக்கின்றோம் என்பது நன்கு தெரியும். நம்மொழி சீரடைந்த காலத்துக்குப் பற்பலநூற்றாண்டுகளுக்குப் பின்புதோன்றிய மொழிகளெல்லாம் இக்காலத்தடைந்துள்ள உயர்வும், நம்மொழியடைந்துள்ள தாழ் வும் உற்றுநோக்குவோமாயின், ஒரு குடியில், பெயரனொருவன் இலக்கியவிலக்கணங்களெல்லாம் நன்குகற்றுத் தொல்காப்பிய வாராய்ச்சியி வாழ்ந்து, தமிழகத்தே பிற்காலத்தே புகுந்த **ஒட்டகம்** தொல்காப்பிய மரபியலுள் முன்னமே எவ்வாறு புகுந்ததெனச் சிந்தித்துக்கொண்டிருப்ப, அவன் பாட்டன் அரிச் சுவடியைக் கையிலெடுத்துக்கொண்டு தன் கூன்முதுகொடு "அ"

வின் வளைந்தமுதுகைப்பார்த்துப் படித்துக்கொள்வதுபோலிருக்கின்றது. பிறமொழிகளிலெல்லாம் அறிவுநூல்கள் மலிந்துகிடக்க அந்நூல்கள் நம்மொழியில் பெரிது மில்லாதிருப்பது நம்மவர் உள்ளத்தையெல்லாம் மிகவும் கவல்விக்கவில்லையா? இவ்வாறு நம்மொழி தாழ்வடைதற்குத் துணையாகநின்றது நம்மவரது ஊக்கக்குறைவன்றிப் பிறிதேதேனுமுளதோ?

பிறமொழிகளின் உயர்வைக் கூறுவோமாயின் நம்மவரில் மொழிப்பற்றுள்ள சிலர், "நமது மொழிக்கு ஏனையமொழிகள் இணையாகுமோ? இஃது அகத்தியன் பயந்த செஞ்சொல் லாரணங்கன்றோ? கண்ணுதற்பெருமான் களித்தருள் மொழியல்லவா? ஆங்கிலம் முதலாம் மொழியெலாம் ஈங்கிலாக்காலத்தே பாங்கொடு பாண்டியர் தாங்கிய தமிழன்றோ?" என எதுகைமோனையொடு சொல்லமைத்துப் புகழ்ந்துபேசி, இவ்வாறு தாங்கள் புகழ்ந்து விட்டதினாலேயே தமிழ் உயர்வடைந்துவிட்டதெனக் கருதி மகிழ்ந்து கொள்வார்கள். இக்காலத்து யாதொரு தகுதியுந் தேடமுபலாது பழம்பெருமைகளைச் சொல்லிக் கொள்வ தெல்லாம் "கல்லா வொருவன் குலநலம்பேசுதல், நெல்லினுட் பிறந்த பதராகும்மே" என்னும் அடிகளை ஒருமுற்றநினைவூட்டுவதேயாகும்.

நமது பழம்பெருமைகளைக் கூறிக்கொள்வது தகாதென்பது நமது கருத்தன்று. நாம் நமது முன்னோர்களது பெருமைக் கேற்ப நடந்துகொள்கின்றோமா என்பதுதான் நமது கேள்வி. பழம்பெருமையைக் கூறிக்கொள்ளும் நம்மவரில் எத்துணைவர், நமது பழம்புலவர்களின் வரலாற்றை நன்குணர்ந்திருக்கின்றனர்? உணர்ந்துகொள்ள முயன்றவர்களில் எத்துணைவர் உண்மையையாராய்ந்து வெளிப்படுத்தியிருக்கின்றனர்? வெளிவந்துள்ள ஒன்றிரண்டு நூல்களையும் வாங்கிப் படித்தவர்கள் எத்துணைவர்? உண்மையாகக் கூறுவோமாயின் மேற்குறித்த கேள்விகளுக்கெல்லாம் விடையாகப் புகரக்கூடியது, எவருங்கேட்டு ஏளனஞ்செய்யக்கூடிய விடையன்றிப் பிறிதுளதோ?

இவ்வாறு நாம் நம் குறைகளையே விரித்துக் கூறுவோமாயின், இஃதோர் பயனற்ற வெற்றுரையே யாகுமென்பது வெளிப்படை. எனவே, யாம், இனியேனுங் கூவலாமைபோலிராது, அறிவுக் கடலின் பரப்பை இனிதுணர்ந்து, நலனடைந்து, நம்முன்னோர் பெருமைக்கும் நமது இக்காலநிலைக்கும் யாதொரு இழிவும் ஏற்படாவண்ணம் தக்க வழிகளைத்தேடி அதன்படி நடத்தல் இன்றியமையாதாகும். நமது மொழியும் நாமும் முன்னேறுவதென்பது ஏதோ ஒருசிலர் கையிலிருப்பதாக நாம் கருதல் கூடாது. உடல் நலத்திற்கு ஒவ்வொரு உறுப்பின் உதவியும் எவ்வாறு வேண்டப்படுகிறதோ, அவ்வாறே நம் தமிழக முன்னேற்றத்திற்குத் தமிழ்மக்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் உதவவேண்டியவர்களாவார்கள். நம்மவர் ஒவ்வொருவரும் அவரவர்கள் செலுத்தவேண்டிய கடமையை நன்கு தெரிந்து செவ்வையாகச் செலுத்தவேண்டும்.

உலகில் எவரும் தங்கள் பெருமையையும், உரிமையையுங் கேட்பதென்றால், கன்னலுந் தேனுங் கலந்ததெனக்கருதி மகிழ்வரென்பதும், கடமைகளைக் கேட்பதெனின், வேம்பினுங் கைப்பெனக்கருதி வெறுப்பரென்பதும் நாமுணராதனவல்ல. எவ்வாறு அவர்கள் கொள்ளினும், கடமைகளை நன்குணர்ந்து செலுத்தாவழி உரிமையும் பெருமையும் எவ்வாறெய்துவர்?

நம்மவர் கடமைகளைச் சுருங்கச் சொல்லுவோமாயின், தமிழ்ப் புலவர்களாயுள்ளவர்கள், பழந்தமிழ் நூல்களை நன்காராய்ந்து, அவற்றின் அருமை பெருமைகளை வெளியிடவேண்டுமென்பதும், பிறமொழிவல்லார் அவ்வம்மொழிகளிலுள்ள அரியநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டுமென்பதும், அறிவு நூல்களில் தேர்ச்சியுற்றவர்கள் அவரவர் தேர்ந்துள்ள கலைகளைத் தமிழிலாக்கவேண்டுமென்பதும், ஏனையோர் இத்தகைய நூல்கள் வெளிவருவதற்கும் பரவுவதற்கும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்பத் துணையாக நிற்கவேண்டுமென்பதுமேயாம். நாம் உலகநிலையில் முன்னேறுவதற்காகச் செலுத்த

வேண்டிய பல கடமைகளுள், மொழிகுறித்துச் செலுத்தவேண்டியவற்றுள், மேற்குறித்தவைகளே முதன்மையானவைகளாகும்.

இத்தகைய தொண்டுகளை நாம் ஒவ்வொருவரும் தனித் தனியாகச் செய்வதிலும், சேர்ந்துசெய்வதே சிறப்பும் பயனுமா மென்பதை நன்குணர்ந்து, நம்மையெல்லாம் ஒருசேரக்கூட்டி ஒருவருளத்தை ஒருவரறிந்து சீரிய தொண்டாற்றும் வண்ணம் செய்தற்கென வமைந்ததே நமது தமிழ்ப் பொழிலாகும். ஆகவே, தாளுண்ட நீரைத் தலையாற் றருந்தன்மைத்தாய நம்பொழியின் தண்ணிழலமர்ந்து தமிழன்பர்களனைவரும் தந்ததமிழ்ப் பணியாற்றித் தமிழகத்தைத் தன் பழம்பெரும் நிலைக்குக் கொண்டுவர முயலுமாறு இறைவன் றிருவருளை வழுத்து கின்றோம்.

நீ. க.

உ

மழவர் வரலாறு.

(முற்றொடர்ச்சி.)

திருவாளர், தமிழ்ப்பண்டிதர், T. V. சதாசிவப் பண்டாரத் தாரவர்கள், கும்பகோணம்.

இனி, அக்காலத்தே அறிவர், தாபதர், பரத்தையர் என்போரும் சிறப்புற்று விளங்கினவராவர். அவர்களுள் அறிவர் எனப்படுவார் முக்காலங்களுமுணர்ந்து எல்லாவுயிரிடத்தும் செந்தண்மைபூண்டு பேரறிஞராய் நிலவிய நிறைமொழிமாந்தர். அறிவரே அந்தணரென்று கூறப்பெற்றோர். அவர் ஆணையிற் கூறியனவெல்லாம் மறையெனவும் மந்திரமெனவும் சொல்லப்படும். தாபதர் என்போர் தவவேடமுடையராய் விரதவொழுக்கம் மேற்கொண்டவராவர். பார்ப்பாருள் அறிவரும் தாபதரும்

ஆயினர் உளர். ஆனல் அறிவரெல்லோரும் பார்ப்பாரல்லர்; அன்றியும் தாபதரெல்லோரும் பார்ப்பாருமல்லர். எனவே, அறிவரும் தாபதரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவரல்லர். பரத்தையர் காதற்பரத்தையரும் காமக்கிழத்தியருமென இருவகைப்பிரிவினராய் வாழ்ந்த வரைவின்மகளிராவர்.

இதுகாறும் யாம் கூறிய வகுப்பினர்களே முன்னர் தமிழ் நாட்டில் வசித்த பழந்தமிழ்க் குடிகளாவார். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் ஆகிய நான்கு வகுப்பினரும் அகநகர்க்கண்ணும் ஐந்திணைமக்கள் குறிஞ்சி, முல்லை முதலிய நிலங்களிலுள்ள சிற்றூரின்கண்ணும் வசித்துவந்தனர். தொழிலாளரும் குற்றேவன்மாக்களும் புறநகர்க்கண் சேரிகளில் வசித்தனர். பரத்தையர் அகநகரில் வாழ்ந்துவந்தனர். அறிவரும் தாபதரும் யாண்டும் வசித்தற்குரியர். ஆனல் வடுகர் முதலான தமிழரல்லாத பிறசாதியினரும் தமிழகத்தில் தற்காலத்தில் வாழ்ந்துவரினும், இன்னோர் பழந்தமிழ்மக்களல்லராதலின் இவர்களைப் பற்றிய ஆராய்ச்சி ஈண்டைக் கேற்புடைத்தன்றென்க.

இனித் தொல்காப்பியத்திற் கூறப்பெற்றுள்ள பல்வகைக் கூட்டத்தினருள் 'மழவர்' என்பார் கூறப்படவில்லை. எனவே அன்னவர் மேற்குறித்துள்ள பிரிவினருள் அடங்கியுள்ளவராதல் வேண்டும். இன்றேல், பிறநாட்டினின்றும் போந்து தமிழகத்தில் குடியேறியுள்ள வேறுதேயமக்களாதல் வேண்டும். ஈண்டு இதனையாராய்ந்து உண்மைகாண்பாம்.

சாதிப்பெயர், இடம்பற்றியும் தொழில்பற்றியும் உண்டாகுமென்பது ஆசிரியர் தொல்காப்பியனாரது கருத்தாகும். எனவே, சேரநாட்டில் வசிப்போர் எல்லோரும் சேரரும், பாண்டிநாட்டில் வசிப்போர் எல்லோரும் பாண்டியரும், சோழநாட்டில் வசிப்போர் எல்லோரும் சோழரும் ஆதல்வேண்டும். ஆயின், பண்டைநூற்களிலும் கல்வெட்டுக்களிலும் பயின்றுள்ள சேரர் பாண்டியர் சோழர் என்ற இடத்தாற்போந்த குடிப்பெயர்கள்

அந்நாடுகளில் தொன்றுதொட்டு ஆட்சிபுரிந்துவந்த அரசர் குலத்தினரைக் குறிக்கின்றனவேயெனின், கூறுவாம்: ஒரு நாட்டில் வசிப்போர் பல்வகைக் குலத்தினராயினும், அந்நாட்டின் அடியாகத்தோன்றிய குலப்பெயர்கள் அந்நாட்டில் தொன்றுதொட்டு அரசுரிமை யெய்தியுள்ளார்க்கே யுரியதாகும். பிறகுலத்தின ரிருப்ப, சேரர், பாண்டியர், சோழர் முதலிய நாட்டடியாகப் போந்த குலப்பெயர்கள் அந்நாடுகளிலுள்ள அரசர் குலத்தினரையே அவ்வாறு குறிப்பது சிறப்புப்பற்றியே யாமெனவுங் கொள்க.

இனி, அந்நாடுகளில் வசிக்கும் பார்ப்பார், வணிகர், வேளாளர் முதலிய பிறகுலத்தினரைக் குறிக்குங்கால் அந்நாடுகளின் அடியாக மருவிப்போந்த பெயரோடு அன்னோரது குலப்பெயரையும் இணைத்துக்கூறுதல் வழக்காருக வுள்ளதென்பதை யாவரும் அறிவர். உதாரணமாக, சோழநாட்டில் வசிக்கும் பார்ப்பார் வணிகர் வேளாளர் என்ற இன்னோர் சோழியப்பார்ப்பார், சோழியச்செட்டி, சோழியவேளாளர் என்றழைக்கப் பெறுதல்காண்க. இதுகாறும் கூறியவாற்றால் நாட்டின் அடியாகத்தோன்றிய குலப்பெயர் தனித்து வழங்கிவரின் அஃது அந்நாட்டின் அரசர் குலத்தினரையே குறிக்குமென்பது மிகத் தெளிவாய் விளங்குகின்றது. இது நூல்வழக்கானும் உலகவழக்கானும் ஒருங்கே உறுதியெய்துதல் காண்க.

இத்துணையும் கூறியவாற்றால், நாம் அறிந்துகொள்ளுமாறு முயன்ற 'மழவர்' என்பார் மழநாட்டில் வசித்தோர் ஆதல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. நாட்டினடியாகப் போந்த 'மழவர்' என்ற குடிப்பெயர் பிறகுலப்பெயரோடு இணைத்துவழங்கப்பெருது தனித்து வழங்கிவருதலைச் சங்க நூல்களில் காண்கின்ருேமாகலின் இன்னோர் (மழவர்) அந்நாட்டில் அரசுபுரிந்துவந்த அரசர் குலத்தினராதல் தெள்ளிது. இதனல் மழநாட்டிலுள்ள அரசர்குலத்தினரே சங்கத்துச் சான்ருேர்களால் 'மழவர்' என்று வழங்கப்பெற்றுள்ளனரென்பது இனிதுணரப்படுகின்றது. இன்னோர், மழ நாட்டினடியாகத்

தோன்றிய 'மழவர்' என்ற குடிப்பெயரையே தமக்குரிய குலப் பெயராகக் கொண்டுள்ளமையால் இவர்களது தாய்நாடு மழநாடாகுமென்பது நன்கறியப்படும். இம்மழநாடு 'மழபுலம்'(5) என்றும் அழைக்கப்பெறும்.

இனி, இம்மழநாடு யாண்டுள்ளதென்பதை யாராய்வாம். இது தமிழ்மொழிக்கே சிறப்பெழுத்தாயுள்ள 'ழ'கரம் பயின்றுள்ள பெயருடையதாயிருக்கின்றது. ஆதலால், இது நம் தமிழகத்தில் அடங்கியுள்ளதொரு நாடாதல்வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியனாரானும் பவணந்தியாரானும் கூறப்பெற்ற செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ள பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளுள்(6)மழநாட்டின்பெயரைத் தொல்காப்பியத்திற்குரைகண்ட பெரியாருள் எவருங் கூறக்கண்டிலம். உரையாசிரியர்களால் கூறப்பெறாத பலநாடுகள் நம்தமிழகத்தில் உளவென்பது, தொண்டை நாடு, கொங்குநாடு, திருமுனைப்பாடிநாடு முதலியவற்றால் தெளியப்படும். அங்ஙனம், உரையாசிரியர்களால் விதந்தோதப்படாத பலநாடுகளுள் மழநாடும் ஒன்றாயிருத்தல்வேண்டும். அன்றியும், தமிழகம் சேரநாடு, பாண்டிநாடு, சோழநாடு என்ற மூன்று பெரும்பிரிவுகளை யுடையதாயிருந்ததென்பது

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"(7)

---

5. கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்,—(அகம். 61.)
அகநானூற்றின் முற்பகுதியிலுள்ள சிலபாடல்களுக்குக்குறிப்புரை எழுதியுள்ள பண்டையாசிரியர் 'மழபுலம்' என்பதற்கு மழநாடு என்று பொருள் எழுதியுள்ளார்.

6. கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டாவன:—தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனாடு.

7. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் சூத்திரம்—1.

என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தால் நன்கறியக் கிடக்கின்றது. இம்மூன்று பெரும்பிரிவுகளும் பல உள்நாடுகளையுடையனவா யிருந்தனவென்பது பழைய தமிழ் நூற்களையும் கல்வெட்டுக்களையும் ஆராய்வார்க்கு இனிது புலப்படும்.(8) ஆகவே, இம்மூன்று பெரும்பிரிவுகளுள் அடங்கியுள்ள பலஉள் நாடுகளில் மழநாடும் ஒன்றாயிருத்தல்வேண்டும்.

தாயவன் யாவுக்குந் தாள்சடை மேற்றனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனன் மங்கலக்கோ
னுபவ னுயை னென்னை புவந்தாண் டருளினனே.(9)

என்ற நம்பியாண்டார் நம்பிகளது திருவாக்கினாலும் உறுதி யெய்துகின்றது. இதற்கேற்ப ஆசிரியர் சேக்கிழார், திருஞானசம்பந்தநாயனர் புராணத்திலும் ஆனாயநாயனர் புராணத்திலும்

---

8. சோழநாட்டில் பல உண்ணாடுகள் உளவென்பதை அடியிற்குறித் துள்ளவற்றால் அறிக.

1. "அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட்டாதனூர்"

பெரியபுராணம். திருநாளைப்போவார்—1.

2. "தன்னும்பொன்னி நீர்நாட்டுமருகநாட்டுத் தஞ்சாவூர்"

பெ. பு. செருத்துணையார்—1.

3. "நீதிவழுவாநெறியினராய் நிலவுங்குடியானெடுநிலத்து
மீதுவிளங்குந் தொன்மையது மிழலைநாட்டுப் பெருமிழலை"

பெ. பு. பெருமிழலைக்குறும்பர்—1.

4. "செழுந்தளிரின் புடைமறைந்த பெடைகளிப்பத் தேமாவின்
கொழுந்துணர் கோதிக்கொண்டு குயினாடுகோனாடு"

பெ. பு. இடங்கழியார்—1.

9. திருத்தொண்டர் திருவந்தாதி—15.

முறையே கூறியுள்ள

அங்கணகன் றம்மருங்கி லங்கணர்தம் பதிபலவு மிறைஞ்சுபோற்றிச்
செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயன்மதுவாற்சேறு
மாறாப்
பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட கரைமிசைப்போய்ப்
புகலிவேந்தர்
நங்கள்பிரான் திருப்பாச்சி லாச்சிரா மம்பணிய நண்ணும்
போதில் (10)

மாடுவி ரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடுப ரப்பிய பண்ணைவ ரம்புசு ரும்பேற
ஈடுபெ ருக்கிய போர்களின் மேகமி ளைத்தேற
நீடுவ ளத்தது மேன்மழ நாடெனு நீர்நாடு. 11.

பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகண் மேலோடும்
வெங்கதிர் தங்கவி ளங்கிய மேன்மழ நன்னாடாம்
அங்கது மண்ணில ருங்கல மாகவ தற்கேயோர்
மங்கல மாயது மங்கல மாகிய வாழ்மூதூர். 12.

என்னும் பாடல்களால் சோழநாட்டின்கண் மழநாடென்றதோர் உண்மையுள்ளமை நன்கு தெளியப்பெறும். சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவராய ஆனாயநாயனார் அவதரித்த திருப்பதியாகிய திருமங்களமும் திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்ற திருப்பாச்சிலாச்சிரமும் இம் மழநாட்டின் கண் உள்ளமை மேலே காட்டியுள்ள பாடல்களால் இனி துணரப்படும். அன்றியும் அன்பிலாலந்துறை, திருமாந்துறை, திருப்பழுவூர், திருமழபாடி, திருவிசயமங்கை (13) முதலிய பாடல்பெற்ற திருப்பதிகள் இந்நாட்டின் கண்ணுள்ளனவேயாகும். ஆகவே,

11. 12. ஷை ஆனாயநாயனார் புராணம்—1, 7.

13. இத்திருப்பதி இப்போது "கோவிந்தபுத்தூர்" என்ற பெயருடன் கொள்ளிடத்தின் வடகரையில் திருப்புறம்பயத்திற்கு வடமேற்கில் இரண்டுமைல் தூரத்தில் இருக்கிறது.

10. பெரியபுராணம்—திருஞானசம்பந்தநாயனார் புராணம்—310.

இம்மழநாடு கொள்ளிடத்தின் வடகரையைச் சார்ந்ததாய், ஐயன்வாய்க்கால் பெருவளவாய்க்கால் முதலிய கால்வாய்களாற் பாயப்பெற்றுத் திருச்சிராப்பள்ளி சில்லாவில் கிழமேல் பலகாத தூரம் நீண்டு கிடந்ததொரு நாடாதல்வேண்டும். இஃது ஆசிரியர் சேக்கிழார்காலத்தில் சோழநாட்டின் உள்நாடுகளில் ஒன்றாக விருந்ததென்பதை அப்பெரியாரது செந்தமிழ்ப் பாடல்கள் கொண்டு இனிதுவிளக்கினேம். ஆனால், சங்கத்துச்சான்றோர்கள் இயற்றியுள்ள தொகைநூல்களில் காணப்பெறும் பாடல்களால் (14) இந்நாடு சேரநாட்டின் ஒரு பகுதியையும் கடைச்சங்க நாளில் தன்னகத்து அடக்கிக்கொண்டிருந்தமை நன்குபெறப் படுகின்றது. ஆகவே, மழநாடு சேரநாட்டின் கீழ்ப்பகுதியையும் சோழநாட்டின் மேற்பகுதியையும் தன்பால் அடக்கிக் கொண்டு, பண்டைக்காலத்தில் ஒரு பெரிய நாடாகவே இருந்துள்ளது. இதனால் இந்நாட்டில் வசித்துவந்த மழவர்குடியினர் தமிழகத்தின் பழைய மக்களேயன்றி இடைக்கண் இங்குக்குடியேறியவரல்ல ரென்பது நன்கு விளங்குதல் காண்க.

தற்காலத்தே நமது இந்தியப்படைஞரில் சீக்கியரும் கூர்க்கரும் சிறந்த வீரராயிருத்தல்போல இம்மழவர் குடியினர் பண்டைக்காலத்திய போர்வீரர்களில் சிறந்து விளங்கியவராவர். இன்னோர் இத்தகைய சிறந்த வீரராயிருந்தமையின் நெடுமுடிவேந்தர்

---

14. "மழவர்மெய்ம்மறை" என்று சேரரைப்புகழும் பதிற்றுப்பத்து அடிகளால் மழநாடு சேரநாட்டின் உட்பிரிவுகளிலும் ஒன்றாயிருந்ததென்பது புலனாகின்றது. மழவர்பெருமானாகிய அதிகமான்நெடுமானஞ்சியினது தலைநகராகிய தகடூரும் அவனது குதிரைமலையும் அக்குடியிற்றோன்றிய குறுநிலமன்னனாகிய வல்வில்லோரியினது கொல்லிக்கூற்றமும் சேரநாட்டின் கீழ்ப்பகுதியி லுள்ளமை எமது கொள்கையையே வலியுறுத்துகின்றது. அன்றியும், "பூவிரியும் பொழிற்சோலைக்காவிரியைக் கடந்திட்டழ கமைந்த வார்சிலையின் மழகொங்கமடிப்படுத்தும்" என்ற வேள்விக்குடிச் செப்பேட்டிற்கண்ட அடிகளால் கொங்குநாட்டின் ஒரு பகுதியும் மழவர்க்குரித்தா யிருந்ததென்பது வெளியாகின்றது.

களாய சேர பாண்டிய சோழர் இவர்களைப் போர்த்துணைகொண்டிருந்தனர். "குவியற்கண்ணி மழவர் மெய்ம்மறை" (15) "வானூன் வல்சி மழவர் மெய்ம்மறை" (16) எனவரும் பதிற்றுப்பத்தால் இமய வரம்பன்றம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் (17) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் (18) மழவர்களைப் படைத்துணைகொண்ட செய்தி நன்கறியப்பெறும்.

இனி இவர்களுள் பெரும்பகுதியார் குதிரைப்படைஞராகவும் யானைவீரராகவும் இருந்துள்ளனரென்பது "உருவக் குதிரை மழவரோட்டிய" (19) எனவும், மைபடு நெடுந்தோண் மழவரோட்டி-யிடைப்புலத் தொழிந்த வேந்துகோட்டியானை" (20) எனவும் போதரும் சங்கத்துச் சான்றோர் பாடல்களால் இனிது புலப்படும். அன்றியும் இன்னோர் சிறந்த வில்லாளிகளாகவும் இருந்திருத்தல் வேண்டுமென்பது "ஒண்சிலைமழவர்" (21) கல்லா மழவர் வில்லிடந் தழீஇ" (22) என்பவற்றால் அறியப்பெறும். இனி "மழவர் முழவின் நோன்றலை கடுப்பப்-பிடகைப் பெய்த கமழ்நறும்பூவினர்" (23) என்ற மதுரைக் காஞ்சியடிகள் இன்னோர் ஒரு வகைப் போர்ப்பறைக் கொட்டிச்செல்லும் வழக்கமுடையவரென்பதைத் தெரிவிக்கின்றன. இவர்கள் ஆற்

---

15. பதிற்றுப்பத்து—21.
16. பதிற்றுப்பத்து—55.
17. பதிற்றுப்பத்துள் பாலைக்கௌதமனாரால் பாடப்பெற்ற மூன்றும் பத்தைக்கொண்டோன் இம்மன்னனேயாவன்.
18. பதிற்றுப்பத்துள் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய ஆறும் பத்திற்குத் தலைவன் இவன்.
19. அகநானூறு பாடல்—1.
20. மதுரைக்காஞ்சி அடிகள் 687—688.
21. அகநானூறு—119.
22. ,, 127. 'கல்லாமழவர்' என்றது போர்த்தொழிலன்றி வேறுதொழில் கல்லாமையை யுணர்த்திற்றுஎன்பது பழைய உரை.
23. மதுரைக்காஞ்சி—396—397.

பூந்தொடை விழவு (24) மிகச்சிறப்புடையதென்பது 187-ஆம் அகப்பாட்டால் தெரிகின்றது. இனிப் "பூந்தலைம்மழவர்" 25 என்னும் மதுரைக் காஞ்சியானும் "குவியற்கண்ணிமழவர்" (26) என்னும் பதிற்றுப்பத்தானும் இவர்கள் தங்கட்கு அடையாளமாகப் போர்ப்பூவும், தார்ப்பூவும் சூடிக்கொளளுதல் பெறப்படுகின்றது. "தகர்மருப் பேய்ப்பச் சுற்றுபுசுரிந்த-சுவன் மாய்ப் பித்தைச் செங்கண்மழவர்" 27 என்று இன்னோரது தலைமயிர் சிறப்பிக்கப்பெற்றுள்ளது. உண்ணற்குரிய உணவுகளாக இவர்கள் கைக்கொண்டவை உருசியுள்ள தினபண்டங்களும்வீரர் கட்குரிய வேறுவித உணவுமேயாமென்பது "தீம்புழல் வல்சிக் கழறகான் மறவர்" (28) "செவ்வூன்றோன்று வெண்டுவை முதிரை-வாலூண்வல்சி மழவர்" 29 என்பவற்றால் நன்குணரப் படுகின்றது.

இங்ஙனம் போர்வீரத்திற்கும் படைவண்மைக்கும் பேர் பெற்றவர்களாக விளங்கிய மழவர் மிகச்சிறப்புற்று உயர்நிலையிலிருந்தது மதுரைமா நகரின்கண் கடைச்சங்கம் நின்றுநிலவிய காலமேயாம். எனவே, இவர்கள் சிறந்துவாழ்ந்தமை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயாமெனக்கொள்க.

---

24. 'தெம்முனைச் சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் றலைநா ளன்ன
தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றம் (அகம்—187)

மழவர் செய்யும் பூந்தொடை விழாவை 'ஆயுதபூசை' என்று கூறியுள்ளனர் நற்றிணை உரையாசிரியராகிய காலஞ்சென்ற பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் அவர்கள்.

(நற்றிணை "பாடினோர் வரலாறு" பார்க்க.)

25. மதுரைக்காஞ்சி.

26. பதிற்றுப்பத்து—21.

27. அகநானூறு—பாடல் 101.

28. மதுரைக்காஞ்சி—395.

29. பதிற்றுப்பத்து—55.

கி. பி. ஆறும்நூற்றூண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பல்லவ வேந்தனும் முதல்மகேந்திரவர்மனது தந்தையுமாகிய சிம்ம விஷ்ணுவென்பான் தென்னுட்டின்மீது படையெடுத்துப் பாண்டியர், சோழர், கேரளர், மழவர் என்ற மன்னவர்களை வென்ருனென்று காசாக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. (30). இதனல் கி. பி ஆறும் நூற்றூண்டிலும் மழவர் குடியினர் சேரபாண்டிய சோழரோடு ஒருங்குவைத் தெண்ணப்படும் பெருமையுடையாராயிருந்தனரென்பது தெளிவாகின்றது. கி. பி. எட்டாம் நூற்றூண்டினிடையில் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்தவனும் அரிகேசரி பராங்குசன் மாறவர்மன் என்று செப்பேடுகளில் குறிக்கப்பெற்றவனுமாகிய முதல் இராச சிம்ம பாண்டியன் ஒரு மழவ அரசனது புதல்வியை மணந்துகொண்ட செய்தி வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது. (31.)

அன்றியும், திருவிசைப்பாவிலுள்ள பதிகங்களுள் ஒன்றைத் திருவாய் மலர்ந்தருளிய முதற்கண்டாதித்த சோழதேவர் மழவர் குடியிற்றேன்றிய ஒரு பெண்மணியைத் திருமணஞ்செய்து கொண்டாரென்பது கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. (32) இன்னேர்க்குப் பிறந்த அருமைப் புதல்வனே உத்தமச் சோழனென்று புகழப்பெறும் மதுராந்தகச் சோழனென்பான். (33) இம்மன்னன் இராச ராசசோழனது ஆட்சியின் முற்பகுதியில் அவனேடு சேர்ந்து சோழநாட்டை ஆட்சிபுரிந்தவன். இவற்றால், ஏழு, எட்டு, பத்து, பதினேராம் நூற்றூண்டுகளிலும்

30. The Pallavas by G. Jouveair Dubrevil p. p. 36.

31. செந்தமிழ்த்தொகுதி 20, பகுதி 5.

32. South Indian Inscriptions Vol. II Part III p. p. 375.

33. தஞ்சை சில்லாவிலுள்ள கோனேரிராசபுரத்துக் கோயிலில் முதற் கண்டராதித்த சோழதேவர், மழவர்குலவிளக்காகிய செம்பியன் மாதேவியார் உத்தமச்சோழன் என்ற மூவரது படிமங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

(Historical Sketches of Ancient Deccan Vol. I, P. P. 233.)

மழவர் குடியினர் சிறந்துவாழ்ந்தமை நன்கு பெறப்படும். இக்காலத்தே இவர்கள் சோழர்கட்கு அடங்கிய குறுநிலமன்னராகவும் அன்னோர்க்குப் படைத்தலைவராகவும் மந்திராலோசனை சபையின் அங்கத்தினராகவும் இருந்துள்ளனர். (34.)

ஆகவே, நெடுமுடிவேந்தராகிய சேரபாண்டிய சோழரது நிலைகுலைய, பிறர் இத்தமிழகத்தைக் கைப்பற்றிய நாட்களில்தான் மழவரும் தங்கள் பண்டைப் பெருமையிற் சுருங்கித் தாழ்ந்த நிலையை யெய்தத் தலைப்பட்டனர். இனி, இம்மழவரது வழித்தோன்றல்களாகத் தற்காலத்தே யுள்ளவர் யாவரென்பதை ஆராய்வாம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

நத்தம்போற்கேடு என்னுங் குறளுரை.

திருவாளர் T. N. அப்பனையங்கார் அவர்கள், பண்டிதர், மதுரை.

தமிழ்ப் பொழிலின் மாசி-பங்குனிப் பகுதியில், திருவாளர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 'ஒரு குறட்பா' என்னுந் தலைப்பெயரிட்டு எழுதியுள்ள பொருளுரையைக் கண்டு மகிழ்வுற்றேன். ஆயினும் ஊன்றி நோக்குங்கால் அதனிடைச் சிறிது பொருந்தாமை காணுதலின் அதனைக் களைந்துகொள்ளற்கு இஃதீண்டு எழுதப் பெறுகின்றது.

---

34. அதிகாரி க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுப் பனையூர்நாட்டு செயங்கொண்ட சோழநல்லூருடையான் உதையதிவாகரன் கூத்தாடுவானை வீரராசேந்திரமழவராயர் உடன்கூட்டத்து அதிகாரிகளுள் ஒருவரென்பது கல்வெட்டுக்களில்கண்ட செய்தியாகும். (South Indian Inscriptions Vol...)

"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்-வித்தகர்க் கல்லா லரிது" என்பது திருக்குறள். அதற்கு ஆசிரியர் பரிமேலழகர், "புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடும், புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும் சதுரப்பாடுடையார்க் கல்லது இல்லை" என உரைகூறிப் போந்தனர். மணக்குடவர், "ஆக்கம்போலக் கேடும் உளதாளுற் போலச் சாதலும் வல்லவற்கல்லது அரிது" எனப் பொருளெழுதியுள்ளார். இவ்விருவருரையும் ஒரே கருத்துடையன என்றல் எவ்வாறு பொருந்து மென்பது விளங்கவில்லை.

பரிமேலழகருரையில், ஆக்கமாகுங்கேடு-புகழுடம்பு செல்வமெய்த்தப் பூதவுடம்பு நல்கூர்தல் என்றும், உளதாகுஞ் சாக்காடு-புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல் என்றும் விவரணமுரைக்கப்பட்டிருக்கிறது. மணக்குடவருரையினுள் இக்கருத்துச் சிறிதேனும் வெளிப்படுமாறில்லை. 'ஆக்கம்போலக் கேடு' 'உளதாளுற் போலச் சாதல்' என்பன தெளிவாய்ப் பொருளுணரக் கிடப்பனவாமோ ?

'ஆக்கம் போலக்கேடு' என்றதனை ஆக்கம்போலத் தோன்றும் கேடு என்று இன்னணம் ஒருவகையான் விரித்துரைக்கலாகும். எனினும் அதனை 'வல்லவற் கல்லது அரிது' என்னுஞ் சொற்றொடரோடு கூட்டிப் பொருள்காணுமிடத்து, அது மிகவும் பொருத்தமிலதாய் ஒழிகின்றது. எங்ஙனமெனில், தோற்ற மாத்திரையின் ஆக்கம்போற் காட்டி உண்மையிற் கேடாகவே முடிவதொன்றை யடைதல் வல்லாற்கே எளிதாவதன்றி மற்றெல்லார்க்கும். அரிதாம் என்பதே அதனுற் போந்த பொருளாகவேண்டும். ஆகவே அது பரிமேலழகருரையுடன் முழுதும் முரணுவதல்லது பிறிதில்லை. 'உளதாளுற் போலச் சாதல்' என்றதனையும் இவ்வாறே விரித்துரைத்துப் பொருந்தாமை கண்டுகொள்க.

இனி ஆக்கம்போலக்கேடு என்றதனை முன்பின்னுக மாறிக் கேடுபோற் றேன்றும் ஆக்கம் எனப்பொருள் கொள்வோ

மெனின், அங்ஙனமாய குறிப்பொன்றும் அவ்வுரையிற் காண லாகாமையானும், ' உளதானற்போலச் சாதல் ' எனக் கண்ணழிவு கூறியுள்ள முறை அதற்கிடந் தாராதாகலானும், தரினும் அது பெரிதும் இடர்ப்படுவதாகலானும் அது சிறந்த பொருளன்றென மறுக்கற்பாற்று. அன்றியும், அது சிறப்புடையதாயின், மணக் குடவருக்குக் காலத்தினற் பிற்பட்ட பரிமேலழகர் தாமும் அவ் வாறு உரைசெய்தலைத் தவிர்ந்து, போலென்பதை உரையசை யாகக் கூறிவிடுத்த தென்னை ? ஆதலால் அதனை உவமச் சொல் லாகவே நிறுத்தி உண்மைப் பொருள் காணுதல் எளிதினியலா தென்பது தெளிவாயிற்றென்க.

இனி, ' பெயரறியப்படாத ஒருவரதுரையுடன் கூடிய திருக் குறட் பனையேட்டுச்சுவடி'யிற் கண்டபொருள் எத்தகைய தென் பதைச் சிறிது விசாரிப்போம். அதனைத் திருக்குறளின் நேரான பதவுரை யென்றுதல்அன்றிப் பொழிப்புரை யென்றுதல்கொள்ள இடமில்லை. மற்று அது ஏதோ ஒருவகையான கருத்தினைப் புலப்படுக்கின்ற ஒருபோலியுரையெனவே புறக்கணிக்கத்தக்கது. " சங்காயிரஞ் சூழவாழும் வலம்புரிபோலக் கிளையானது தன்னைச் சூழவாழ்வது கீர்த்திமானுக்குக் கைவரும் " என்னும் உரை " நத்தம் போற் கேடு முளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா வரிது " என்னுங் குறளோடு எவ்வளவாக இயைபுடைய தென்பதை அறிஞர்கள் தாமே ஆராய்ந்து கொள்வாராக. திருக் குறளின் பெரும்பான்மையான சொற்களுக்கு அவ்வுரையிற் பொருள் காணுமாறில்லை. அன்றி ' நத்தம்போற்கேடு ' என்னு மளவிற்கேனும் அதில் நேரிதான உரையுண்டோ வென்னில் அதுவுமின்று. ஆகவும், அதில் " நத்தமென்பதற்கு வலம்புரி யெனப் பொருள் கொள்ளப்பட்டிருப்பது வெளியாகிறது " என எளிதாகக் கூறிவிடுதல் எவ்வாறு ஏற்கும் ? ' போல் ' என் பதை அடுத்துள்ளதனல் அஃதறியப்படுமேயெனின், அதனை யடுத்துள்ள கேடென்னுஞ் சொல்லுக்குக் ' கிளை ' யெனப் பொருள் கொள்ளப் பட்டதென்றலும் பொருந்திற்றாகல் வேண் டும். அன்றியும் அதில் ' சாக்காடு ' என்பதற்குச் ' சூழவாழ்தல் '

எனப்பொருள் கொள்ளப்பட்ட தென்றலும் குற்றமாகாமை வேண்டும். ஆதலால் நத்தமென்னுஞ் சொற்பொருள் துணிதற்கு இவ்வுரையினையே போதிய சான்ருகக் கொள்ளுதல் இயலாதென்க.

இனி, "சங்குடைந்தனையவெண்டாமரைமலர்த்தடங்கள் போலும்-நங்குடி" என்னுஞ் சிந்தாமணியுரையில், ஆசிரியர் நச்சினர்க்கினியர் 'நத்தம்' என்பதற்குச் 'சங்கு' எனப் பொருள் கொண்டுள்ளாரென்ற சொல்வதை எடுத்துக்கொள்வோம். "தடங்களிலே உடைந்த தன்மைபவாகிய மலரும் சங்கும் போலும் நங்குடி. இது தூய்மைக்கு உவமை. இனி, சங்கு கெட்டாலும் நிறங்கெடாததுபோலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியுமாம். 'நத்தம்போற்கேடும்' என்ப" என்பதே அவ்வுரைக் குறிப்பாகும். அஃதீண்டுச் சிறிது விளங்க வுரைக்கத்தக்கது.

சங்கும் வெண்டாமரை மலருமாகிய இரண்டுவமைகள் ஆண்டுப் பயின்று வருகின்றன. அவை இரண்டும் குடியின் தூய்மையை விளக்குவன என்பது முதலுரையின்கருத்து. அவற்றைத் தனித்தனி பிரித்துத் 'தூய்மை'க்கு மலரும் 'கெட்டாலுந் தன் தன்மை கெடாமை'க்குச் சங்கும் உவமைகளாக எடுத்தாளப் பட்டன என்பது இரண்டாவது உரையின் குறிப்பு. இரண்டுரையிலும் 'உடைந்தனைய' என்பது மலருக்கு அடை. அலர்ந்த தன்மையவாகிய என்பது அதன் பொருள். இதனல் நச்சினர்க்கினியர் அனைய என்பதை உவமச் சொல்லாகக் கொள்ளவில்லையென்பது தேற்றம்.

அங்ஙனமாகவும், "பிற்பொருளில் சங்கு உடைந்தனைய குடியென இயையும்" என்றல் அவருரைக்கு மாறுகொளக் கூறலாம். அன்றியும் சங்கு உடைந்தகாலத்தும் நிறம்வேறுபடாதது போலுந் தன்மையை யுடைய குடியென அதற்குப்பொருள் கொள்ளுமிடத்து, உடைந்தகாலத்து நிறம் வேறுபடாமை மற்றெல்லாப் பொருள்களிடத்தும் உளதாயிருப்பவும் அதற்குச் சங்கினையே எடுத்துக் காட்டுதல் ஏற்புடையதன்ரும்.

மற்று நச்சினார்க்கினியர் கருத்தின்படி பிற்பொருளினும் 'சங்குபோலுங்குடி' எனவே இயைத்துப் பொருள் காணுதல் அமையும். அதன் பொதுத்தன்மைமட்டில் இங்கு வேறுவகையாக விரித்துரைக்கத்தக்கது. "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்பவாகலின் கேட்டினும் நிறங்கெடாத அதனியல்பு நன்கு பெறப்படுமென்க. சங்கிற்குக் கேடாவது தீயினுற் சுடப்படுதல். நெருப்பினுட் பட்டவாறே பிறபொருள்கள் நிறமிழப்பனவாகவும், சங்கு தன் வெண்மையிற்குன்ருது விளக்கமுற்றிருக்கும். அதுபோலக் கேடுற்றவிடத்தும் தன் தன்மையிற் குன்ருத குடி என அதன் பெருமைதோன்றக் கூறியதாகப் பொருள்முடிவு கண்டுகொள்க.

'சங்குடைந்தனையகுடி' எனப் பிறவாறியைத்துப் பொருள் கொள்ளுமுறையில், உடைதலென்பதற்குத் தீயினுற் சுடப்படுதலென உரைகூறுவது மிக இடர்ப்பாடுடைத்து. அது நிற்க.

"நத்தம்போற்கேடும் என்ப" என நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டியிருப்பதன் கருத்தும் சிறிது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. அக்கருத்து நன்கு விளங்காத நிலையில், அவர் நத்தமென்பதற்குச் சங்கெனப் பொருள்கொண்டாரென ஒருதலை துணிதலும் ஒவ்வாமையுடைத்தென்க.

'நத்தம்போற் கேடு' என்பதற்குப் பரிமேலழகருரையைத் தழுவியே, நச்சினார்க்கினியரும் 'ஆக்கமாகுங்கேடு' எனப் பொருள்கருதியுள்ளா ரென்றலும் ஆண்டைக் கேற்புடையதாகின்றது. ("சங்குகெட்டாலும் நிறங்கெடாததுபோல) கெட்டாலுந் தன்தன்மை கெடாதகுடி" எனக் குடியின் பெருமையை மேலேகூறிப் போந்தவர், அப்பொருளை வலியுறுத்தற்கு, அங்ஙனம் வறுமையாற் கேடடைந்தகாலத்தும் தம்தன்மையிற்குன்ருது ஆக்கமுற்று விளங்குதல் புகழ்படவாழுங் குடிப்பிறந்தார்கண்ணே உளதாம் என்னுங்கருத்துள்ள "நத்தம்போற் கேடுமுளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லாலரிது" என்னும் திருக்குறளை முதற்குறிப்பினல் நினைப்பூட்டிச் சென்றனரெனக்கொள்

ளுதலில் யாதோரிழுக்குமின்று. அங்ஙனங் கொள்ளுங்கால், நத்தமென்னுஞ் சொல்லுக்கு ஆக்கமென்னும் பொருளினையே ஆசிரியர் நச்சினார்க்கினியரும் கருதினாராவர். ஆகவே அவர் அதற்குச் சங்கென்னும் பொருள்கொண்டாரென்பது ஐயமின்றித் தெளியப்படாதென்க.

இங்ஙனன்றி அவர்க்கதுவே கருத்தாகக்கொள்ளின், அவ்வுரை பரிமேலழகருரையோடொப்ப அத்துணைப்பெருமையுடையதென்று கூறஇயலாது. 'நத்தம் (ஆக்கம்) ஆகும்கேடு' 'உளதாகுஞ் சாக்காடு' என ஒன்றற்கொன்று முரணுடையவாய்த் தொடைபெற்றுள்ள சொற்களாகிய அவ்விரு தொடர்களுக்கும் ஒற்றுமைப்பட்ட பொருள்நயம் குன்றிச் செய்யுளின்பஞ் சிதைந்துவிடுவதுமல்லாமல், 'சங்குபோலுங்கேடு........வித்தகர்க்கல்லாலரிது' என்னும் அவ்வுரையுள் மிகநலிந்து பொருள் காணவேண்டியுமிருத்தலால் அது ஆசிரியர் கருத்தொடுபட்ட சிறந்த உரையாகக்கொள்ளற் கிடமின்று. ஆதலால் அதனை உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும் உடன்பட்டதெனக் கூறுதல் அத்துணைப் பொருத்தமுடையதன்றென்று தோன்றுகிறது. ஆயினும் அஃதறிஞர்களாலாராய்ந்து முடிவுரைக்கற்பாலது.

இதுகாறுங்கூறியவாற்றால், "நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது" என்னுந் திருக்குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகர்கண்ட உரையே அமைவுடையதாயிற்றென்பதும், மணக்குடவரும் பிறரும் உரைத்தன அதனோடு மாறுபட்டனவென்பதும், நத்தமென்னுஞ் சொல்லுக்குச் சங்கெனப்பொருளுரைத்தல் நச்சினார்க்கினியர் கருத்தன்றென்பதும், அங்ஙனமுரைக்குமுரையும் அத்துணைச் சிறப்பினதன்றென்பதும், பிறவும் ஒருவகையாக உணரலாவன.

உ

உலக வரலாறு.

(ஓர் ஆங்கில நூலிற்கண்படி.)

திருவாளர், ஔவை, சு. துரைசாமி பிள்ளையவர்கள்,
க. த. சங்கம்.

நம் கட்புலனும் இவ்வுலகின் தோற்றம், வடிவு முதலிய வற்றை ஆராய்ந்தறிந்த பேரறிவாளர்கள் மிகப்பலர் எனினும், அவருட்சிறந்துநின்றூர் கொண்டது உலகு ஒரு உருண்டை வடிவாயபொருள் என்பது. அது, வடிவில் உருண்டையெனினும், எண்ணரியபருமனும், ஒளிதெறிக்கும் இயல்பும் பொருந்தி, அளப்பரிய ஆகாயமென்னு மளக்கரில் மிதக்கும் பலவேறு வகைப்பட்ட பொருள்கள் செறிந்த ஒரு திப்பியப் பொருளாகும். இன்னும் அதனைக் கூர்ந்துநோக்கின், அது, ஒரு நாரத்தம் பழத்தையொத்து, மேலுங்கீழுந் தட்டையாய், இருமருங்கினும் அச்சுக்கள் நிறுத்த அவை உட்சென்று நடுவில் கூடுமென நினைத்தற்கு ஏதுவாய், அவ்வச்சின் வழியாகவே சுற்றுகிறது எனக் கருதுவதற்கும் இடனுயிருக்கிறது.

இவ்வாறு, இது சுற்றுவதனல், இதன் எப்பாகம் ஞாயிற் றின்முன் வருகிறதோ, அப்பாகம், அஞ்ஞாயிற்றின் ஒளி பெற்றுப் பகற்காலத்தைப் பெறுகிறது அக்காலை, மற்றைப் பாகத்திலிருள் பரவ இராக்காலம் நிகழும். நிற்க, இதுபெறும் ஒளிக்குக் காரணமாயது ஞாயிறு என்பதென்னையெனின், அது ஒரு ஒளிநிறைந்த அழற்பிழம்பு என்பர். அதனிடத்திலிருந்தே இவ்வுலகு தோன்றிற்றெனவும் கூறுவர். வேர்க்கடலை, மொச்சை முதலியவற்றைத் தீயிலிடுங்கால், அவை வெப்பத்தால் வெடிப்ப, அவற்றினின்றும் விதைகள் மிகுந்த விரைவுடன் வெளிக்கிளம்ப லொப்ப, அஞ்ஞாயிறென்னும் அழற்பிழம்பின்கண் வெடித்து விரைந்தெழுந்த பொருள்களுள் ஒன்று இது எனவும் கூறுவர். இன்னணம் ஞாயிற்றினின்றும் வெளிப்போந்த பொருளாம்

இப்பூமிக்கும் இஞ்ஞாயிற்றுக்கும் ஒரு கட்புலனாகாத் தொடர் புண்டு. அத்தொடர்பு ஒன்றையொன்றுபற்றியே நிற்கும். விளங்கக்கூறின், ஞாயிறு பூமியைத் தன்மாட்டிழுத்தலும், அப்பூமி அதனை யிழுத்தலுமாய தொடர்பு. இதனை வடமொழி யாளர் ஆகர்ஷண சக்தியென்பர். மேனாட்டார் Attraction of Gravitation (அட்ராக்ஷ னவ் கிராவிடேஷன்) என்பர். இத்தொடர்பு வயப்பட்ட இவ்வுலகம் தன்வலியிற் குன்றாதாய் நின்றவண்ணமே தன் முதற்பொருளைச் சுற்றிவரும். அச்சுற்றுக் களுள் ஒவ்வொன்றின் காலவளவும் ஓர்யாண்டு என்பர். அன்றியும், ஓர் யாண்டில் நிகழும் கார், கூதிர், முன்பனி, பின்பனி முதலாய பருவங்கள் தோன்றுதற்கும் அச்சுற்றே காரணமெனவும் கூறுவர்.

இக்கூறிய கொள்கையேபெரும்பாலார் கொண்டதெனினும், இதற்கு முரணுபினருமுளர். இதிற் சிறிது வழுவியாருமுளர் எனவுங்கொள்க. இவர்களுட் பண்டைய முனிவர்களும் ஒரு சாராராவர். இவர்க்குள், சிலர் இப்பூவுலகு ஒரு சமனனவெளி யென்றும், இதனைத் தாங்கும் பலதிண்ணிய தூண்கள் பல இதன்கீழே யுளவென்றுங் கூறுவர். சிலர் இதுவொரு பேராவின் முடியிலிருக்கிறதென்றும், வேறுசிலர், ஒரு அடல்மிக்கயாமை யாலிது சுமக்கப்பெறுகின்றதெனவுங்கூறுவர். இவர்கள் கூறிய தூண், அரா, யாமை முதலியன நின்று தாங்கற்கு உரிய இடம் என்னெனக் கடாயினர்க்கு விடையிறுத்தலாகாமையின், அவை கொள்ளற்பாலனவல்ல வென்க.

பிராமணர்கள், விண்ணுலகு மண்ணுலகைச்சார்ந்து மேனிற் கிறதெனவும், இவற்றினிடையில் நீரிடைத்தவழும் மீனினம் போல், ஞாயிறும் திங்களும் வானிடை மிதந்து கிழக்கு மேற்காகச்சென்று தத்தமக்குரிய காலத்திறுதியில் உலக விளிம்பை (Horizon) யடைந்து, முடிவில் தத்தம் முறைப்படித் தோன்றுமிடத்தையடையுமெனவும் கூறுவர்.

நிற்க, புராணிகர்கள், இப்பூமியொரு தட்டைச் சமவெளி யென்றும், இதனைச்சுற்றிப் பாற்கடலைத்தலைக்கொண்ட ஏழு வகைக்கடல்களும், அவற்றினிடையில், மேருமுதலாக எழுவகை மலைகளுமிருக்கின்றன வென்றுங் கூறலோடமையாது; சூரிய சந்திர கிரகணங்களாவன இராகுவென்னும் பேரரவு சிலகாலங் களிற்றோன்றி அவற்றுளொன்றை விழுங்குங் காலமே எனவுங் கூறுப.

அபுல்காசன்அலி யென்னும் பேரறிவாளரொருவர் தம் நாட்டு வல்லார் உரைகளைக் கற்றுத் தம் நுண்ணறிவிற்குத் தோன்றிய சிலவற்றைத் தாம் எழுதியுள்ள "பொன்னிலமும் மணிச்சுரங்கமும்" (Mourondge-ed-dharab, or The golden meadows, and the mines of precious stones) என்னும் உலக வரலாற்றுட் கூறுமாறு:—

> "இப்பூவுலகு ஒரு தனிப்பெரும் பறவையாகும். இதன் தலையே மெக்கா, மெதினு என்னும் நகரங்கள். பாரசீகமும் இந்தியாவும் அதன் வலச்சிறகாகவும், காக் (Gog) என்ற நாடு இடச்சிறகாகவும், ஆப்பிரிக்கா அதன் வாலாகவும் அமைந்துள்ளன. இன்றைப்போது நாம் வாழும் இப்பூவுலகின் முன்பு, வேறொரு உலகிருந்தது. அதுதோன்றி ஏழாயிரம் ஆண்டுகளே இருந்தது. அதனை இப்பூப்பறவையின் குஞ்செனினும்பொருந்தும். தோன்றியிருந்த அது, இடையில் நிகழ்ந்த வெள்ளம், நிலநடுக்கம் முதலாய இடையூறுகளால் இன்னல்வாய்ப் பட்டிறந்தொழிய இது தோன்றிற்று. இங்ஙனம், பூவுலகம் தோன்றியழிதல் இயற்கையே. அவற்றிற்குரிய காலம் எழுபதினுயிரம் ஹஸரோவம் ஆகும். ஒரு ஹஸரோவமென்பது பன்னீராயிர மாண்டுகளாம்........"

இக்காலக் குறிப்பும், வரையறையும் இவர் தம்மோடிருந்த பிராமண நண்பர்களொடு கலந்து செய்ததாதல் இந்நூலாற் றெரிகிறது.

இந்நூலாசிரியரைப்பற்றிய குறிப்புக்கள் :—இவரது தந்தை ஆல்கான் ; அவர் தந்தை அலியென்பார் ; அவர் தந்தை அப்தர் ரஹிமான் ; அவர் தந்தை அப்துல்லா ; அவர் தந்தை மசௌடல் அஹ்தலி. இவரை யாவரும் மசௌடி யெனவே யழைப்பர். பிறகு இவரது அறிவைக்குறித்து, இவர்க்குக் "குத்புடீன்" என்னும் பட்டமும் அக்காலத்தார் அளித்தனர். எனினும், இவர் அப்பட்டப் பெருமையையும் கருதாது லாஹேறப் அர்ரஸௌள் (பரம்பொருளின் தூதனுடைய தோழன்) என்னு மொருதாழ்வான (அக்காலத்தார் கருத்து) பட்டத்தையே யேற்றனர்.

நூற்குறிப்பு :—

இது உலகின்தோற்ற முதல் இந்நூல் எழுதியகாலம் வரையிற் கூறும்வரலாறாகும். இவரது காலம் மோதிபில்லாவின் கிலாபத் காலம். அதாவது ஹிஜிரா 336.

இதுகாறும் கூறிய கொள்கைகளும் இன்னோரன்னபிறவும் பூவுலகைப் பொருத்தமட்டில் மிகப்பல உண்டு. ஒவ்வொரு கொள்கைக்கும் அதனையாய்ந்தறிந்த பெரியோர்கள், அவ்வக் காலத்துக்கேற்பப் பலசில காரணங்களும், கரிகளும் காட்டியே நின்றனர்.

இனி, ஞாயிறு முதலிய வானுலகப் பொருள்களைப்பற்றி அவர்கள் நினைத்தவற்றைப் பார்ப்போம்.

ஞாயிற்றின் பிறப்பு முதலியவற்றைக் கூறவந்த பேரறிஞர்களும் பலரே. அவர்கள் ஒவ்வொருவரும் காட்டிய சான்றுகள், அவரொத்த அறிஞர்களை மயக்குந் தன்மையவாய் நிற்ப, அவரவர் தத்தம்மாலியன்றவளவு பிறப்புக்கூறினர். அங்ஙனங் கூறினர் தொகையைத்தூக்கி நோக்குங்கால், அவர்கள் மூன்று வகையுளடங்குவர். ஒருவகையார் மிகப் பண்டைக் காலத்து அறிஞர்களாவார். அவர்கள், ஞாயிறு ஒரு அளத் தற்கரிய அழலாழி (Wheel of fire) யென்பர் ; ஒரு சாரார், ஒரு பளிங்கொத்த வொளிதெறிக்கும் (Transparent)

கண்ணாடி அல்லது உருண்டைவடிவிற்றாய பளிங்கு என்றனர்; மூன்றாம் பிரிவினர், கல்லும் இரும்பும் கலந்து, பேரழல்வாய்ப் பட்டுருகி, ஒளிகாலும் தன்மைவாய்ந்த ஓர் அரும்பெரும் பொருள் என்பர். இவருட் டலையாயவர், அனக்ஸாகொரஸ் (Anaxagorus) என்பார். அன்றியும், இவர் விண்மீன்; திங்கள் முதலிய வானப்பொருள்களனைத்தும் மண்ணினின்றும் தெறித்தெழுந்த கற்களெனவும், அவை ஒவ்வொன்றிற்குமுள்ள வானிடைத்தொடர்பு (அல்லது தன்வயங்கோடல்) Attraction of gravity) வயப்பட்டு, விரைந்து சுற்றிச்செல்லும் இயல்புடைமையின் பயனாகத் தீக்கொண்டு ஒளியிடுகின்றனவென்றுங் கூறுவர்.

இவர் இத்தகைய ஆராய்ச்சிமுடிபை ரோம் (Rome) தேயத்துமக்களுக்கு வெளியிட்டகாலை, அவர்கள் இதனை யேற்றற்கு மறுத்ததோடமையாது, இவரையும் தம் நாட்டினின்றுந் துரத்திவிட்டாராதலின் இதனை நாம் நன்கு ஆய்தல் வேண்டிற்றில்லை. அன்றியும், பண்டைக்காலத்து ரோம்தேயத்து மக்கள் தமக்கு ஏற்காதகொள்கை, எண்ணம் முதலியவற்றை ஒருவர் வெளியிடுவரேல் அதனை மறுக்கும் வகையால் அவரை வெளிநாடுகளுக்குத் துரத்திவிடுதல் மரபெனவும் கொள்க.

நிற்க, வேறுசிலர், மண்ணினின்றும் அழற்பொருள்கள் பல மேலே கிளர்ந்துசென்று, நாளாவட்டத்தில் வானவெளியிற் பிரிந்து நிற்பத் தற்செயலாக அவை ஒன்றுகூடி ஒரு பேரழற் பிழம்பாயின; அப்பிழம்பே இஞ்ஞாயிறு; அப்பொருட்களுட் சில (அவையும் எண்ணிறந்தனவே) ஒன்றுகூடாது, தனித்தோ, தம்போன்ற சில கூடித் திரண்ட சிறு பிழம்புகளாகவோ விண்மீன்களெனத் திகழ்கின்றன; இவைகள், காலம் நீடித்த காலை, வேறு சில அழற்பொருள் தம்முழை வந்துசேர, ஒருங்கே ஒளிபெறுவதுமுண்டு என்று கூறுவர்.

சிலர், நம்கட்புலனும் ஞாயிற்றின்முன் வேறோர் ஞாயிறு இருந்ததென்வும், அது ஒரு காலத்துத் தன் ஒளிமுழுதும்

ஒழிந்துமறைய, ஒரு திங்கள்காறும் உலகம் ஒளியின்றியிருந்தது; அப்போழ்தே, இஞ்ஞாயிறு தோன்றிற்று எனவுங் கூறுவர். வேறுசிலர், ஞாயிறு என்பது ஓர்பெறலரும் சிருஞ்சிறப்புமமைந்து, பேரழகுவாய்ந்த பேரகமெனவும், அங்கு மக்கள் சென்று வாழ்தலுங்கூடு மென்றுங் கூறி, அப்பேரகத்தின்மீது ஒரு வகைத்தான ஒளி, வெப்பம், நீர் முதலியவும் வேறுபிறவும் கலந்த மேகபடலம் சூழவுளதென்றும், அப்படலத்தின் செயலே இப்பூவுலகுபெறும் ஞாயிற்றொளியெனவும் கூறுப. இவருட்டலையாயவர் ஹெர்ஸ்கேல் என்பவர்.

இம்முறையே, அவரவர் கூறியுள்ளவற்றைத் தேடிக்கொண்டே செல்வது விரிவுகாணுமாதலால், இதனை யிம்மட்டினிறுத்தி, இனி, இந்நிலம், ஞாயிறு, திங்கள் விண்மீன் முதலியவை தத்தம்நிலையிற்றரியாது கொட்புறும் தன்மையையும், விரைவையும் பற்றியெழுந்த பெரியோர்களின் பலவேறு வகைப்பட்ட மதங்களையும் கூறி முடிவில் நம்நாட்டின் வரலாற்றையும் நோக்குவோம்.

(தொடரும்).

உ

தஞ்சை யரசர்.

திருவாளர், குப்புசாமி ராசு அவர்கள், பள்ளியக்கிரகாரம்;
தஞ்சை.

தஞ்சை நாட்டின் அரசர்களைப்பற்றி ஆராயுங்கால், சரித்திர ஆராய்ச்சிக்கு உட்பட்டகாலத்தில் முதன்முதலில் இந்நாடு சோழரால் ஆளப்பட்டு வந்தது தெரிகிறது. இந்நாட்டின் பண்டைய வரலாற்றைப்பற்றி ஆராயுங்கால், சோழர்களுக்கு முன்பு முதன்முதலில் இந்நாட்டை ஆண்டுவந்தவர் நாகர் என்ற ஒரு மரபினர்.

நாகர். இந்நாகர் என்ற கூட்டத்தார் சுற்றுக்கொடியவர்களாயும் வேட்டையாடியே காலம் கழித்துக் கொண்டும் சிறிதும் நாகரீகமின்றியும் இருந்து வந்தவர்களாதல் தெரிகிறது. இவர்கள் நாகம், மரம் முதலியவற்றைத் தாங்கள் தொழும் கடவுளென மதித்து அவற்றிற்கு ஆடு, கோழி, முட்டை முதலியவற்றைக்கொண்டு பலியிட்டும் பூசைசெய்தும் வந்தார்களென்றும், இவர்கள் நாகத்தைத் தொழுது வந்தமையினல், இவர்களுக்குப் பின்வந்தவர்கள் இவர்களை நாகர் என்று பெயரிட்டழைத்தனரென்றும் சிலர் கூறுகின்றனர்.

சோழர் முதன்முதலில் நமது நாட்டிற் புகுந்தபொழுது அய்யனர், வேதர் என்ற இரண்டு நாகர் கூட்டத்தார் தஞ்சை நாட்டின் தெற்கில் ஆண்டுவந்தனர். அவர்களது ஆட்சி இப்பொழுது வழங்குகிற நாகப்பட்டினம் வரையிலும் பரவியிருந்தது. பிறகு அவர்கள் ஒரு காலத்தில் நாகப்பட்டினத்தைத் தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தனர். நாகர் இதனைத் தங்கள் முக்கியபட்டணமாகக் கொண்டமையால் இதற்கு நாகர்பட்டினம் எனப் பெயர் வழங்கிப் பின்பு உலகவழக்கத்தில் நாகபட்டினமென மாறினதாகச் சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

சோழர். வங்காள இராசதானியின் கீழ்ப்பாகத்தினின்று, பல கூட்டத்தினர் தங்கள் பிழைப்பை நாடி, கடலைக்கடந்து, பர்மா, சீனு, இலங்கை, தென்னிந்தியா முதலிய பற்பல விடங்களுக்குச் சென்றார்களென்றும், அவர்களெல்லாம் ஒரே மரபினரென்றும் சில அறிஞர் கூறுகின்றனர். தென்னிந்தியாவில் வந்து தங்கினவர்களில் ஒரு பிரிவு சோழர் என்பதும் அவர்களிற் பலர் தஞ்சை நாட்டில்தான் மிகுதியாய் வசித்து வந்தனரென்றும் தெரிகின்றன. இவர்கள் ஏறக்குறைய இரண்டாம் நூற்றாண்டு முதல் பதினூறுவது நூற்றாண்டு வரையில் சிறப்பொடு வாழ்ந்து வந்தனரென்றும் கூறுகின்றனர். இப்பொழுது திருச்சி நாட்டில் உறையூர் என வழங்கும் ஊரை, சோழர் முதன்முதலில் தங்கள் தலைநகராகக் கொண்டனர். அதற்குப் பின்பு உறையூரினும் பலவசதிகளமைந்து தஞ்சை நாட்டில் கடற்கரையோரத்திலுள்ள துறைமுகமாகிய காவிரிப்பூம் பட்டினத்தைத் தங்கள் தலைநகராக அமைத்துக்கொண்டனர். இது காவிரிநதியும் கடலும் ஒன்ருய்க் கலக்குமிடத்தி லிருக்கிறது. இக் காவிரிப்பூம்பட்டினத்தின் பண்டைய சீரும்சிறப்பும் "சிலப்பதிகாரம்", "பட்டினப்பாலை" முதலிய பழந்தமிழ் நூல்களைக்கற்றவர் உள்ளத்தே என்றும் நின்றுநிலவுவனவாகும். முன்பு அப்பட்டினம், பெருவளம்பெற்று, பல்வணிகத்திற்கிடமாகி, நீங்காத பெருஞ்செல்வம் எய்தி, புகழ் பல பரப்பித், தமிழ் மணங்கமழ்ந்து, நிலைபெற்றிருந்ததும், இப்பொழுது அது இருந்த இடம்கூடத்தெரியாமல், ஏறக்குறைய அதின் முழுபாகத்தையும் கடல் கொள்ளைகொண்டதும், மேற் கூறிய நூல்களைக் கற்றவர் மனத்தைப் பெரிதும் வருத்தாமற் போகா.

சோழர் ஆட்சிக்குட்பட்ட நாடெல்லாம் பெரிதும் நீர்வளமெய்தியிருந்தமையால், அவர்கள் தங்கள்நாட்டைப் பொதுவாகப் "புனல் நாடு" எனப்பெயரிட்டழைத்தனர். சோழர் ஆட்சி, கிழக்கே கடல்வரையிலும், தெற்கே வெள்ளாறுவரையிலும், மேற்கே கோட்டகிரி அதாவது தற்காலம் திருச்சி நாட்டில் கோட்டைக்கரை என்னும் ஊர்வரையிலும், வடக்கே பெண்ணையாறு வரையிலுஞ் சென்றிருந்ததெனப் பலரும் கூறுகின்றனர்.

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஏழ முதலா யிருபத்து நாற்காதஞ்
சோழநாட் டெல்லையெனச் சொல்"

என்ற ஔவையார் பாட்டாலும் சோழநாட்டெல்லை வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சோணாட்டின் தலைநகராகிய இக்காவிரிப்பூம்பட்டினம் அநேக கோட்டைகளையுடைய ஒரு பெரும் பட்டினமாகக் காவேரி நதிக்கரையின் வடபாகத்தில் "கரிகாலச்சோழன்" என்பவரால் அமைக்கப்பட்டது. இப்பட்டினம் துறைமுகமாயிருந்தமையால் "ரோம்" முதலிய பலஐரோப்பிய நாடுகளுடன் ஏற்றுமதி இறக்குமதி செய்துகொண்டு அப்பழங்காலத்துப் பட்டணங்கள் பலவற்றுள்ளும் பெருஞ்சிறப்புடையதாய்த் தமிழர் நாகரீகத்துக்கே தலையணியாகத் திகழ்ந்துவந்தது. இக்காவிரிப் பூம்பட்டினம் இருபிரிவாகப் பிரிக்கப்பெற்றுக், கடலோரத்திலிருந்த பிரிவிற்கு "மருவூர்ப்பாக்கம்" என்றும், மற்றதற்குப் பட்டினப்பாக்கம் என்றும் பெயர் வழங்கப்பெற்று வந்தது. இவை இரண்டிற்கும் இடையே இருந்த பாகத்தில் நெருங்க மரங்கள் வைத்து மிகவும் அழகாய் வளர்க்கப்பெற்று வந்தமையால், அவ்வழியே செல்வோர்க்குக் கடுவெயிலினும் சிறிதும் சூரியவெப்பம் தாக்குவதில்லை. பட்டினப்பாக்கத்தில் வணிகரும், அரசாங்கத்தில் உயர் நிலையிலுள்ளவர்களுமே வசித்துவந்தனர். மருவூர்ப்பாக்கத்தில் மற்றக்குடிகளும், ஐரோப்பிய வணிகரும் வசித்துவந்தனர். இவ்விருபாக்கத்திற்கும்இடையில்தான் சோழர் அரண்மனை அமைக்கப்பெற்றிருந்ததென்பதும், அவ்வரண்மனை போன்ற மற்றொன்று அக்காலத்தில் எந்நாட்டிலுமிருந்ததில்லையென்பதும் பண்டைய தமிழ் நூல்களால் அறியக்கிடக்கின்றன. சோழநாட்டிற்கு மேற்கிலும் தென்மேற்கிலும், இவர்கள் போன்ற "பாண்டியர்," "சேரர்," என்னும் இருவகுப்பார் ஆண்டுவந்தனர். சோழர்களுக்கு முதன்முதலில் அரசராக வந்தவர் "கரிகாலச்சோழன்" என்பவர்.

கரிகாலச்சோழர்.

நேர்நின்று வெல்லமுடியாத இவரது பகைவர் இவர் கால்கள் தீயினுல் கரியாகும் வண்ணம் சூழ்ச்சி செய்தமையால், இவர் கரிகாலன் எனப்பெயர் பெற்றனரென்று ஒரு சாரார் கூறுவர். இவர் காலத்தில் இவருக்கும், பாண்டியர், சேரர் முதலியவர்களுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தவண்ணமாயிருந்தது. ஒரு சமயத்தில் இவரை எதிர்த்துப்போர் புரிந்த பாண்டியர்சேரர் இருவரையும் இவர் **வெண்ணி**யென்றவிடத்தில் தோல்வியடைந்தோடும்படி செய்தார். அப்போரில் மிகவும் புண்பட்ட சேரன், தன்னாட்டிற்குத் தப்பியோட மனமில்லாது, தன்னுயிரைக் கரிகாலச்சோழனை எதிர்த்துப்போர்புரிந்து, முடிவில் போர்க்களத்திலேயே தன்னுயிரைவிட்டுத் தனது வீரத்தை நிலைநிறுத்தினன். கரிகாலச் சோழர் தம் காலத்திலேயே தம் நாட்டிற்கருகாமையிலிருந்த, "நாகர்" கூட்டத்தாரையும், அவர்கள்போன்ற "குறும்பர்" என்ற கூட்டத்தாரையும் வென்று அவர்களைத் தம்மாட்சிக் குட்படுத்திக் கொண்டார். இவர் தன்னாட்டில், பல பெருங்குளங்களையும், காவிரியினின்றும் பல கிளையாறுகளையும் வெட்டுவித்து, பயிர்த் தொழில், வணிகம் முதலியவற்றை மேம்படச்செய்தார். இக்கரிகாலச் சோழனுடைய மகளைச் சேரமன்னன் மணம்புரிந்த அன்றுமுதல், சோழ சேர பாண்டியர் மூவரும் சண்டையின்றி அமைதியாக வாழ்ந்துவந்தனர். இக்கரிகாலச் சோழர், கி. பி. 50 முதல் 90 வரையில் ஆட்சிபுரிந்தார் என்று ஒரு சாரார் கூறுவர். இவருக்குப் பின்பு இவரது மகன் "நலங்கிள்ளி", என்பவர் அரசரானர்.

நலங்கிள்ளி.

இவர் அஞ்சா வீரமும் பகைவரைவெல்லும் திடமும் கீழ்ப் படிதலில்லா ஆட்சியும், குடிகளிடத்துப் பேரன்பும் பூண்டவர். நலங்கிள்ளி பலதடவைகளில் பாண்டியர் சேரரோடு போர்புரிந்து

பெருங்கோட்டைகள் சூழ்ந்த பல நகரங்களைப் பாண்டி நாட்டினின்றும் கைப்பற்றியுள்ளார். இவர் சுமார் இருபதாண்டுகள் வரையில்தான் தஞ்சை நாட்டை ஆண்டுள்ளார். நலங்கிள்ளிக்குப் பின் அவர் மகன் "கிள்ளி வளவன்" என்பவர் அரசரானர்.

கிள்ளிவளவன்.

இவர் சில ஆண்டுகள் வரையில்தான் அரசு செலுத்தினார். இவர் சிறிதுகாலம்வரையில் பாண்டியர் சேரர்முதலியவர்களோடு அடிக்கடி போர்புரிந்து, அவர்கள் தலைநகரம்வரையிற் சென்று அவற்றில் சிலவற்றைத் தனது நாட்டுடன் சேர்த்துக்கொண்டார். இவர் தென்னாற்காடு சில்லாவிலுள்ள "மலாடு" என்ற நாட்டை ஆண்டுவந்த ஓர் மன்னனைப் போரில்வென்று அவனைக் கொன்று அவன் நாட்டையும் கைப்பற்றிக்கொண்டார். இவர் அக்காலத்து இலங்கை மன்னன் மகளை மணம்புரிந்துகொண்டார். இவருக்குப் பின் அரசராக வந்தவர் இவரது தம்பி "பெருநற்கிள்ளி" என்பவர்.

பெருநற்கிள்ளி.

இவர் சிறுது காலம்தான் ஆட்சிபுரிந்தார். இவர் காலத்தில் சிறப்பாகக்குறிக்கத்தக்கவைகள் ஒன்றும் நிகழ்ந்ததாகத்தோன்றவில்லை. ஆனல் இவர் இராசசூய யாகம் என்றதோர் பெரும் யாகத்தைச் செய்து முடித்தார் என்று சொல்லப்படுகிறது. பெருநற்கிள்ளிக்குப்பின் சோழநாட்டைக் "கோச்செங்கணன்," "கோக்கிள்ளி", என்ற இரண்டு சோழமன்னர் ஆண்டுவந்தனர்.

கோச்செங்கணன், கோக்கிள்ளி :— இவர்களில் கோச்செங்கணன் என்பவர் சிவபெருமானையும் திருமாலையும் வழிபட்டு அவ்விரண்டும் தோன்றபல ஆலயங்கள் அமைத்தார் என்பதும், கோக்கிள்ளி என்பவர் நாகர்கூட்டத்துள் ஒருபெண்ணை மணந்து அவள் வழித்தோன்றிய "தொண்டைமான் இளந்திரையன்". என்பவருக்குத் தென்னாற்காடு வடஆற்காடு, செங்கற்பட்டு முதலியபல ஊர்களைக்கொடுத்தாரென்பதும் அவற்றைத் தொண்டை

மான் இளந்திரையன் ஆட்சிபுரிந்ததினால் அவற்றிற்குத் "தொண்டைமண்டலம்" எனப்பெயர்வழங்கலாயிற்றெனவும் தெரிகின்றன. கோச்செங்கட்சோழனுக்குப்பின் சோழநாட்டை "பல்லவர்கள்" கைப்பற்றிக்கொண்டனர்.

அதற்குப்பின் எட்டாம் நூற்றாண்டு வரையிலும் சோழநாட்டை ஆண்டுவந்த சோழமன்னர்கள் உள்நாட்டுக் குழப்பங்களினால், வெளிநாடுகளினின்று வரும் பகைவரை எதிர்த்துப் போராட வலியற்றவர்களாய்த் தளர்வடைந்தமையால் சோழநாடு வரவர நிலைகுலைய ஆரம்பித்தது. மற்றும் சோழ சேர பாண்டியர்களுக்குள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் அடிக்கடி இடைவிடாமல் போர்புரிந்துவந்தனர். இது இவ்வாறாக, வட இந்தியாவினின்றும் "பல்லவர்' என்ற ஒரு பெருங்கூட்டத்தார் மத்திய இந்தியாவிலிருந்த "ஆந்திரர்" என்ற கூட்டத்தாரை வென்று, தென்னாட்டிற் புகுந்து தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றிக்கொண்டு, சோழ நாட்டையும் கொள்ளை கொள்ளத் தலைப்பட்டனர். அப்பொழுது "முதலாவது மகேந்திரவர்மன்" என்பவர் சோழநாட்டை ஆண்டுவந்தார். பல்லவர் சோழ நாட்டிற் புகுந்து அவர்களைத் தங்களுக் குட்படுத்தினமையைக் குறித்து, மகேந்திரவர்மனின் தந்தை "சிம்மவிஷ்ணு" என்பவராலும் அவரது மற்றொரு மகன் "முதலாவது நரசிம்மவர்மன்" என்பவராலும் வெட்டுவித்த கல்வெட்டுக்கள் மூலமாய்த் தெரியவருகிறதெனத் தற்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

அதற்குப்பின் மத்திய இந்தியாவினின்றும் "சாளுக்கியர்" என்றொரு கூட்டத்தார் பல்லவர்களை வென்று பின்பு தென்னாட்டிற்புகுந்து சோழநாட்டைக் கைப்பற்றி, பாண்டிய சேரர் முதலாயினோரை வென்று அவர்களது நாட்டிற் சில பகுதியைக் கொண்டனர். ஆயினும் சோழநாட்டில் சாளுக்கியரது நிலையுள்ள ஆட்சி இருந்ததாகத் தோன்றவில்லை. முடிவில் சாளுக்கியர், எல்லூருக்குப் பக்கத்திலுள்ள வேங்கி என்னும் ஊரில் போய்த் தங்கினார்கள். பின்னொருகாலத்தில் பல்லவர் தலைவரான நந்தி

வர்மன் பல்லவமல்லன் என்பவருக்கும் சாளுக்கியர் தலைவரான இரண்டாவது விக்கிரமாதித்தன் என்பவருக்கும் பகையுண்டாகி முடிவில் பல்லவர்களை அவர்கள் இருந்த இடங்கூடத் தெரியாமல் சாளுக்கியர் முறியடித்து வென்றனர். பிறகு சாளுக்கியர்களுக்குள் ஒருவருக்கொருவர் போர்புரிந்துகொள்ள அவர்கள் நாடும் சிதைவுபட்டது. பல்லவர் ஆட்சி சிதைவு பட்டதும் அவர்கள் நாட்டைக் **கங்காபல்லவர்** என்ற மற்றொரு கூட்டத்தார் கைப்பற்றி ஆண்டுவந்தனர். அவர்களுட் சிறந்தவர் **விஜயநிருபதுங்க விக்கிரமவர்மன்** என்பவர். இவர் ஒன்பதாம் நூற்றூண்டில் ஆண்டு வந்தது தெரிகிறது. இவரும் மற்ற பல்லவர்களைப்போலவே சோழநாட்டிலும் புகுந்தனர். இவ்வாறு, சென்ற நூற்றூண்டுகளாக உள்நாட்டாராலும், வடநாட்டாராலும் இடர்ப்பட்டுவந்த சோழநாடு ஒன்பதாம் நூற்றூண்டின் துவக்கத்தில் **விசயாலயன்** என்னும் ஓர் சிறந்த வீரசோழ மன்னரால் தலைநிமிர்ந்து ஓங்கிவளரத் தொடங்கிற்று.

முதலாவது ஆதித்தியன் :—

விசயாலயனுக்குப்பின் சோழநாட்டிற்கு அரசராக வந்தவர் முதலாவது ஆதித்தியன் என்பவர். இவர் "கொங்குநாடு" அதாவது இப்பொழுது வழங்குகிற கோயம்புத்தூர், சேலம் முதலிய நாடுகளையும், பல்லவரிடமிருந்து தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றினர். இவருக்குப்பின் தஞ்சை நாட்டிற்கு அரசராக வந்தவர் **முதலாவது பராந்தகர்** என்னும் சோழமன்னர்.

முதலாவது பராந்தகர்:—இவர் காலத்தில்தான், சீர்குலைந்திருந்த சோழநாடு மிகவும் பரவத்தொடங்கிற்று. இவர் வடஆற்காடு, தென்னற்காடு முதலிய பலவிடங்களினின்றும் வந்த **பாணர்**, மைசூரினின்றும் வந்த **கங்கர்**, பாண்டியர், இலங்கையரசன் முதலியோர்கள் மேற் படையெடுத்துப் பலதடவைகளிலும் அவர்களை வென்றுள்ளார். இவர் போர்புரியச்சென்ற பல நாடுகளினின்றும் கொணர்ந்த தங்கம் பொன் முதலியவற்றைக்

கொண்டு, சிதம்பரத்திலுள்ள ஆலயத்தின் ஒரு கோபுரத்தைத் தங்கத்தினல் கட்டினர் என்றும், அந்தணர்க்குப் பூதானம் கோதானம் முதலிய பலதானங்கள் கொடுத்து ஆலயம் பல தோற்றுவித்தாரென்றும் சிலர் கூறுகின்றனர். இவர் பத்தாம் நூற்ருண்டின் பாதிவரையில் தான் ஆட்சிபுரிந்தனர் என்று சரித்திரங்களிலுற் புலப்படுகின்றது. இவர் முதன் முதலில் காஞ்சிபுரத்தையும், அதற்குப்பின் நமது தஞ்சாவூரையும் தமது தலைநகராக அமைத்துக்கொண்டனர்.

இராஜாதித்தியன் :— பராந்தகர் இறந்தவுடன் சோழ நாட்டில் ஒரு பெருங்குழப்பம் உண்டாயிற்று. அவருக்குப்பின் அவரது மூத்தமகன் இராஜாதித்தியன் ஆட்சிபெற்ற சில ஆண்டுகளுக்குள், சாளுக்கியர் தலைவனை **மூன்றவது இராட்டிரகுத்தா கிருஷ்ணராஜா** என்பவன் மீண்டும் தொண்டைமண்டலத்தைச் சோழரிடமிருந்து கைப்பற்ற எண்ணங்கொண்டு அரக்கோணம் என்னுமிடத்தில் சோழரை வென்று தொண்டைமண்டலத்தையும் கைப்பற்றிக்கொண்டான்.

ஆதித்திய கரிகாலன் அல்லது இரண்டாவது ஆதித்தியன் :—இராஜாதித்தியனுக்குப்பின், காந்திராதித்தியன், அரின்ஜாவர், இரண்டாவது பராந்தகர், ஆதித்தியகரிகாலன் அல்லது இரண்டாவது ஆதித்தியன், மதுராந்தகன் எனும் சோழர் ஐவர் எழுந்து ஒவ்வொருவரும் தங்களுக்குத்தான் பட்டம் கிடைக்க வேண்டுமென்று தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொள்ள முடிவில், ஆதித்திய கரிகாலன் அல்லது இரண்டாவது ஆதித்தியன் என்பவர் சோழநாட்டிற்கு அரசரானர். இவர் ஆட்சிபெற்ற சில ஆண்டுகளுக்குள் சாளுக்கியரை வென்று அவர்களிடமிருந்து மீண்டும் தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இவருக்குப்பின் இவரது தம்பி முதலாவது இராஜராஜசோழன் என்பவர் அரசரானர்.

முதலாவது இராஜராஜ சோழன் :—இவருக்குப் பெயர் "இராஜகேசரிவர்மன்" என்றிடப்பட்டு பின்பு சில காரணங்க

ளால் "இராஜராஜன்", "ஜயம்கொண்டசோழன்", "சிவபாத சேகரன்" என்ற பெயர்கள் இவருக்கு வழங்கலாயின. இவர் தம்போன்ற சில மன்னரை வென்று அவர்களுக்கெல்லாம் பெரு மன்னனுய் ஆட்சிபுரிந்தமையால் இவருக்கு "இராஜராஜன்" என்றும், இவர் போருக்குச் சென்றவிடமெல்லாம் ஜயங்கொண்டு மீண்டமையால் இவருக்கு "ஜயங்கொண்ட சோழ" னென்றும், இவர் சிவபூசையில் மேம்பட்டு அடியார்பால் பேரன்புபூண்டவரானமையால் இவருக்குச் 'சிவபாதசேகரன்" என்றும் பல பெயர்கள் வழங்கலாயின என்பர். எங்கும் ஜயங்கொண்டமை எக்காலத்தும் அழியாது யாவரும் அறிதல்வேண்டி, ஜயம்கொண்ட சோழன் என்ற தனது காரணப்பெயரால் ஜயம்கொண்டசோழ புரமென ஓர் பேரூர் அமைத்தனர். அஃது இப்பொழுது திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள ஜயங்கொண்டசோழபுரம் என்பது.

இவர் மேற்கே "கொல்லன்," "குடகு' என்னும் ஊர்கள் வரையிலும், தெற்கே கன்னியாகுமரிமுனை, இலங்கைத்தீவு வரையிலும், வடக்கே "ஒரிஸ்ஸா" முதலிய ஊர்கள்வரையிலும், உள்ள நாடுகளை வென்று தனது ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டார். இவருக்குப்பின் வந்த சில சோழமன்னரால். சோழநாடு, "பர்மா," "மலேயன் பெனின்சுலா" என்னும் தீவுகள் வரையிலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது. இராஜராஜன் பத்தாம் நூற்றாண்டின்இறுதியில் பாண்டியர், சேரர் இருவரையும் போரில் வென்று தனக் குட்படுத்திக்கொண்டு மைசூரிலிருந்த **கங்கர்** என்பவர்களையும், திருவல்லம் என்னும் ஊரிலிருந்த **பாணர்** என்ற கூட்டத்தாரையும் வென்று அவர்களையும் தனக்கு உட்படுத்திக்கொண்டார். பிறகு கிழக்கிலும் மேற்கிலுமிருந்த சாளுக்கியரையும் வென்று அவர்கள் தலைநகராகிய **வேங்கி** என்னும் நாட்டையும் கைப்பற்றி அந்நாட்டின் பழைய வம்சத்தவர்களில் ஒருவனை தனது சிற்றரசனாகவிருந்து வெங்கியை ஆண்டுவரும்படி செய்தார்.

உ

வரலாற்று மொழிகள்.

திருவாளர். சி. சோமசுந்தர முதலியார் அவர்கள்,
கரந்தை.

வரலாற்றுமொழிகள் என்ற சொற்றொடரானே கூறப்புகும் பொருள் இன்னதென நன்கு விளங்கக்கூடியதாகவில்லை யெனினும் சற்று விரிப்பின் தெற்றென விளங்கும். அன்றியும் கூறப்புகும் பொருள் முழுவதையும் ஒருவாறடக்கி ஒரு தலைப்பெயர் அளித்தல் பெரிதும் இயலாததொன்றாகும். நூனுதலிய பொருள் முற்றும் பல சொற்றொடரால் ஆக்கப்பட்ட முகவுரையில் விளங்குதல் இயலாததெனப் பண்டை இலக்கண வாசிரியரில் ஒரு சாரார் கூறுவாராயின், இவ்வாராய்ச்சியிற் கூறப்புகும் பொருளை இவ்வாராய்ச்சியைக் குறிக்கும் தலைப்பெயரில் எங்ஙனம் அடக்குதல் கூடும்? சொற் சுருங்கல் நோக்கிக் கூறப்பட்ட "வரலாற்று மொழிகள்" என்ற சொற்றொடரை ஒருவாறு விரித்து, யாம் கூறப்புகும் பொருள் இன்னதெனச் சற்று விளக்குவாம்.

"தம் வரலாற்றைத் தாமே உணர்த்தும் சில தமிழ்மொழிகள்" என்று கூறின் தம் வரலாற்றை மொழிகள் தாமே உரைக்கவல்லன என்றும், அந்நெறியில் தமிழ்ச் சொற்கள் நன்றாக உரைக்கவல்லன என்றும், அங்ஙனம் உரைக்கவல்ல தமிழ்ச் சொற்கள் சிலவே ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும் என்றின்னோரன்ன பொருளெல்லாம் நன்கு விளங்குவதை உற்றுநோக்குவார் எவரும் காணுதல் கூடும். சொற்களிற் சிலவேனும் தம்வரலாற்றைத் தாமே உணர்த்துகின்றன என்று கூறுவதை யாரும் மறுக்கார். ஒவ்வொரு மொழியும் தனக்குள்ள பொருளைக் குறிப்பதற்கு ஓசை முதலிய காரணங்களில் ஒன்றுபற்றியே தோன்றும். தமிழ் மொழியில் எல்லா மொழிகளும் காரணம் குறித்தனவெனப் பண்டை இலக்கண

ஆசிரியர் தொல்காப்பியர் கூறிப்போந்தனர். எல்லா மொழிக்கும் காரணம் இப்பொழுது காணக்கூடுமோ எனின், கூடும் என்று ஒரு தலையாய்ச் சொல்லுதல் இயலாது. மொழிகளின் ஆக்கக் காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையே பெருங்காலம் சென்றமையானும், மொழிகளே பிறமொழிக் கூட்டுறவு முதலியவற்றால் ஓசை பொருள் முதலியனவும் பெரிதும் மாறுபட்டிருத்தலானும் எளிதிற் காரணம் காணவியலாது என்னும் பொருளை உள்ளடக்கி அத்தொல் நூலாசிரியரே "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்றார். ஊடுருவிப் பார்க்கின் சற்று விளங்குமெனப் பெற்றாம். இங்ஙனம் சில சொற்களுளவாதல்பற்றியோ அன்றிக் காரணமின்றிப் படைத்துக்கொள்ளுங் கிளவியாகி இயற்கைக்குமாறான பலவிலக்கணங்கொண்ட வடமொழிப்போக்கைப் பின்பற்றியோ சொற்களைக் காரணச் சொல்லென்றும் இடுகுறிச் சொல்லென்றும் பின்னூலாசிரியர் பிரித்தனர். ஒருவர் இடுகுறி என்றுசொல்லும் சொல்லைக் காரணச்சொல்லென்று தக்க ஏதுக்களுடன் நாம் காட்ட இயலுமாயின் பின்னும் அதனை இடுகுறி என்று கூறல் சற்றும் இயலாது. நாம் காட்டும் காரணப்பொருளொடு இப்பொழுது வழங்கவில்லை என்று பிறர் காட்டினும் அதுபற்றி அச்சொல் இடுகுறியாகாது ஓர்கால் அக்காரணப் பொருளொடு வழங்கியிருத்தல் கூடுமாதலின். ஒவ்வொரு சொல்லையும் இங்ஙனம் கண்ணழித்துப் பொருள்காணின் பலசொற்களுக்குக் காரணம் நன்றாக விளங்குமென்பது சொல்லாமலே அமையும்.

1. ஒன்பது.

தன் வரலாற்றைத் தானே உணர்த்தவல்ல மொழிகளில் ஒன்பதுஎன்பதும் ஒன்றாகும். தனி மொழிகளின் வரலாறுகூறுதல் எளிதன்று. கூட்டுச்சொற்களின் வரலாறுகூறுதல் சிறிது எளிதாகும். ஒன்பது ஓர் கூட்டுச் சொல்லாதல்பற்றி அது பிற எண்ணுப்பெயர்களுடன் புணருமிடத்துக் காணப்படும் சில வேறுபாடுகளின் உண்மையை ஆராயுமிடத்து அம்மொழியின் வரலாறு மிகவும் எளிதில் உணரக்கூடியதா யிருக்கின்றது.

இவ்வொன்பது என்னும் எண்ணுப்பெயர் பத்து, நூறுஎன்னும் எண்ணுப்பெயர்களுடன் புணருமிடத்து நிகழும் வேறுபாடுகளை உற்று நோக்குமிடத்து அவை இருமொழிப் புணர்ச்சிக்கண் இயல்பாகத் தோன்றக்கூடியவைகளா என்று ஆராய்தல்வேண்டும். ஒன்பதும் பத்தும் புணரத் தொண்ணூறுகுமென்றும் ஒன்பதும் நூறும் புணரத் தொள்ளாயிரமாகு மென்றும் எல்லா இலக்கணங்களிலும் காண்கின்றோம். தொல்காப்பியம், நன்னூல், இலக்கணவிளக்கம் இப்மூன்றுமே இக்காலத்துப் பெரிதும் வழக்கின்கண் ஆளப்படும் இலக்கணநூல்களாதலின் அந்நூற்கள் இவ்விருமொழிப் புணர்ச்சியை எங்ஙனம் கூறுகின்றனவென்று ஒரு சிறிது ஆராய்வாம்.

ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி யாய்தப கரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகர மாகும்.

ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
வூவா வாகு மியற்கைத் தென்ப
வாயிடை வருத லிகார ரகார
மீறுமெய்கெடுத்து மகர மொற்றும்.

(தொல்காப்பியம்),

தொன்பானொடு பத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(நன்னூல்).

ஒன்பானொடு பத்து நூறு மொன்றி
னென்றிய விரண்டு மூறு மாயிரமு
மென்று திரிய விறுதிய கெடுவழி
நின்ற னகர நிரலே ணளவா
யிரட்ட வொகரமிசைத் தகர மொற்றும்.

(இலக்கண விளக்கம்).

(ந. உ.) இன்னும் முன்னதினேனைய முரணி யென்பதற்கு நிலைமொழியாய எட்டின் மேலொன்று ஒன்பஃதெனப் பஃ தென்னுமிறுதியதாய்த் திரிந்து நின்றாற்போல வருமொழியாய எண்பதின்மேற் பத்தைநூறெனவும் எண்ணூற்றின் மேனூற்றை ஆயிரமெனவும் திரித்துப் பொருள்கோடலு மொன்று.

ஒன்பதொடு பத்தும் நூறும் புணருமிடத்து வருமொழியாகும் பத்து நூறு என்பவை கெடுதலும் நூறு ஆயிரமென்றமொழிகள் முறையே தோன்றுவதும் இங்கு உற்று நோக்கத்தக்கன. ஒரு மொழி முற்றும் அழிதலும், இயைபில்லாத மற்றொரு மொழி தோன்றுதலும்வேறு எம்மொழிப் புணர்ச்சிக்கண்ணும்கண்டிலம். அன்றியும் நிலைமொழி முதற்கண் உயிரின்மிசை ஒருமெய் வந்து தோன்றவும் காரணம் காண்கிலம். ஏனெனின் நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் இருமொழியும் சேர்ந்திசைத்தற் பொருட்டுத் தோன்றல், திரிதல், கெடுதல் முதலாயின வேறுபாடுகள் இயல்பேயன்றி நிலைமொழிமுதலிலும் வருமொழியீற்றிலும் வேறுபாடுகள் உளவாதல் இயல்பே அன்று. இஃதெம் மொழியாளர்க்கும் ஒப்பமுடிந்ததாகும். இஃதிங்ஙனமாக மேற் கூறிப்போந்த இலக்கணங்களெல்லாம் அவ்வாறு கூறுதற்குக் காரணமென்னென்று கருதல்வேண்டும். சொற்கள் இயல்பிற் புணரும் முறைக்கு மாறாகப்புணர்ந்து கெடுதல் முதலிய வட மொழி வழக்குப்பற்றிப் பிற்காலத்து இலக்கணநூலார் ஒருகால் கூறினும் கூறுதல்கூடும். பண்டை வழக்கினும் செய்யுளினும் கிடந்தாங்கே எடுத்துரைக்கும் தொல்காப்பியர் எங்ஙனம் கூறுதல்கூடும் என்ற வினா நிகழ்தல் இயல்பு. அதற்கு விடை என்

னெனிற் கூறுதும். இச்சூத்திரம் தொல்காப்பியர் கூறியதாகச் சொல்வதற்கு இடமேயில்லை. உரையாசிரியர் முதலியோரால் தொண்ணூறு தொள்ளாயிரம் முதலியவற்றின் வரலாற்றைஅறிய முடியாதகாலத்து இடைப்பெய்ததென்றே கொள்ளற்பாலதாம். பின்னூலாரும் இதைப் பின்பற்றித் தாம் எண்ணியபடி சிறிது திருத்தி வேறு சூத்திரம் செய்பலாயினர். உரைகாரர்களும் தம் தம் அறிவைச் செலுத்தி வேறுவேறு உரைகள் கூறினர். நன்னூல் உரைகாரராய சங்கர நமச்சிவாயப் புலவர் என்பார் "முன்னதி னேனைய முரணி" என்ற தொடருக்கு 'நிலைமொழியாய கட்டின் மேலொன்று ஒன்பஃதெனப் பஃதென்னும் இறுதிபதாய்த் திரிந்து நின்றாற்போல வருமொழியாய எண்பதின்மேற் பத்தை நூறெனவும்எண்ணூற்றின்மேல் நூற்றை ஆயிரமெனவும் திரித்துப் பொருள் கோடலுமொன்று' என்று உண்மைக்கு ஒரு சிறிது ஒட்டியும் ஊடுருவிப் பார்க்கின் உண்மை விளங்குமாறும் பிறர்மதமாகக் கூறினர். இவ் விருமொழிப் புணர்ச்சிக்கண்ணுள்ள வேறுபாட்டை முதலில் ஆராய்ச்சி முறையிற் கண்டவர் தமிழின் செவ்வியை நன்குணர்ந்து நூல்களும் இயற்றித் தமிழுலகம்செய்த தவக்குறைவானே சிறுபிராயத்தேயே காலஞ்சென்றவராகிய **சூரியநாராயண சாஸ்திரிகளாவர்.** அவர்தம் "தமிழ் மொழிவரலா"ற்றின்கண்ணே ஒன்பதும் பத்தும் புணரத் தொண்ணூறுதல் இயல்பன்றென்று கண்டனர். தொண்டு என்ற சொல்லுக்கு ஒன்பது என்ற பொருள் காணப்படுதலின் தொண்டும்பத்தும் புணர்ந்து தொண்ணூறும், தொண்டும் நூறும் புணர்ந்து தொள்வாயிரமு மாயிருத்தல் கூடுமென்று எண்ணினர். இது நிலைமொழிமுதல் காரணமின்றித் தகரம் தோன்றுதலை ஒருவாறு ஒழித்ததே யன்றி ஒரு காரணமுமின்றிப் பத்து நூறுதற்கும் நூறு ஆயிரமாதற்கும் தக்க காரணங் கூற மாட்டாததாயிருக்கின்றது. இனி என்னோ உண்மை யென்னிற் கூறுதும். தொல்பத்து என்பது தொன்பது என்றாய்ப் பின்னர் ஒன்பது என்றாயிற்று என்பது. அங்ஙனமே தொல்நூறு என்பது தொன்னூறு என்றாய்ப்பின்னர்த் தொண்ணூறு என்றாயிற் றென்பதும் தொல் ஆயிரம் என்பது தொல்லாயிரம் என்றாய்ப் பின்னர்த்

தொள்ளாயிரம் என்றாயிற் றென்பதுமேயாகும். அவற்றிற்குப் பொருள் வருமாறு. ஒன்றொன்றாய் எண்ணுமிடத்துப் பத்தின் முன்னது தொல்பத்து, பத்துப் பத்தாய் எண்ணுமிடத்து நூற்றின் முன்னது தொல்நூறு. நூறு நூறாய் எண்ணுமிடத்து ஆயிரத்தின் முன்னது தொல்ஆயிரம். இனி ஒன்பது என்னும் எண்ணுக்குத் தொல்பத்து என்னும் காரணப்பெயர் வாய்ப்பது ஏன் என்னிற் கூறுவாம். தமிழ்மக்கள் ஒரு காலத்து முதல் எண்கள் எட்டுவரையிற் கொண்டனர் என்றும் பின்னோர்காலத்துப் பத்துவரையிலும் கொண்டனரென்றும் உயர்த்துணரக் கிடக்கின்றது. முன் ஒரு காரணத்தால் எட்டுவரையுங் கொண்ட தமிழ்மக்கள் பின்னொரு காரணத்தால் பத்துவரையும் கொண்ட காலத்துப் பத்துக்கும் எட்டுக்கும் இடையே உள்ள எண்ணை, பத்தின் முன்னது என்னும் பொருளுடன் தொல்பத்து என்றாண்டிருத்தல் வேண்டும். முதல்எண்களைப் பத்துவரையும் ஆதிமக்கள் கொண்டதற்குக் காரணம் தம் இருகைகளிலும் பத்து விரலுள்ளமை பற்றியென்ப. இனித் தமிழ் மக்கள் முதல்எண்களை எட்டுவரையில் ஓர்காலத்துக் கொண்டதற்குக் காரணம் யாதாயினும் உளதோ என்னின், உளதென்றே கூறுவதற்குத் தக்கசான்றுகள் உள்ளன. யாரும் தம்தம்உடலைத் தத்தம் கைச்சாணால் அளக்குமிடத்து எட்டுச்சாணேயாதல் ஆதிகாலத்துத் தமிழ்மக்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். அதுபற்றி முதலெண் எட்டுவரையிற் கொண்டனர். தம் உறுப்புகளுக்கும் அளவு நோக்கியே அரை, கால் என்று பெயரிட்டிருத்தலை நோக்கின் தம்முதலெண்ணின் தொகையையும் தம் உடலின் அளவு நோக்கியே அமைத்துக் கொண்டிருத்தல் சாலும் என்பதை உணரலாம். இரண்டாவதாக, இக்காலத்து ஆரியராலும் அந்தணர் கூட்டத்து இறந்தார் பொருட்டு இயற்றும் கடன் பத்துநாள் எல்லையதாகும். தமிழ் மக்களுக்கோ தாமே செய்யும் கடன் எட்டுநாள் எல்லையதாகும். அந்தணர் விதித்தாங்குச் செய்யுங்கடன் ஸ்மிருதிகளில் பல்வேறு அளவைத்தாயிருப்பினும் பெரும்பாலும் வழக்கின்கண் பதினாறு நாள் எல்லையதாகும். இக்கடன் அந்தணர்க்குமாத்திரம் ஏன் பத்துநாளெல்லையதாய் இருத்தல் வேண்டும். அந்தணரால் கூத்

திரராகக் கருதப்படும் தமிழ் மக்களுக்குப் பதினாறுநாள் எல்லையதாய் ஏன் இருத்தல்வேண்டும் என்பது வினா.

"வைதிகச் சடங்குகளைச் செய்தலே தம்தொழிலாகக் கொண்ட அந்தணர்க்கு நாள் மிகுதியாகவும் அவ்வைதிகச் சடங்களுக்கு அருகரல்லாதசூத்திரரென்று கருதப்படுபவர்க்கு நாள் குறைவாகவும் இருத்தலன்றோ இயல்பு. இதில்மாத்திரம் ஏன் முறைபிறழ்ந்திருக்கின்றது? என்று என் ஆரிய நண்பர் சிலரை வினவினேம். அன்னோர் அத்துணைக் கல்விவாய்ந்தவர் அன்மையின் தக்க விடை கற்றாரிடத்துக் கேட்டல்வேண்டுமென்றனர். மிகவும் கற்றாரிடத்து இதுபோன்றவைகளை யாம் வினவின் அவர்கள் நன்கு கொள்ளாரென்றையுற்றேம். அவர்கள் அளிக்கக்கூடிய விடையை அவர்கள் பயிலும் மிருதிநூல்களிலிருந்து ஒருவாறு உய்த்துணர்ந்துரைலாம். அவர்கள் யாது தான் கூறுதல் கூடும் என்பதையும் ஒருவாறு கூறுகின்றேம் மற்றையோர் பலநாளில் செய்யக்கூடிய கடனைத் தம் நுண்ணிய அறிவின்முதிர்ச்சியால் இவர்கள் சிலநாட்களிற் செய்துமுடித்தல் கூடும் என்பது ஒன்று. அந்தணர் முதலியோர்க்குக் குற்றேவல் செய்பவராதலின் அத்தொழிலின் இடையிடையே கடனியற்றின் அவர்களுக்கு அந்தணர்க்கு விதித்த நாட்களின் மிகுதியாகப் பன்னாட்கள்வேண்டுமென்பது மற்றொன்று. அன்றி அந்தணர் தங் கல்வித்தேர்ச்சியால் தம்துயரைச் சின்னாட்களில் போக்குதல் கூடும்: மற்றையோர் அங்ஙனம் போக்குதல் இயலாதென்பதுஒன்று. இன்னோரன்ன காரணங்களெல்லாம் ஆரியமக்கள் தம்நாட்டில் யாரோ சிலரைச் சூத்திரரென்று அடிமையாக அவர்கள் மிருதிநூல்களிற் கூறுகின்றார்களேஅவர்கள் உளராயின் ஓர்கால் அவர்களுக்குப் பொருந்துமேயொழிய தமிழ்நாட்டின்கண் தம்முரிமைவாய்ந்தவராய் தம் பழக்க வழக்க வொழுக்கங்களில் பலவற்றை ஆரியர்க்கு அளித்து அவர் தம்மிடத்துச் சிலவற்றைக் கைக்கொண்டு கைக்கொண்டவிடத்தும் தம்வழக்கத்தைஒருங்கே ஒழித்தல் செய்யாத தமிழ் மக்களுக்கு ஒருசிறிதும் பொருந்தா. ஆரியர்க்குப் பத்துநாள் வரையறுத்ததற்கும் தமிழர்க்கு எட்டுநாள் வரையறுத்தற்கும் காரணம் உற்றுநோக்

கின் ஒன்றேயாதல் நன்குபுலப்படும். தம்தம்முதலெண்ணின் வரையையே இருவரும் இறந்தார்பொருட்டு இயற்றும் கடனுக்கு எல்லையாகக் கொண்டனர். தமிழ்மக்களுக்குப் பதினறுநாள் எல்லையென்று கூறுவார்களாயின் அது ஆரியக்கலப்பு ஏற்பட்ட பிற்றைநாள் வழக்கென்றுவிடுக்க. இப்பிற்றைநாள் வழக்கின் கண்ணும் தமிழ்மக்கள் எட்டுக்கொண்டாடி ஒருவாறு முற்றி விடுத்தலை அறவொழித்தாரிலர். மற்றொன்று தமிழ்மக்கள் கணித நூற்குப்பெயர் எண்ணென்றே கூறுவர். கணிதத்திற்கு ஆங்கில மக்கள் சூனிய எண்ணால் (Cipher) பெயர் வழங்குமாறு போல் தமிழ் மக்கள் இறுதிபெண்ணாகும் எட்டினடியாகப் பிறந்த 'எண்' ணென்ற பெயரால் வழங்குவர். தொகைப்படுத்துமிடத்தும் பத்தைப்போலவே எட்டையும் ஆள்வர். பத்துப்பாட்டு என்பது போல எட்டுத்தொகை என்பர். எட்டு என்பது ஓர் காலத்திறுதி எண்ணாய் இருந்தது என்பது "எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும்," "எட்டே வேற்றுமை", "பத்தெட்டுடைமை" என்ற அடிப்பட்ட சான்றோர் வழக்குண்மையானும், "எட்டாத எண்ணிறந்த என்னின்றோன்ன சொல்வழக்குண்மையானும், தமிழ் நாட்டு மக்கள் நாட்களைக் கணக்கிடுமிடத்து "எட்டோ டெட்டு" என்று கணக்கு கூட்டும் வழக்குண்மையானும் எட்டு ஓர் காலத்து இறுதியெண்ணாக வழங்கியதாக வறிதல்கூடும். "பதினெண்பாடைமாக்கள்" என்றவிடத்தும் பத்தையும் எட்டையுமிறுதியாகவுடைய மொழிகளைப்பயிலும் மாக்கள் என்ற பொருளிற் கூறப்பெற்றுள்ளதோ வென்று சற்று ஐயுறக்கூடிய தாகவுமிருக்கின்றது. எட்டை முதலெண்ணின் இறுதியாகக் கொண்டகாலத்துத் தமிழ் மக்கள் முதலெண்ணோடு நின்றனர் என்றையுறுதல் ஒரு சிறிதும் வேண்டா. அக்காலத்து அரை, கால், அரைக்கால் என்று சிற்றெண்கொண்டாங்கு ஓரெட்டு, ஈரெட்டு, மூவெட்டென்று பேரெண் கொண்டிருத்தல்வேண்டும். ஆராய்ச்சியாளர் ஓர் பேரெண்ணை விளக்கும் ஆயிரமென்னும் சொல்லைத் தமிழ்ச்சொல்றென்றே கூறுகின்றனர். இதனாற்பே ரெண்ணின் பெருக்கத்திற்குத் தனிப்பெயருங் கொண்டிருந்தன ரென்றே அறியக்கிடக்கின்றது. பிற்காலத்துப் பத்தை இறுதி

எண்ணைக்கொண்ட மக்களிடத்து வாணிபம்முதலியன தொடங்கிய காலத்தோ அன்றி வேறெக்காலத்தோ தாம் பத்தை இறுதியெண்ணைக் கொண்டு அவற்றின் பெருக்கத்தாலும் சுருக்கத்தாலும் பேரெண்ணும் சிற்றெண்ணும் கொண்டனர் என்பது தோன்றுகின்றது. இனி இன்னோரன்ன காரணங்களால் தமிழ் மக்கள் ஓர்காலத்து எட்டை இறுதி எண்ணைக்கொண்டிருந்தனரென்பது நன்குபுலப்படும். 'உரோமன்' எண்களை எழுதும் பொழுது ஒன்றொழிபத்து என்றபொருள்விளங்க, பத்தொன்று போட்டு, அதற்குமுன் ஒன்றுசேர்த்து எழுதுதலும் இக்கூற்றை வலியுறுத்தல்காண்க. ஆதலால் எட்டிற்கும் பத்திற்கும்இடையே உள்ளஎண்ணுக்கும் தொல்பத்து என்பதுபெயராகித் தொன்பது எனமருவி, ஒன்பது என ஆகியதென்றும் அவ்வொன்பது காரணம் வெளிப்பட்ட தொடர்மொழியென்றும் நன்கு விளங்கும்.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி நிகழ்ச்சிகள்.

(1) இளைஞர் துயரம்.

என்னே உலகம்! என்னே வாழ்க்கை!! என்னும் அயர்வுறு மொழிகளையே இடையறாது பயின்று பெருமூச்செறிந்து கூடிக் கைகூப்பித் தொழுது வாடி வதங்கி அயர்வுற்று நின்றனர் எம் கல்லூரி இளைஞர்கள் என்னில், எமதருமைத் தலைவரவர்களின் அழகுறு புதல்வனை, செல்வச்சிறுவனை, ஏழையர் தோழனை, இளைஞர்தம் களைகணை, தமிழ்த்தாய் மைந்தனை அவர்கள் இழந்தமை குறித்து உற்ற ஆற்றொணாத் துயரை அறிந்துரைத்தல் எங்ஙனம் இயலும்!

எங்கள் தலைவர்தம் திருமகனார் தமிழ்த்தாய்த் திருப்பணியாற்றக்கருதியே இதுகாறும் வளர்ந்து பள்ளியிற் பயின்று உல

கறிவனைத்தையும் ஓரிடத்திலிருந்தே ஒருங்கேயுணர்ந்து ஒழுகி வந்தனரென்பதும், எமதாசிரியர் தமிழ்த்தாய்த்தொண்டிற்கெனவே தண்ணீர் தெளித்து வளர்த்து வந்தனரென்பதும் அவர்களிடத்து நெருங்கிப்பழகி அவர்களது உள்ளக்கிடக்கையை உள்ளவாறறிந்த நேயர்கள் கண்ட உண்மைகளாம்.

இத்தகைய பேராற்ற லுற்ற பெருமகனார்பிரிவால் வாடி வருந்திய எம் கல்லூரி **மாநேசரவர்கள்** மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒன்றுகூட்டி ஒரே மனத்தராய் ஒரே நேரத்தில் ஒரு தனிச்செல்வனின் பிரிவை நினைந்து வருந்தி, எம்பெருமான் திருவடிகளை வணங்கி மாணவர்கட்கு விடுமுறைதந்து விடுத்தனர்.

பின்னர் "உலகெலாம்" என்ன எம்பெருமான் அடியெடுத்துத்தந்தவாறு அத்திருமகனார், தமக்குத் தந்தையாய்த் தனித்தாயுமாய்ப் பேரன்புபூண்டு தம்மைப் போற்றி வளர்த்துவந்த தமது பாட்டனாரின் ஆற்றொணாத்துயரை ஆற்றுவான், அவரது கனவில்தோன்றி, சங்கக்கல்லூரிக் கினற்றடிவரையில் அழைத்து வந்து "தாதா நான் இறந்தனன் என்று கவலையுறேல். எனக்கு என்றும் இருப்பிடம் இஃதேயாம். இவண் **பஞ்சாபகேசன் சபை** என வரைக" எனத்திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். அதனைக் கேள்வியுற்ற எம் கல்லூரி மாணவர்கள் மிக்க ஆர்வத்துடன் அகமகிழ்ந்து அப்பெரியார் தம்மிடஞ்சென்று "அத்திருப்பணியை யாற்றும் உரிமை யாங்களேயுடையேம் ஆவோம்" எனக்கூறி அவரது அனுமதிபெற்று "பஞ்சாபகேசன் சபை" எனுந்திருநாமமிட்ட திருப்பலகையைக்கொணர்ந்து கல்லூரியின்கண்வைத்து, மாணவர் கழகத்தின் தனிக்கூட்டமொன்று அட்சய ஆண்டு ஐப்பசி ச-ம் நாள் (20-10-26) புதன்கிழமையன்று கல்லூரி மாநேசரவர்கள் தலைமையின் கீழ்க்கூட்டி, எல்லா மாணவர்களும் ஒரே மனத்தாராய்த் தங்கள் கழகத்திற்குப் "பஞ்சாபகேசன் சபை" எனத்திருநாமமிட்டு அப்பெயருடனேயே அன்று முதல் தங்கள் கழகம் அழைக்கப்பெறும் எனத்தீர்மானித்து, அது இந்நிலவுலகில் என்றும் நின்று நிலவுமாறு எம்பெருமான் திருவடியைச் சிந்தித்துக் கூட்டத்தை முடிவுறச்செய்தனர்.

மேற்கூறிய நிகழ்ச்சியினின்றே திரு பஞ்சாபகேசனூர் எம் கல்லூரியினிடத்தும் எங்கள் மாணவரிடத்தும் கொண்டிருந்த அன்பின்பெருக்கு எளிதில் காண்கின்றதன்றோ ? அப்பெரியார் எங்கட்குத் தோன்றாத்துணைவராய் நின்று எம்சங்கமும் கல்லூரியும் ஓங்கிவளர்ந்து செழிக்குமாறு அருள்புரிவாராக.

(2) நிகழ்ச்சி.

எம் கல்லூரிகண்ட அருமைத் தலைவரவர்கள் தங்கள் அருமைத்திருமகனூர் நினைவு கூர்தற்பொருட்டு எங்கள் கல்லூரி ஏழை மாணவர்கட்கு அங்கியாடைகளும் உண்டியு முதவியருளியதோடு ஆண்டுதோறும் அத்திருமகனூரது திருநாளன்று எம் கல்லூரி ஏழை மாணவர்களுக்கு உண்டியுணவு தருவதற்கென எம் சங்கத்திற்கு இருநூறு வெண்பொற்காசுகள் (முதற்றவணையாகத்) தந்தருளியுள்ளார்.

அவ்வண்ணலார் நீடு இனிது வாழுமாறு எம்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

(3) நிகழ்ச்சி.

கல்லூரி ஆண்டு விழா.

14—10—26 மாணவர் பந்தய விளையாட்டு.

திருவாளர் சி. வேதாசலம் பிள்ளையவர்கள் B. A. B. L. தலைமையின்கீழ் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திற்கிடையே மாணவர் பந்தய விளையாட்டில், கல்லூரி மாணவர்கள் காட்டிய திறமை பல்லோராலும் பெரிதும் பாராட்டப்பெற்றது.

15—10—26: கலைமகள் விழா.

மாலை $4\frac{1}{2}$-மணிக்குத் தஞ்சை நீதிபதி திரு. K. S. இராமசாமி சாஸ்திரிகளவர்கள் தலைமையின்கீழ்,

1. திரு. N. கந்தசாமிபிள்ளையவர்கள் "தாயுமானவர்" என்பதுபற்றியும், 2. திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் "கம்பர்கவி" என்பதுபற்றியும், 3. திரு. பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியாரவர்கள் " பெரிய புராணம் " என்பது பொருளாகவும் விரிவுரை நிகழ்த்தினர்.

16—10—26 கல்லூரி நாள்.

மாலை $4\frac{1}{2}$-மணிக்குத் தஞ்சை நீதிபதி திரு. K. S. இராமசாமி சாஸ்திரிகளவர்கள் தலைமையின்கீழ்,

1. கல்லூரிமானேசர் திரு. ம. வே. கோபாலகிருட்டிணையரவர்களால் கல்லூரியின் அறிக்கை படிக்கப் பெற்றது.
2. 14—10—26 நடந்தேறிய மாணவர் விளையாட்டில் வெற்றிகொண்ட மாணவர்கட்கு அவைத்தலைவர்களால் பரிசுகள் வழங்கப்பெற்றன.
3. கல்லூரி மாணவன் நாகராசன் " பழியஞ்சினபடலம் " என்பதுபற்றியும்,
4. திரு. சிதம்பரமையரவர்கள் வழித்தோன்றல் திரு. தியாகராசன்—" தமிழ் " என்பதுபற்றியும்,
5. திரு. P. V. சீதாராமையரவர்கள் B. A. B. L. " பெற்றோர் கூட்டுறவு " என்பதுபற்றியும்,
6. திரு. சிதம்பரமையரவர்கள் " அமர்நீதி நாயனூர் " என்பது பொருளாகவும்,
7. கல்லூரிமாணவன் திரு. சின்னத்தம்பி " கண்ணப்பர் " என்பதுபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.
8. மாலை $8\frac{1}{2}$-மணிக்குக் கல்லூரி மாணவர்கள் " மானவிசயம் " என்னுமோர் நாடகம் நடித்துக் காட்டினர்.

பொதுவாக இவ்விருநாட்களினும் விரிவுரையாற்றிய புலவர் பெருந்தகையார்களின் மொழிகளும், அவைத்தலைவரவர்களின் அமிழ்தினுமினிய மொழிகளும் ஆயிரக்கணக்காகக் கூடியிருந்த மக்கள் பலராலும் பெரிதும் பாராட்டப்பெற்றன. சிறப்பாகக் கல்லூரி மாணவர்கள் மிகத்திறம்பட இயற்றிய விரிவுரைகளையும் நயம்பட நடித்துக்காட்டிய நாடகத்தின் உயர்வையும் தமிழ்ச் சுவையுணர்ந்த தமிழ் மக்களனைவரும் மிகவுபர்வாகக் கொண்டாடினர்.

நா. விசுவநாதன்.

உ

கற்புடைய மகள் கண்ணகி.

பண்டிதர், எல். உலகநாத பிள்ளையவர்கள்

(க)

திருநலம் கனிந்த மகளிர்க்கு உயிரினும் சிறந்ததெனப் படும் கற்பு, அறக்கற்பு மறக்கற்பு என்றிருவகைத்து. அவற்றுள், அறக்கற்பென்றது, ஒருவரை அருளவும் வெகுளவும் வல்ல மடந்தையர், தமக்கு எத்தகைய இடுக்கண் நேரினும் தமது ஆற்றலை வெளிப்படுத்தாது, அடங்கியிருப்பது. மறக்கற்பாவது, தமக்குத் துன்பம் வந்தபோது சினந்து தம் மறச்செய்கையை வெளிப் படுப்பதாகும். இம்மறக்கற்புடையாருள், கண்ணகி சிறந்தவளாதலால் அவள் வரலாற்றினை ஈண்டுக் கூறுவாம்.

தமிழ் நாடாகிய தென்னாடு தமிழகம் எனப்படும். அதனைச் சேர சோழ பாண்டியர் என்ற முடியுடை வேந்தர் மூவரும் அரசாண்டிருந்தனர். அவருள் சோழர்க்குத் தொன்று தொட்டு உறையூரே தலைநகராக இருந்துவந்தது. அச்சோழருள், சரித காலத்தில் மேம்பட்டிருந்தவன் கரிகாற் பெருவளத்தான்என்னும் திருமாவளவன். நாடு வளம்படுதற்கு இன்றியமையாதன உழவும் வாணிகமும் என்பது அவன் கொள்கை. அதனால் காவிரி யாற்றுக்குக் கரைகண்டு, வாய்க்கால் பல அமைத்து, உழவுத் தொழிலைப் பெருக்கிய பின்னர், வாணிகத் துறையை வளப்படுக்க வேண்டிக் காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் ஏற்றுமதி இறக்குமதிகட்கு ஏற்ற துறைமுகமாய்த் தான் அரசிருக்கும் அரணமைந்த தலைநகராய் அவ்வளவன் கொண்டது காவிரிப்பூம் பட்டினம். எனில், அதன் வளனும் பிறவும் வகைப்படுத்துரைக்க யாரால் முடியும்? அதனைப் புகார் எனவும் காகந்தி எனவும் வழங்குவர்.

அப் பட்டினத்துக்கெதிரில், காவிரியாறு கரிய திரையின் மீது செந்நீர் பரக்கக் கடலொடு கலப்பது, கரிய மலையிற் படிந்த

செவ்வானமெனத் தோன்றும். பார்க்குமிடமெங்கும் நீக்கமின்றி நிறைந்த கடல் பரம்பொருட்டன்மை இஃதெனப் பகர்ந்திடும். அதன்கண் முழங்கி எழுந்து நிரைநிரையாக நுரைத்துக் கரையை வந்தணுகும் அலைகள், வாவிக் கனைத்து வாய். நுரைசிந்த வரும் பரித்திரளைக்காட்டும். கந்தூழ் அதிற் பிணித்திட்ட களிறும் என்னக் கூம்போடசைந்திடும் நாவாய். கொடிகள் அசையக், கண்ணடி சாளரம் மின்னப் பலநாட்டுப் பொருளும் மக்களும் கொண்டு மிதக்கும் பலவடுக்கு மாளிகைபோல, நீராவிக் கலங்கள் அசைவாடும். அக் கலங்களிலுள்ள புகைவாயில் வழியாக மேலெழும் புகைப்படலம், நீரைக்குடித்து மேனோக்கிச் செல்லும் மேகக் கூட்டத்தை நிகர்க்கும். வார்ந்தொழுகிய நுண்ணிய கருமணற் பரப்பு, வலைச்சியர் விரித்துப்புலர்த்தும் கருங்கூந்தலை எய்க்கும். முத்தம் அரும்பிப் பொன்பூத்து மரகதம் காய்த்து நிற்கும் புன்னைகள். புன்னைமலரின் நுண்டாது உதிர்தரப் பொன்படு மணியெனத் தோன்றும் கழிநெய்தல். புன்னையின் அரும்பிய சினையிற் றங்கிய அன்னம் தாரகை நடுவிற் றண்மதியெனத் தயங்கும். கற்பூரம் போன்ற வெள்ளுப்பும், வான்மீன் எனப் பொலியும் மீனினங்களும், இடந்தொறும் இடந்தொறும் மலை மலையாகக் குவிந்துகிடக்கும். இறாமீன் புறம்போலப் பிணர்படும் அடியும், சுறாக்கோடன்ன முள்ளிலையும் உடைய தாழையின் அரும்புகள், களிற்று மருப்பென்னக் கவின் செய்யும். தாழையின் நிழலில் சுறாமீன்கோடு நட்டுக், கண்டலும் ஞாழலும் சூட்டித் திமிங்கில நெய்யை இப்பியிலிட்டு விளக்கேற்றித் தம் கணவர்க்கு வலைவளம் வாய்ப்ப, வருணனை வழிபடும் நுளைச்சியர் மாட்சியும், பரத்திமார் தம் கூடையிற் சுமந்து செல்லும் உணங்கல் மீன்களைப் பருந்தும் காக்கையும் பந்தரிட்டுச் சூழ்ந்து, ஒன்று கவர்ந்ததை மற்றொன்று இடையிற் பறித்துண்ணும் காட்சியும், கண்டவர் கண்ணைச் சிறைப்படுக்கும்.

அப்பட்டினம், மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என்று இருபகுதியாக இருந்தது. அவற்றுள் கடற்கரையை அடுத்திருந்த மருவூர்ப் பாக்கத்தில், கலங்களின் போக்குவரத்துக்கு ஏற்ற வண்ணம் காவிரி ஆழ்ந்து அகன்றிருந்தமையின் மரக்கலம்

தங்கும் துறைமுகமும், பண்டங்கட்குத் தீர்வைகொள்ளும் ஆயத்துறையும், பண்டங்களைக் கொண்டு தொகுக்கும் பண்டசாலையும், கப்பல் செய்தற்கும் செப்பனிடுதற்கும் உரிய இடங்களும், கலங்கட்குத் துறையறிவிக்கும் கலங்கரைவிளக்கமும் கட்டப்பட்டிருந்தன.

பண்டசாலை முற்றத்தில், பெயரும் நிறையும் பொறித்துப் போகட்ட பொதிகளைக்கொண்டு தொகுப்பார் ஓதையும், அவைகளை நிறைகண்டு கடமை வரையறுப்பார் ஆர்ப்பும், அவற்றின் மீது அரசவிலச்சினையிட்டுச் சுங்கங் கொள்பவர் சும்மையும், கரையிற் கிடந்தனவற்றைக் கலத்தில் ஏற்றுவார் முழக்கமும், கலத்தில் வந்த பொருளைக் கரையில் இறக்குவோர் கலிப்பும், தம்மில் ஒன்றுபட்டுக் கடலொலிக்கு மாறொலி காட்டும்.

துறைமுகத்தருகிலுள்ள நிழல்பரந்த நீளிடையில், கலத்திற் கொணர்ந்த பரித்திரளும் கங்கைக் கரையில் அகப்படுகளிற்றினமும், வடமலைப்பொன்னும் விஞ்சையம்பெருமலை வெள்ளியும் இமயத்து வயிரமும், கொற்கையிற் குளித்த முத்தும், மேல்கடற் கொடிப்பவழமும், ஈழத்துச் செப்பும், கடாரத் திரும்பும், பொதியத்துச் சந்தனமும், சீனத்துப் பட்டும் பனிநீரும், உள்நாட்டு விளைபொருளாகிய நெல், வரகு தினை சாமை முதலிய பதினெண்கூலமும் பகர்தரும் நீண்ட மறுகுகள், நோக்குவாரை வடதிசைக் கோமான் வாழும் இடமோ என ஐயுறச்செய்யும்.

இத்தகைய மருவூர்ப்பாக்கத்திற்கு மேல்பால், வானளாவிய மதிலும் கீழ்நோக்கிய கிடங்கும் சூழ்தர மன்னவர் பெருந்தெருவும், மறையோர் இருக்கையும், வணிகர் வாழிடமும், வேளாளர் மறுகும், யானைக்கூடம், குதிரை மந்துரை, தேர் நிலையம், படைக்கலசாலை, அத்தாணி மண்டபம், அரண்மனை, மாடமாளிகை, கூட கோபுரங்கள், அம்பலம், மன்றம், கழகம், கல்லூரி, அறச்சாலை, மருத்துவசாலை, ஆடரங்கு, செய்குன்று, இளமரக்கா, பூம்பொழில் முதலியவும் கொண்டு சிறந்து விளங்கும் பட்டினப்பாக்கத்தில், மூவகை வணிகருள், அரசனும் அழுக்காறு கொள்ளும் செல்வத்திற் சிறந்த பெருங்குடியார் மரபில் மாநாய்கன் என்றொரு

வள்ளியோன் இருந்தான். அவன்செய்த நல்வினைப்பயனால், திருமகள்என அழகமைந்த ஒரு பெண் மகவு பிறந்தது. அந்த அருமந்த மகட்குக் கண்ணகியெனப் பெயரிட்டுப் பாராட்டி வளர்த்திட, அவளும்,

"மானிளம் பிணையோ! தெய்வ வளரிள முகையோ! வாசத்
தேனிளம் பதமோ! வேலைத் திரையிளம் பவள வல்லிக்
கானிளங் கொடியோ! திங்கட் கதிரிளங் கொழுந்தோ! காமன்
தானிளம் பருவங் கற்குந் தனிபிளந் தனுவோ!"

என்று கண்டவர் கூறக், கற்பின் கொழுந்து பொற்பொடு வளர்வதென நாட்குநாள் நலஞ்சிறக்க வளர்ந்து, யாற்றற லன்ன கூந்தலும், யாற்றுச்சுழியெனக் கிடந்த கொப்பூழும், வில்லென வளைந்த புருவமும், வில்லில் அம்பென மிளிருங் கருங்கண்ணும், பிறையெனச் சுடருஞ் சிறுநுதலும், பிறையின் நிறையெனத் தோன்று முகமும், வேயெனத்திரண்ட மென்றோளும், வேயின் முத்தென வயங்கு முறுவலும், காந்தள் முகிழ்போல் மெல்விரலும், காந்தட் பூங்குலை போலும் வளைபுனைந்த முன்கையும், அன்னம் அன்ன மென்னடையும் உடைய பன்னீராட்டைப் பிராயத்தளாய் இல்லின் எல்லை கடவாது, பந்து அம்மனை கழங்கு ஊசல் என்றின்னவைகளைத் தன் பார்ப்பனத் தோழி தேவந்தி என்பவளோடு பயின்று இனிதிருந்தாள்.

அந்நாளில், அப்பட்டினத்தில், அவ்வணிகர் மரபில் இருநிதிக் கிழவன் என்று எவரும் எடுத்தியம்பும் மாசாத்துவான் மகன் கோவலன், பதினாறாண்டுநிரம்பி அழகு, அறிவு, ஆண்மை, புகழ் முதலியவற்றிற் சிறந்துவிளங்கி யிருப்பக்கண்ட மாநாய்கன், தன் மகட்கு நாயகனாதற்கு எவ்வகையிலும் ஒத்தவன் இவனே எனத் துணிந்து, கண்ணகியைக் கோவலனுக்கு நல்ல நாளிற் கடிமணம் செய்வித்தனன்.

அப்பொழுது, முரசு முழங்கின. பல்லியம் இயம்பின. பணிலம் ஆர்த்தன. வயிரமணித் தூண்நிரை அமைந்த மண்டபத்து, நீலப்பட்டு மேற்கட்டியின் கீழிட்ட முத்துப்பந்தரில், அந்தணர், அருமறையில், வணிகர்க் கமைந்த முறைப்படி நெறி

காட்டக், கோவலன் கண்ணகியைக் கைப்பற்றித் தீவலஞ்செய்ய, மங்கையர், கடவுளை மனத்தால் வழிபட்டு, 'இருவர் அன்பும் என்றும் ஒருபடித் தாகுக' என்று மலர் தூவி வாழ்த்தினர்.

இவ்வாறு மணமுடிந்த பின்னர், கண்ணகி தனக்கென் றமைத்த மாளிகையிலிருந்து, தன் கணவன் மனமகிழ அறவோர்க் களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்தெதிர் கோடல் முதலியவற்றை வழுவா தியற்றிடக், கோவலனும் அளவிலாத அன்புடையோனாய்,

"மாசறு பொன்னே! மணியே! முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெருமட மகளே!
தாழிருங் கூந்தற் றையால்! நின்னை
மலையிடைப் பிறவா மணியே யென்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ?
யாழிடைப் பிறவா இசையே யென்கோ?"

என்று நலம் பாராட்டக் "காதத் திருகண்ணிற் கொண்டே மணி கலந் தாங்கிருவர்—ஆகத்தி லோருயிர் கண்டனம் யாம்" என எவரும் எடுத்தியம்ப, இருவரும் ஒன்றுபட்ட மனத்தினராய், தம்மில் ஒத்த அன்போடு இல்லறத்தை இனிதாக நடத்திவரச் சில யாண்டுகள் கழிந்தன.

அக்காலத்தில், அப்பட்டினத்தில், பரத்தையர் சேரியில்,

"விரலும் விரலுக் கேற்ற அங்கையும்
அங்கைக் கேற்ற பைந்தொடி முன்கையும்
முன்கைக் கேற்ற நன்கமை தோளும்
தோளிற் கேற்ற வாளொளி முகமும்
மாம்படு வடுவுறழ் மலர்நெடுங் கண்ணும்
துப்பன்ன வாயு முத்தொளி முறுவலும்
ஒழுகுகொடி மூக்கு மெழுதுநன் புருவமும்
சேடமை செவியும் சில்லிருங் கூந்தலும்"

உடைய மாதவி என்பாள் ஓர் கணிகை கூத்தினும் இசையினும் சிறந்திருந்தமையின், கோவலன் அவளை விரும்பி, ஆயிரத்தெண் கழஞ்சு பொன்பரிச மளித்து அவள் மனையை யடைந்து, கைப் பொருள் அனைத்தையும் அவட்கே கொடுத்து அவளுடன் வாழ்ந் திருந்தனன்.

இங்ஙனம் தன் கணவன் தன்னைப் பிரிந்து தகாதன செய் தொழுகவும், கண்ணகி அவனது பிரிவாற்றாமையால் தனக்குண் டாகிய துன்பத்தைப் பிற ரறியாமல் மனத்தடக்கி, அவன்பாற் சிறிதும் வெறுப்பின்றி இல்வாழ்க்கையை நடத்தி வந்தனள். இவளது செய்கை இவ்வாறாக.

(உ)

நகரில் இந்திரவிழாத் தொடங்கிற்று. அவ்விழாவின் வர லாற்றினைச் சிறிது கூறுவோம். முன்னொரு காலத்தில் பனிக் கடலுண்ட முனிக்கரசு, தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழனை நோக்கி, "வேந்தே! புகார் நக ரினை வளம்படுக்க" என ஆணை தந்தனர். அதனை ஏற்ற அச் செம்பியன், நகர் வளம்படுதற்கு இன்றியமையாதது மழை. அம்மழைக்குத் தலைவன் இந்திரனாதலின், அவனை வழிபடுவதே அதனைப் பெறுதற்கு வழியாகும் எனத்தேர்ந்து, பொன்னுலகிற் சென்று விண்ணவர்க் கரசினை வணங்கி முன்னின்று, "ஏந்தால்! என் நகரில் நின் பொருட்டு விழா வெடுக்கும் விருப்புடையேன்; விழா நடைபெறும் நாட்களில் நீ ஆண்டு எழுந்தருளி இனிது வீற்றிருத்தல் வேண்டும்" எனக் குறையிரந்தனன். இந்திரனும் அதற்கு உடன்பட்டானாக, அன்றுதொட்டு ஆண்டுதோறும் இந்திரவிழா எடுத்தலைச் சோழ மரபினர் மேற்கொண்டனர். இதுவே இவ்விழா வந்தவாறாகும்.

இனி, முரசறைவோன், யானையின் பிடரில் முரசை ஏற்றி, அயிராவதம் நிற்கும் கோயிலிலே சென்று, விழாவின் தொடக்க மும் முடிவும் அறிவித்துப், பின்னர் "மூதூர்வாழ்கென" ஊரை வாழ்த்தி, "வானம் திங்கள் மும்மாரி பெய்க, மன்னவன் செங்

கோலனுகுக" என் றிசைத்து, விழா நடைபெறப் பேர்தலை நகரத்தவர்க்கு நன்குணர்த்துவன். அதனைக்கேட்ட நகரமக்கள் மனமகிழ்வெய்தி, இவ்விழா நடக்கும்நாட்களில் தேவர் யாவரும் பொன்னகர்வறிதாகஅந்நகர்நீங்கிஇந்நகர்க்குப்போதுவரென்பது தொன்னிலை யுணர்ந்தவர் துணிபாதலின், வீதிகளினும் கோயில் வாயில்களினும் நிறைகுடமும் பொற்பாலிகையும் பாவை விளக்கும் பரப்புவர். கமுகும் வாழையும் கரும்பும் வஞ்சிக்கொடியும் எஞ்சிடாது இடந்தொறும் நடுவர். அட்டமங்கலம் பொறித்த மகர தோரணங்களை நிலைபெற நாட்டுவர். பொற் றாணங்களில் முத்துமாலைகளை நாலவிடுவர். வீதிகளினும் மன்றங்களினும் பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புவர். மாடங்களில் வெண்சுதை தீற்றிக் கொடிகளைக் கட்டுவர். அகிலும் ஆரமும் புகைப்பர். சுண்ணந் தூவுவர். ஆலயந்தோறும் காலந் தாழ்க்காது பூசனை நடத்துவர். அம்பலங்களினும் பந்தர்களினும் அறவுரை விரிப்போர் பொருந்துவர். சமயக் கணக்கர் பட்டிமண்டபத் திருந்து வாதம் புரிகுவர். யாவரும் எவரிடத்தும் செற்றமும் கலாமும் செய்யாது அளவளாவி இன்புறுவர். நகர முழுவதும் நல்விருந்தோம்புவர். ஆதுலரும்பிறரும் அறச்சாலையில் ஊட்டப்பெறுவர்.

இவ்வாறு நகரம் மகிழ்துங்கச் சித்திரைத் திங்களில் சித்திரையும் நிறைமதியும் கூடிய நன்னாளில் கற்பகக் கோட்டத்திற்கும் அயிராவதம் எழுதிய கொடியை உயர்த்துவர். வீதிகளில், ஆரவாரம் மிகுமாறு களிற்றினும் புரவியினும் தேரினும் அரச குமாரர், அமைச்சர், படைத்தலைவர், யானை மறவர், இவுளி வீரர், நகரமாந்தர் முதலியோர் தம்மிற் பொருந்தி ஒருங்கு திரண்டு, காவிரியின்புண்ணிய நன்னீரை ஆயிரத்தெட்டுப் பொற் குடங்களில் கொணர்வித்து, மண்ணக மருள விண்ணவர் தலைவனை மஞ்சனமாட்டிட, ஒருபால், கடவுளர்க் கெல்லாம் விழா சிறக்க, ஒருபால், தருமம் உணர்த்தலும், புராணம் படித்தலுமாகிய செய்கை மிக, ஒருபால், நான்மறை விதிவழாது ஓமங்கள் நடைபெற, ஒருபால், குழலின் ஒலியும் யாழ் ஓசையும் இன்னிசை வல்லவர் தண்ணமுதன்ன பாடலும் சிறந்திருக்கும்.

இங்ஙனம் இரவும் பகலும் முழவொலி முழங்க, குறுந் தெருக்களும் நெடுந்தேர் வீதிகளும் களிதூங்க, விழாநடந்து இருபத்தெட்டாம் நாளாகிய கடைசி நாளில் கொடி யிறங்கிய பின், நகரமாந்தர் எல்லோரும் தத்தமக் கேற்ற சிறப்புக்களுடன் கடல் மருங் கடுத்து, நல்ல நேரத்தில் வருணனை வழிபட்டுக் கடலாடி, மரநிழலினும், மரத்தடிகளில் அமைக்கப்பெற்ற படமாடங் களிலும் மனக் கினியவற்றை உண்டுடுத்து இனிது மகிழ்ந்திருந் தனர்.

அங்கு மாதவியுடன் தேரிற் போந்து கடலாடி அன்புரை யாடி நயந்திருந்த கோவலன், யாழ் கைக்கொண்டு காவேரியினைப் பாராட்டி,

“ திங்கண் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ
லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி !
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல்
கயற்கண்ணாய் !
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி
காவிரி !”

“ மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ
லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல்
கயற்கண்ணாய் !
மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி
காவேரி !”

எனப் பாடினான்.

கேட்ட மாதவி, “ இஃது என்ன வியப்பு ! என்னே இவன் மனம் இவ்வாறு திரிவுற்றது ! இதுகாறும் என்பால் பெரிதும் அன்புடையன் போல நடித்த யாவும் இன்றன்றோ புலனாயிற்று. ‘ காவேரி ; வளவன், நங்கையர் பலரை நயக்கினும், அன்னவன்

குலக்கொடியாகிய நீ அவனைப் புலவா தொழிக. அதுவே மாதர் பெருங்கற்பு' எனக் கவர் பொருள்படக் கூறி, ஆடவர் பல மாதரை வேண்டினும் காதலிமார் புலத்தல் கூடாதெனச் சுட்டினன். நன்று நன்று! இவன் செய்கை" என்றெண்ணி ஊடியவள், அதனை வெளிப்படுத்தாது, மனமகிழ்ந்தவள் போல, யாழைக் கோவலன் கையினின்றும் வாங்கி,

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை
யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்க நடந்த தெல்லா
நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி
காவேரி!"

"கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்று ரொருவர்
நீநல் கென்றே நின்று ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர்."

என்று பாடக்கேட்ட கோவலன், "ஆ, ஆராயாது கெட்டேன்! இவள் வளவன் கோல் கோடின் காவேரி வளங் குன்றும் எனக் கூறினள். இதனால், ஆடவர் அன்பு குன்றின் மாதரும் அன்பிற் குன்றுவர் எனக் குறிப்பித்தனள் போலும். இனி இவள் செய்கையில் எனக்குப் பெரிதும் ஐயம் நிகழ்கின்றது. எழுமையும் தொடர்ந்த உழுவல் அன்பினளாகக் காட்டிய தெல்லாம் நடிப் பென்பது நன்கு விளங்கிற்று. நெஞ்சின் மிக்கது வாய் சோர்ந்து நிகழ்தல் வழக்காதலின், உண்மையை இவளது வாயே வெளியாக்கிவிட்டது. யான் ஆற்றுவரி பாடினேன், இவளும் அவ்வாறு பாடாமல், என்னையொழிய வேறொன்றின்மேல் மனம் வைத்து, மாயப்பொய் பல கூட்டும் வஞ்சத்தாற் பாடினள்," என ஊழ் வலியால் மனந்திரிந்து, மாதவியை வெறுத்துத் தன் மனையை நோக்கி நடந்தனன்.

(தொடரும்)

உ

'நத்தம்போற்கேடு என்னுங் குறளுரை' ஆராய்ச்சி.

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.

'ஒரு குறட்பா' எனத் தலைப்பெயரிட்டு யானெழுதிய கட்டுரை யொன்று 'தமிழ்ப் பொழில்' துணர்–ந பக்கம் ௪௨௯-௪௩௧-ல் வெளிவந்தது. அதனை மறுத்து, நத்தம்போற்கேடு என்னுங் குறளுரை என்னுந் தலைப்பின்கீழ், திருவாளர் T. N. அப்பனையங்கார் அவர்கள் தமிழ்ப் பொழிலுக்கு எழுதிய கட்டுரை என்பார்வைக்கு வந்தது. சிற்றறிவும் சிறுகேள்வியுமுடைய யான் பலவினைகளுக்கிடைப்பட்ட பொழுதுகளில் எழுதிவரும் இன்னோரன்ன உரைகளில் இறப்பவும் பலவாயபிழைகளிருத்தல் இயல்பே. மூதறிவுடைய பெரியார்கள் என் உரைகளிலும் கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து, அவற்றிலுள்ள பிழைகளையே யெடுத்துக் காட்டுவார்களாயின், அஃது எனக்குப் பெரியதோர் ஊதியமா மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஐயங்காரவர்கள் எழுதியது அத்தன்மையதாயின் அவர்கட்கு என் மகிழ்ச்சியையும் நன்றியறிவையும் தெரிவித்து அமையும் அத்துணையன்றி யான் செய்யற்பாலது பிறிதில்லை; என் பொழுதும் வறிதாகாது. ஆனால் அவர்கள் என் கருத்தினைத்தெளிய அறியாமலும், மணக்குடவர், நச்சினார்க்கினியர் முதலாயினாரின் உரைப்பொருள்களைக் காணாமலும், முன்னொடுபின் முரணுமாறும், தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக்கு முறையினும் எழுதியிருத்தலின், கற்பார் மலைவுறுவண்ணம் அவற்றை விளக்குதல் என கடனாயிற்று.

> "நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
> வித்தகர்க் கல்லா லரிது"

என்னுங் குறளுக்கு மணக்குடவரும், பரிமேலழகரும் எழுதிய உரையின் ஒற்றுமைவேற்றுமைகளை நான் நன்குஎடுத்துக்காட்டியிருக்கிறேன். 'மணக்குடவர் தம் கருத்தை நன்கு விளக்கிற்றிலராயினும், இருவர் கருத்தும் முரண்படாமை காணற்பாலது' என் நான் எழுதியிருப்பது ஐயங்காரவர்களுக்குப் பொருத்த

மாகத் தோன்றவில்லை. அவர்கள் 'இவ்விருவருரையும் ஒரே கருத்துடையன என்றல் எவ்வாறு பொருந்து மென்பது விளங்க வில்லை'. என்றும், 'ஆக்கம் போலக்கேடு, உளதானற்போலச் சாதல் என்பன தெளிவாய்ப் பொருளுணரக் கிடப்பனவாமோ' என்றும் கூறிப்போந்து, பின், 'ஆக்கம்போலக்கேடு' என்றதனை 'ஆக்கம்போலத் தோன்றுங்கேடு' என விரித்துப்பொருள் செய்து பார்த்தும், அத்தொடரை முன்பின்னுகமாறிக் 'கேடு போற் றோன்றும் ஆக்கம்' என வைத்துப் பொருள் செய்து பார்த்தும், முடிவில் அவ்விருபொருளும் பொருந்தாவெனக் கழித்து, அவ்வளவினமையாது, 'ஆதலால் அதனை உவமச் சொல்லாகவே நிறுத்தி உண்மைப் பொருள் காணுதல் எளிதினி யலாததென்பது தெளிவாயிற்றென்க' என்றுரைத்தனர். இதி லிருந்து, மணக்குடவருரையின் கருத்தை அவர் அறிந்துகொள் வில்லை யென்பதும், அதனைத் தம்மால் அறியமுடியவில்லையென அவர் ஒத்துக்கொண்டிருப்பதும் வெளியாகின்றன. எனவே, 'எளிதினியலாததென்பது தெளிவாயிற்றென்க' என்று கூறி யது அவரளவில் உண்மையே. பிறருக்கும் இயலாததெனக் கூறுதல் முறையன்றாகலின் அக்கருத்துடன் கூறியதாகக் கொள் ளுதல் வேண்டா. மணக்குடவர் கூறிய 'ஆக்கம்போலக்கேடும்' என்னுந் தொடருக்கு, ஆக்கம்போலுமாறு கெடுவதும் என்ப தே பொருள். அஃது ஒருவாற்றாற்கேடாயினும், ஆக்கம்பயப் பதாகலின் ஆக்கம்போலக் கருதப்படுவதாயிற்று. இன்னும் விளக்கமாகக் கூறின், ஆக்கத்துள் வைத்தெண்ணத்தகும் கேடும், நிலைபேற்றில் வைத்தெண்ணத்தகும் சாவும் வல்லவற்கல்லது அரி தென்பது மணக்குடவர் உரைப் பொருளாகும்.

> "ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃ தொருவன்
> விற்றுக்கோட் டக்க துடைத்து"

என்னுங் குறளும்,

> "வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
> ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே"

என்னும் கம்பராமாயணச் செய்யுட்பகுதியும் மேல் ஆராய்ந்த உரைக்கருத்தினை விளக்கத்தகுவன. ஐயங்காரவர்களுக்கு இது,

புலனாகாமையால் 'ஆக்கம்போலத் தோன்றுங்கேடு' 'கேடுபோற் றோன்றும் ஆக்கம்' என்றிங்ஙனம் இடர்ப்பட்டுரைத்து, மணக்குடவருரை பரிமேலழகருடையுடன் முரணுவதென்றும், அவருரையின் உண்மைப்பொருள் காணவியலாதென்றும் பல்வாறு கூறுவாராயினர். 'ஆக்கம்போலக் கேடு' என்னும் தொடரின் பொருள் அவர்க்கு எளிதின் விளங்கவில்லையேனும், "இது புகழ்படவாழ்தல் மக்களெல்லார்க்கும் அரிதென்றது' என மணக்குடவர் கருத்துரைத்ததிற் கருத்தூன்றியிருப்பரேல் இத்தகைய மருட்சி அவர்க்கு உண்டாகமலிருத்தலுங் கூடும். புகழைப் பெருகச்செய்தலும் புகழை நிறுத்தலும் எல்லார்க்கும் இயல்வதன்று என்பதே பரிமேலழகர் உரையின் கருத்து. மணக்குடவரும் புகழ்பட வாழ்தல் எல்லார்க்கும் அரிது என்றே கூறியிருக்கிறார். இங்ஙனமிருக்க 'இருவர் கருத்தும் முரண்படாமை காணற்பாலது' என யானெழுதியதில் இழுக்கென்னுளது?

இனி, திருக்குறட் பனையேட்டுச்சுவடி யொன்றிலிருந்து நான் எடுத்துக்காட்டிய மற்றொருவர் உரைக்குறிப்பினை ஆராய்வான்புக்கு, 'அதனைத் திருக்குறளின் நேரான பதவுரையென்றுதல் அன்றிப் பொழிப்புரையென்றுதல் கொள்ள இடமில்லை. மற்று அது ஏதோ ஒருவகையான கருத்தினைப் புலப்படுக்கின்ற ஒரு போலியுரையெனவே புறக்கணிக்கத்தக்கது' என்றனர். 'அவ்வுரை பரிமேழகர் முதலாயினாரின் உரையுடன் சேர்த்தெண்ணற் கேற்ற தகுதியுடையதாகத் தோன்றாவிடினும்' என யான் கூறியிருப்பவும் அவர் அவ்வுரையினை 'ஒரு போலியுரை' என்பதனாற்போந்த பயனென்னை? அவ்வுரையை எடுத்தெழுதி "இதிலிருந்து, இப்பாவிலுள்ள 'கேடும் உளதாகுஞ் சாக்காடும்' என்னுஞ் சொற்கட்குப் பொருளறியக் கூடவில்லை" என யானே கூறியிருப்பவும், அவர், 'திருக்குறளின் பெரும்பான்மையான சொற்களுக்கு அவ்வுரையிற் பொருள் காணுமாறில்லை' என்றுரைப்பது பயனில் செயலாம். "சங்காயிரஞ் சூழவாழும் வலம்புரிபோலக் கிளையானது தன்னைச்சூழவாழ்வது கீர்த்திமானுக்குக் கைவரும்." என்னும் அவ்வுரையையும் ஊன்றிநோக்கின், அது, கிளையாயினார் முதலானோர் தன்னைச்சூழ அவர்க்குப் பொருளை

யீந்து வலுமையுறுவது புகழ்பெறும் பண்புடையானுக்கே இயல்வதாம் என நலிந்தேனும் பொருள்கொள்ள இடந்தந்து நிற்கின்றது. 'உள்தாகுஞ் சாக்காடும்' என்பதற்கே இதிற் பொருள் காணப்படவில்லை. 'நத்தம் போல்' என்பதற்கு 'வலம்புரிபோல' அவ்வுரை கூறுவது யாவர்க்கும் எளிதின் விளங்கற்பாலதாகவும், ஐயங்காரவர்கள் அதனை மறுப்பதற்கும் பெரியதோர் ஆராய்ச்சியை மேற்கொள்வது வியப்பாகின்றது. மற்று, அவர் 'ஆதலால் நத்தமென்னுஞ் சொற்பொருள் துணிதற்கு இவ்வுரையினையே போதிய சான்றாகக்கொள்ளுதல் இயலாதென்க' என்கின்றனர். நத்தமென்னுஞ் சொற்பொருள் துணிதற்கு இவ்வுரையினையே போதியசான்றாகக் கொண்டிருந்தாலன்றோ அதனை இங்ஙனம் மறுத்துரைக்கவேண்டும்? 'இவ்வுரையில் நத்தமென்பதற்கு வலம்புரியெனப் பொருள் கொள்ளப்பட்டிருப்பது வெளியாகிறது' என்பதும், "நத்தமென்னுஞ் சொற்பொருள் துணிதற்கு இவ்வுரையே போதியசான்று' என்பதும் ஒரே கருத்துடையன வெனக்கொண்டனர்போலும்?

இனி, சீவகசிந்தாமணியில் ஒரு தொடருக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினை எடுத்துக்காட்டி, அவர் கருத்திதுவென நான் விளக்கியிருந்ததற்கு மறுப்பாக ஐயங்காரவர்கள் எழுதியுள்ளவற்றை நோக்குழி, அவர் நிலைமைக்குப் பெரிதும் இரங்க நேர்கின்றது. "சங்குடைந்தனைய வெண்டாமரை மலர்த் தடங்கள் போலும்—நங்குடி" என்பதற்கு நச்சினார்க்கினியர் "தடங்களிலே உடைந்த தன்மையவாகியமலரும்சங்கும்போலும் நங்குடி; இது தூய்மைக்குவமை" என முதலிற் கூறிப், பின், 'இனிச் சங்குகெட்டாலும் நிறங்கெடாதது போலக் கெட்டாலுந் தன்றன்மை கெடாத குடியுமாம்; 'நத்தம்போற் கேடும்' என்ப" என்றுரைத்தனர். "பிற்பொருளில் சங்கு உடைந்தனைய குடிஎன இயையும். சங்குகெட்டாலும் நிறங் கெடாததுபோலக் கெட்டாலுந் தன்றன்மை கெடாதகுடி என்று கூறியவர் அதற்கு மேற்கோளாக 'நத்தம்போற் கேடும்' என்பதனைக்காட்டியிருப்பதிலிருந்து, அவர் நத்தம் என்பதற்குச் சங்கென்று பொருள் கொண்டுள்ளமைபுலனும்" என யான் எழுதியிருந்தேன். "இரண்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்

டுரையிலும் 'உடைந்தனைய' என்பது மலருக்கு அடை" என ஐயங்காரவர்கள் கூறுகின்றனர். நச்சினார்க்கினியர் எந்தவுரையிலும் சொற்களைப் பொருள்கோள் முறையில் முன்னிறுத்திப் பின் பொருளுரைக்கவில்லை; அவர் பொருளுரைத்திருப்பதிலிருந்தே சொற்களை இன்னவாறு இயையவைத்திருக்கின்றனரென நாம் அறிதல் வேண்டும். முதலுரையில், தடங்கள் உடைந்தனைய வெண்டாமரை மலர் சங்குபோலும் நம் குடி என அவர் சொற்களை இயையவைத்திருக்கின்றனர் என்பது அவ்வுரையைக் கொண்டுதானே அறியவேண்டியுளது? அவ்வாறாக, 'இனிச் சங்கு கெட்டாலும் நிறங்கெடாதது போலக் கெட்டாலுந் தன்றன்மை கெடாத குடியுமாம்' என்னும் உரையிலிருந்து, சங்கு உடைந்தனைய குடி என அவர் சொற்களை இயைத்திருக்கின்றனரென்பது அறிவுடையாரெவர்க்கும் எளிதிற் புலனாவதொன்றாகவும், 'பிற்பொருளில் சங்கு உடைந்தனைய குடியென இயையும் என்றல் அவருரைக்குமாறு கொளக்கூறலாம்' என ஐயங்காரவர்கள் கூறியதென்னை? மாறுகொளக்கூறல் என்பதனை அவர் யாங்ஙனம் அறிந்தனர்? உடைந்தனைய என்பதனை மலருக்கேற்றி, உடைந்த தன்மையவாகிய என இடர்ப்பட்டுரைக்கும் முற்பொருளினும், சங்கு உடைந்தாற் போலும் குடி என்னும் பிற்பொருளே சிறந்ததாமென்க. 'உடைந்தகாலத்து நிறம் வேறுபடாமை மற்றெல்லாப் பொருள்களிடத்தும் உளதாயிருப்பவும் அதற்குச் சங்கினையே எடுத்துக்காட்டுதல் ஏற்புடையதன்றாம்' என்கின்றனர். சுட்டகாலத்து நிறங்குன்றாமை பொன் முதலிய பிறபொருள்களிடத்து மிருப்பவும் அதற்குச் சங்கினையே எடுத்துக்காட்டுதல் ஏற்புடையதன்றாம் என்பார்க்கு இவர் யாது கூறுவர்? பொன்னின் றன்மை அதுவாதல் "சுடச்சுடரும் பொன்போல்" எனத் தமிழ் மறையுள்ளும் கூறப்படுதல் காண்க.

இனி, "நத்தம்போற்கேடு என்பதற்குப் பரிமேலழகருரையைத் தழுவியே நச்சினார்க்கினியரும் ஆக்கமாகுங்கேடு எனப் பொருள் கருதியுள்ளாரென்றலும் ஆண்டைக் கேற்புடையதாகின்றது. கெட்டாலும் தன் தன்மைகெடாதகுடி எனக்குடியின் பெருமையை மேலே கூறிப்போந்தவர், அப்பொருளை

வலியுறுத்தற்கு, அங்ஙனம் வறுமையாற் கேடடைந்த காலத்தும் தம் தன்மையிற் குன்றாது ஆக்கமுற்று விளங்குதல் புகழ்பட வாழுங்குடிப் பிறந்தார் கண்ணே உளதாம் என்னுங் கருத்துள்ள 'நத்தம்......லரிது' என்னுந் திருக்குறளை முதற்குறிப்பினால் நினைப்பூட்டிச் சென்றனரெனக் கொள்ளுதலில் யாதோரிழுக்குமின்று" என்கின்றனர். இதில் 'பரிமேலழகருரையைத் தழுவியே' எனப் புறப்பட்டவர் பின் அவருரையை நட்டாற்றில் விட்டுவிட்டமை காணலாகும். 'வறுமையாற் கேடடைந்த காலத்தும் தம் தன்மையிற் குன்றாது ஆக்கமுற்று விளங்குதல் புகழ்படவாழுங் குடிப்பிறந்தார் கண்ணே உளதாம் என்பது தானா பரிமேலழகர்கொண்ட பொருள்? வறுமை யென்பது யாது? கேடென்பது யாது? இங்ஙனம் வழுப்படக் கூறியிருப்பன பல. அவற்றை ஆராய்தல் வீண்காலப்போக்கே. திருக்குறளை முதற்குறிப்பினால் நினைப்பூட்டிச் சென்றனர் என ஐயங்காரவர்கள் கூறுவது குறிகூறுவதே போலும். அக்குறிதான் பொய்க் குறியாதல் இங்கே காட்டப்படும். நச்சினார்க்கினியர் மேற்கோள் எடுத்தாளும் முறைமையைச் சீவக சிந்தாமணியின் முதற்செய்யுளுரையைப் படித்த துணையானே அறிந்துகொள்ளலாகும். அவர் ஒரு செய்யுளோ சூத்திரமோ முழுதும் மேற்கோளாகக் காட்டப்பட வேண்டின் அதனை அங்ஙனமே முழுதும் எடுத்தெழுதியிருப்பர்; அன்றி அதன் முதலும் இறுதியும் எழுதியிருப்பர்; அன்றி முதலிலுள்ள சொல்லையோ தொடரையோ எழுதி, என்னுஞ் செய்யுள், என்னுஞ் சூத்திரம் என்றிங்ஙனம் விளங்க வெழுதியிருப்பர்; செய்யுள் அல்லது சூத்திரத்தின் ஒரு பகுதியே வேண்டுமாயின், எப்பகுதி வேண்டுமோ அதனை மாத்திரம் எழுதியிருப்பர்; இவ்வுண்மைகளை அவருரை முழுதுங் காணலாகும். இதனை அவர் திருக்குறட்பாக்களை யெடுத்தாண்டிருப்பதிலிருந்தே காட்டுகின்றேன்: சிந்தாமணி, முத்தியிலம்பகம், கஅகூ-ம் செய்யுளுரையில் "கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற்-செல்லா துயிருண்ணுங் கூற்று" என முழுதும் எடுத்துக் காட்டினர். அவ்விலம்-

பகத்து உகூஉ-ம் செய்யுளுரையில் "சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்." என முதற்பகுதியைக் காட்டினர். விமலையாரிலம் பகத்து ௩-ம் செய்யுளுரையில் "ஒன்னார், அழுதகண்ணீரு மளைத்து" என இறுதிப் பகுதியைக் காட்டினர். இவற்றிலி ருந்து நான் மேலே கூறியன பிழையா வாய்மையாதல் தெளிக. ஐயங்காரவர்கள், கூற்றின்படி, 'நத்தம் போற்கேடும்' என்னும் முதற்குறிப்பினால் அப்பாட்டு முழுதையுமே நச்சினார்க்கினியர் உணர்த்தினரெனக் கொள்ளின், சிந்தாமணியின் முதற்செய்யு ளுரையில், அவர் "ஈண்டு உலகமென்றது உயிர்க்கிழவனை; 'உலக முவப்ப' என்னும் முதற்குறிப்பால் திருமுருகாற்றுப்படை முழு தும் உணர்த்தினரென்றன்றோ கொள்ளவேண்டும்? மற்றும் அவர் பத்துப்பாட்டு எட்டுத்தொகைமுதலியவற்றிலிருந்து காட் டிய வெல்லாம் அத்தன்மையவாதல் வேண்டுமே? இவற்றை யெல்லாம் சிறிதும் ஓர்தலின்றி அவர் மறுப்பெழுதப்புகுந்ததனை என்னென்றுரைப்பது? யான் இதுகாறும் எழுதியவற்றி லிருந்து ஐயங்காரவர்கள் கூற்றுமுழுதும், சிறிதேனும் உண்மை விரவாத வெறும் போலியுரை யென்பது யாவர்க்கும் இனிது விளங்காநிற்கும்.

இனி, நத்தம் என்னுஞ் சொல்லுக்குச் சங்கென்னும் பொருள் நச்சினார்க்கினியர் உரையிலன்றி வேறிடத்துக் காணப் படுவதுண்டோ என்பது இங்கு ஆராய்தற்குரியது. திவாகரத் தில் "நந்துபணிலம் வளைநாகு சுரிமுகம், கம்புகோடு சங்கெனப் படுமே" என்றும், பிங்கலத்தில் "நந்து சுத்தி நாகு பணிலம், வண்டு கோடுவளையே சுரிமுகம், கம்பு வெள்ளை இடம்புரிசங்கே" என்றும், சூடாமணி நிகண்டில் "நஞ்சருநந்து சுத்திநாகொடு வளைகம்புக்கோ, டிலங்கியவார ணம்வண் டிடம்புரி வெள்ளை சங்காம்" என்றும் சங்கின் பெயர்கள் கூறியவற்றில் நந்து என் னும் பெயர் முதலிடத்தில் நிற்கின்றது; இப்பெயர் அம்முச் சாரியை பெற்று நத்தம் என்றாகுமென்பது அறிஞரெல்லாரும் உடன்படற்குரியதே; மற்று, சூடாமணி நிகண்டில் "நத்தமே யிருளும் ஊரும் நந்துடன் இரவு நாற்பேர்" என நத்தம் என்

னும் பெயர்க்கு நந்து என்று பொருள் கூறப்பட்டிருத்தலுங் காண்க. இம்மூன்று நிகண்டுகளும் நச்சினார்க்கினியர்க்குக் காலத்தால் முற்பட்டன வென்பதும் சிந்திக்கற்பாலது.

இனி, ஐயங்காரவர்கள் தம் கட்டுரையின் ஓரிடத்தில் 'அன்றியும், அது சிறப்புடையதாயின், மணக்குடவருக்குக் காலத்தினாற் பிற்பட்ட பரிமேலழகர் தாமும் அவ்வாறு உரைசெய்தலைத் தவிர்ந்து,போலென்பதைஉரையசையாகக் கூறிவிடுத்ததென்னை?' என்றும், பிறிதோரிடத்தில் 'ஆதலால் அதனை உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும் உடன்பட்டதெனக் கூறுதல் அத்துணைப் பொருத்தமுடைய தன்றென்று தோன்றுகிறது' என்றும் கூறியுள்ளனர். இங்ஙனம் கோடலே நம் முன்னோராகிய புலவர் பெருமக்களை நாம் போற்றுமுறையென இக்காலததிலும் கருதுவார் சிலரிருக்கின்றனர். இது குறித்து யான் மிக விரித்தெழுதுங் கருத்துடையேனாயினும், இவ்வுரை விரியாமைப் பொருட்டு, அஃது ஆராய்ச்சிமுறை யன்றென்றும், அங்ஙனங் கோடல் தமிழ் வளர்ச்சிக்கு வழியடையாகுமென்றும் கூறுமளவில் நிறுத்துகின்றேன். "சங்குடைந்தனைய வெண்டாமரை மலர்த்தடங்கள் போலும், நங்குடி" என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருள்கள் இவ்வாராய்ச்சிக்கு வேண்டுந் துணையாகவே மேலேதழுவப்பட்டன. சொற்கிடக்கை முறையை ஊன்றி நோக்கின் அவர் கூறிய இருபொருளுமே ஆசிரியர் கருத்தொடுபட்டன என்று கொள்வதற்கு இடமில்லை. 'சங்குடைந்தனைய' என்பதனை மலருக்கு அடையாக்கி, சங்கு உடைந்து விரிந்துநின்றாற்போலும் வெண்டாமரைமலர் எனக்கூறுதலே பொருத்தமுடைத்தாம்.

"சங்குடைந் தனையதாழைத் தடமலர்த் தொடைய லானே"

எனச் சூளாமணி கூறுவதும் இதனை வலியுறுத்தாநிற்கும். மற்றும், தடங்கள்போலும் குடியென்று நேரே பொருள் செய்வதே பெரிதும் பொருத்த முடைத்தாதல் காண்க. இக்காலத்தில், தமிழுக்கு அகத்தியராகி விளங்கும் பெருந் திருவினராகிய மகாமகோ பாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களும் இக்

கருத்துடையவர்களென்பதனை, அவர்கமொழுதிய 'சிந்தாமணி ஆராய்ச்சி விளக்கத்தில், 'சங்குடைந்தனைய வெண்டாமரை மலர்' என்பதனோடு ஒத்த கருத்துடையதாகச், சூளாமணியி னுள்ள 'சங்குடைந் தனையதாழை' என்பதனை எடுத்துக்காட்டி யிருப்பதும், தடங்கள்போலும் குடி எனப் பொருள் படுதல் குறிப்பிட,

"பாற்கடன் முளைத்ததோர் பவளப் பூங்கொடி"

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளை இலக்கத்தாற் குறித்திருப் பதும் நன்கு விளக்கும் என்க.

உ

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

திருவாளர். சோமசுந்தரம் பிள்ளையவர்கள், தஞ்சை.

(க)

'தென்குமரி வடபெருங்கற்
றுணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிது கடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
யினிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல்'

மரபில் உதித்துப் பெருஞ் சீரெய்தியான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். இச்செம்மையுடையானுக்கு முன்னும் பின்னும் ஆண்ட அரச பரம்பரையை ஈண்டு நோக்கப் புகின், அவனேற்றம் கவனிக்கத்தக்கதாகும். திருவாளர் **கனக சபைப் பிள்ளையவர்கள்** கீழ்வருமாறு பாண்டிய அரச பரம் பரையைக் காட்டியுள்ளார்.

ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்.
|
வெற்றிவேற் செழியன்.
|
தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.
|
உக்கிரப் பெருவழுதி.
|
நன்மாறன்.

சிலம்பினிமித்தமாகக் கண்ணகி கணவனாகிய கோவலனைக் கொன்றவன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனெனச் சிலப்பதிகாரம் கூறும்.

காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை

யென்றதில், பேரூர் காவலனென்பவன் பெரிய ஊராகிய மதுரையை ஆண்ட பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனே யாவன். இச்செழியன் கல்வி கேள்விகளில் வல்லவனாகி விளங்கி, தன்னாடு முழுவதும் கல்வியை ஓங்கச் செய்ததோடு பாண்டிய நாட்டை வேற்றரசர்களாற் றுன்புறாதபடி இனிது புரந்தவன். இவன் பாடியது—

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே. [புறம்-கஅங]

கண்ணகி தன் காற்சிலம்பை நெடுஞ்செழியனது அத்தாணி மண்டபத்திற்கு எடுத்துச்சென்று தன் சிலம்பு அவனது மனைவியின் காற்சிலம்பன்று என்று எடுத்துக் காட்டவே, அரசன், தான் அநியாயமாய்க் கோவலனைக் கொலை செய்வித்ததைப்பற்றி மிகவும் வருத்தமுற்று உடனே உயிர் நீத்தானென்பது சிலப்பதிகாரத்தினால் அறியப்படும். இவனிறந்தவுடன் பாண்டிய நாடு

பஞ்சத்தால் பன்னீராண்டு பீடிக்கப்பட்டு மழையில்லாது மிகவும் இடருற்றது.

> பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
> மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது.

இந்நாட்டிலுள்ள புலவர் பல்லோரும் குடிகள் பலரும் செழிப்புள்ள வெவ்வேறுநாட்டைத் தேடிச்சென்றார்கள். பின்பு பாண்டிய நாட்டில் மழை பெய்யவே குடிகள்பலரும் வந்துசேர்ந் தனர். இப்பன்னீராண்டில் யார் பாண்டிய நாட்டை அரசாண் டாரென ஓர் ஆசங்கை எழும். இது நிற்க.

மணிமேகலையை இயற்றினவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரென யாவரும் அறிவர். சிலப்பதிகாரமும் மணிமேகலை யியற்றப்பட்ட காலத்திலேயே இயற்றப்பட்ட தென்று பின் வரும் கட்டுரைகளாற் றெரியவரும்.

> 'உரைசா லடிக ளருள மதுரைக்
> கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்.'
>
> — — —
>
> இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
> வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
> மாவண் டமிழ்த்திற மணிமே கலைத்துற
> வானறம் பாட்டினு ளறியவைத் தனனென்.

இம்மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் பாண்டியநாடு 12-வருடகாலமாய் மழையில்லாமல் வருந்தின காலத்தில் மணி மேகலையையியற்றி, அக்காலத்தில் இந்நெடுஞ்செழியனுக்குப்பின் ஆண்ட பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளார்,

> ஆரந் தாழ்ந்த வணிகிளர் மார்பிற்
> றாடோய் தடக்கைத் தகைமான் வழுதி
> வல்லை மன்ற நீயயந் தளித்த
> தேற்றாய் பெரும பொய்யே யென்றுங்
> காய்சினந் தவிராது கடலூர் பெழுதரு
> ஞாயி றனையை நின்பகை வர்க்குத்
> திங்க ளனையை யெம்ம னோர்க்கே.

[புறம்-ருக]

இப் பன்னிரண்டாண்டு வரையிலும் எப் பாண்டியன் ஆண்டான் எனச் சரித்திரக் குறிப்புக் கிடைக்கவில்லை. வேறுசில அரசர்களும் ஆண்டிருக்கலாம். கனகசபைப் பிள்ளையவர்கள் காண்பிக்கும் வெற்றிவேற் செழியன் ஒரோவழி மேற்குறித்த நன்மாற னென்றும் கூறலாம். ஆகவே சரித்திரக் குறிப்பு இது பற்றிச் சிறிதுமில்லாததால் பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன் மாறனாகிய வெற்றிவேற் செழியனே 12-வருட காலம் வரையிலும் மதுரையை யாண்டானென் றாகிக்கச் சிறிது இடமிருக்கின்றது. இப் பாண்டியனுக்குப் பின் வந்தோன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். இவன் பாண்டியநாட்டினது அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும்பொழுது 12-வருட பஞ்சகாலம் முடிந்ததென்பது விளங்குகின்றது.

மழைத்தொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்கு விளங்க

என்று மாங்குடி மருதனார் இத்தலையாலங் காலத்துச்செருவென்ற நெடுஞ் செழியனைப் பாடிவரும்பொழுது இதைக் குறிப்பதனால் இவனுக்குமுன் பாண்டிய நாட்டில் மழையில்லை என்பதும், விளைநிலங்களும் மரங்களும் பயன்கொடாமலிருந்தன வென்பதும், குடிகள் பசியினாலும் பிணியினாலும் மிகவும் வருந்திக்கொண்டிருந்தார்களென்பதும் தெரியவருகின்றன. ஆகவே இப் பஞ்சத்தினால் பீடிக்கப்பட்ட 12-வருட காலங்கழித்துத் தான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் பாண்டிய நாட்டை ஆண்டானென்பது தெரியவருகிறது.

கனகசபைப் பிள்ளையவர்கள் இத்தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குப்பின் உக்கிரப் பெருவழுதி ஆண்டானெனச் சொல்லுகிறார்கள். இது என் சிற்றறிவிற்கு எட்டிய மட்டிற் பொருந்தாதெனல் தெரியவருகிறது. உக்கிரப் பெருவழுதி காலத்தில் திருக்குறள் அரங்கேற்றப் பட்டிருந்ததெனல் பலர் கொள்கை. இவர்கள் கொள்கையின் சான்று இப்பாவே

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனுகத் தந்துரைத்த-நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

திருக்குறள், சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் முன்பு இயற்றப்பட்ட நூலென்பது ஆராய்ச்சியினுற் றெரியவருகிறது.

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன்'. (மணிமேகலை)

இங்குப் பொய்யில்புலவனென்பது திருவள்ளுவரே. இத் திருவள்ளுவரே உக்கிரப்பெருவழுதியின் முன்னிலையில் திருக் குறளை அரங்கேற்றினரென முன்பு கூறியிருக்கின்றேன். இது ஆராய்ச்சிவகையினுல் உண்மையெனத் தோன்றிவிட்டதால், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குப்பின் உக்கிரப்பெருவழுதி பாண்டியநாட்டை ஆண்டிருக்கவே மாட் டான் இவ்வுக்கிரப்பெருவழுதி ஆரியப்படைதந்த நெடுஞ்செ ழியனுக்கு முன்னிருந்திருக்கவேண்டும். S. கிருஷ்ணசாமிஐயங் கார் அவர்கள் இவ்வுக்கிரப்பெருவழுதி கோவலனைக்கொன்ற ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனெனக் கூறுகின்ருர். இக் கொள்கையும் பொருந்தாதென்பது எனக்குத் தோன்றுகிறது. கடைச்சங்க நூல்களிற்காணும் உக்கிரப்பெருவழுதியின் சரித் திரத்தையும் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனது சரித்திரத் தையும் நோக்குங்கால் எவ்வாற்ருனும் ஒருவர்சரிதம் மற்றவர் சரிதத்தோடு ஒப்பவில்லை. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் கூறுகின்ற நெடுஞ்செழியனுக்கு உக்கிரப்பெருவழுதியென மற் ருெரு பெயரிருக்கலாகாதாவென ஓர்ஆசங்கை எழும். அவ் வாசங்கையை நீக்கவல்ல சங்கநூல் மேற்கோள்கள் எனக்கு இது போது தெரிந்தில. அவற்றை ஆராய்ச்சிவல்லோர் எடுத் துரைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். 'தமிழர் உரிமை நுற்றே டர்—, தமிழ் இலக்கியம் கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள் நெடுஞ் செழியனை உக்கிரப்பெருவழுதியே என்று கூறும்கொள்கை சரியேயென்றுகூறி, இவ்வுக்கிரப்பெருவழுதி இறையனுர் அகப்

பொருளிற்காணும் 'நால் வல்லோரைக் கொணர்க' என்னும் சொற்றொடர்க்காதாரமாய்ப் பலஇடங்களிற்சென்ற புலவர்களைத் தன்னாட்டிற்கு அழைத்தனன் எனக்கூறும்கொள்கை பொருத்தமுடையதெனவுங் கூறுகின்றது. இந்நூலாசிரியர் பாண்டியநாடு பஞ்சத்தினால் 12வருடகாலம் பீடிக்கப் பட்டிருந்ததென்றும், அதனாற்புலவர்கள் பலர் பாண்டியநாட்டை விட்டகன்று, பாண்டியநாட்டில் மழைபெய்து செழிப்புற்றகாலத்தில்வந்தனர் என்றுங் கூறுகின்றார் பின்னும் இவ்வாரியப்படைதந்த நெடுஞ்செழியன் என்ற உக்கிரப்பெருவழுதியே அப்புலவர்களை அழைத்தனனென்றுங் கூறுகின்றார். இவர்கொள்கைக்கு இணக்கமாக இவ்வாரியப்படைதந்த நெடுஞ்செழியனென்ற உக்கிரப்பெருவழுதி தன்னாட்டை ஆளுவதற்கு முன் அந்நாட்டில் 12-வருடகாலம் பஞ்சமிருந்திருக்கவேண்டுமே. இவ்வுக்கிரப் பெருவழுதி ஆளுவதற்குமுன் 12-வருட பஞ்சகாலம் ஏற்பட்டிருந்ததென்று சரித்திரக்குறிப்பும் அதன் ஆராய்ச்சியும் கூறவில்லை. ஆகவே இவரதுகொள்கை சிறிது தவறுதலுடையது. பின்பு 'நால்வல்லோரைக்கொணர்க' என்று யாவர்சொல்லியிருப்பாரென ஓர் கேள்வி எழும்.

இம்மொழிகளைச் சொல்லியவன் தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியனே. இவன் பட்டத்திற்குவந்தபின்பு தான் பாண்டியநாடு செழித்தோங்கிற்று. இவன்காலத்திற்றான் பலவிடத்திற் சென்றிருந்த புலவர்கள் பலர் வந்தனர்.

> 'ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை
> நான்மறை முதல்வர் சுற்ற மாக
> மன்ன ரேவல் செய்ய மன்னிய
> வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே!

என மாங்குடிகிழார் பாடியுள்ளார். ஆகவே 'நால்வல்லோரைக் கொணர்க' என்று த. செ. நெடுஞ்செழியன் கூறியிருத்தல் வேண்டும். மேலும்

> தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
> றொன்முதி கடவட் பின்னர் மேய
> வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந

என்பதனுள் தொன்முதுகடவுள் என்பது அகத்தியரைக் குறிக்கும். அகத்தியருடன் தலைச்சங்கத்துப் பாண்டியன் தமிழ் ஆராய்ந்தானென ஒருபழங்கதையிருக்கின்றது. அப்பாண்டியன்குலத்தில் இந்தநெடுஞ்செழியன் உதித்தான். இப்பாண்டியனும் அப்பாண்டியனைப்போலப் பலபுலவருடன் தமிழ் ஆராய்ந்ததை மாங்குடிகிழார் கூறினரென்பது தெரியவருகிறது. இப்பாண்டியன் பாடிய பாடலில்

ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை

என்பதனால், பலபுலவர்கள் மாங்குடி மருதன் தலைவனாக இவன்நாட்டின் வளப்பத்தினைக் கூறியிருக்கின்றாரெனல் தெரியவருகிறது. ஆகவே இவன் பல புலவர்களைப் பல்வேறிடங்களிலிருந்து அழைத்து அவர்களாற் கல்வியைப் பெருகச்செய்தான் என்பது அறியத்தக்கது.

ஆகவே இதுகாறும் ஆய்ந்ததது-பாண்டியன் தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே 'நூல்வல்லாரைக் கொணர்க' வென்று கூறியிருத்தல் வேண்டும். இப்பாண்டியனது அவைப்புலவரே மாங்குடி மருதனார். இவர் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளார். இப்பாண்டியன் த. செ. நெடுஞ்செழியனுக்குப் பின்னிருத்தல்வேண்டும். மாங்குடிமருதனார் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைப்பாடியபாட்டு, செவ்வியநடையினாலும் திருந்தியபாவினாலும் எழுதப்பட்டதினால், அதை நெடுஞ்செழியன் மேற் பாடின பாவினுடன் ஒத்துநோக்குங்கால், நெடுஞ்செழியனுக்குப்பின்புதான் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் ஆண்டிருக்கவேண்டும் என நாம் அறிந்தோம். ஆகவே பாண்டிய அரசபரம்பரை இவ்வாறிருத்தல்வேண்டுமென என் சிற்றறிவிற் கெட்டியவாறு வரைகின்றேன். இதில் ஏதாவது தவறுஉளதேல் அதனை எனக்குக்காட்டி என் கொள்கையைத்

திருத்துபவர்களுக்கு என் அன்பார்ந்த வணக்கத்தைச் செலுத்துவேன்.

உக்கிரப்பெருவழுதி.
|
ஆரியப்படைதந்தநெடுஞ்செழியன்.
|
பாண்டியன் சிராப்பள்ளித்துஞ்சியநன்மாறன்.
|
தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியன்.
|
இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன்.

(தொடரும்.)

உ

மத்தியகாலச் சோழர் சரிதக்குறிப்புகள்.

இலக்கணவிளக்க பரம்பரை, திருவாரூர், **சோமசுந்தரதேசிகரவர்கள்**, தமிழ்ப் பண்டிதர்.

(Copyright to the author).

அதிகாரம் III.

பராந்தகன் I. கி. பி. 907—948-க்கு

சாலிவாகன சகம், 985—1026.

இராஜகேஸரி ஆதித்தயசோழன் 880 முதல் இருபத்தேழு ஆண்டுகாறும் ஆண்டபின் கி. பி. 907-ல் இறந்தான். இவனது மூத்தமகனை பராந்தகன் பின்னே சோழவரசனுனன். இவனை மதிரை(மதுரை)கொண்ட பரகேசரி என்று கல்வெட்டுக்கள் கூறும். இதற்குக் காரணம் இவனது அரசாட்சியின் மூன்றுவது ஆண்டில் 1 பாண்டியநாட்டை யாண்ட மாறவர்மன் பாண்

1. No. 29 of 1907.

டியனோடு பொருது அவனது இராச்சியத்தைக் கைக்கொண்டு அவனுக்குத் திருப்பிக்கொடுத்தானென்பது ஆகும். அதுமுதல் தன்னை **மதிரைகொண்ட கோபரகேஸரி** என்று கூறிக்கொள்ளுகிறான். இவனது எட்டாவது ஆண்டில் மானபரணன் தேவி கிழவன் தேசப்புகழ் என்பாள் 2 திருநெய்த்தானத்து மகாதேவர்க்கு ஒரு **நொந்தா** விளக்கிட்டமையால் சோழனும் பாண்டியனும் நட்புரிமைபூண்டு வாழ்ந்தனர் என்பது தெரிகிறது. இவ்வாறு இவன் பாண்டியர்களோடு கேண்மை பாராட்டிச் சமாதானமாகவே பன்னிரண்டாம் ஆண்டுவரையில் வாழ்ந்துவந்தான். பின்னரே இவன் அவர்களை வேளூரில் தோற்கடித்தான். இக்காலத்தில் பாண்டியன் மானபரணன் இறந்து இராசசிம்மன் பாண்டிய அரசனாயிருந்தான். இவன் தன்னோடு சிங்கள அரசனையும் சேர்த்துக்கொண்டு எதிர்க்க இவர்களிருவரையும் தோற்கடித்து **சங்கிராம ராகவன்** என்னும் பட்டத்தையும் ஏற்றானென்று பிருதிவிபதிப் பட்டயம் கூறுகிறது. இப்பட்டத்தை இவன் கொண்டபோதிலும், இவனது மெய்க்கீர்த்திகளில் "**மதிரையும் ஈழமுங்கொண்ட பரகேசரி**' என்று கூறிக்கொள்வது ஈழத்வைத இவன் கி. பி. 944-ல் வென்ற பிறகேயாம்.

இவன் தனது தந்தையான ஆதித்தன் பிடித்த தொண்டை நாட்டை விட்டுவிடாது ஆண்டுவந்தான். இவைகளோடு நிற்காமல் இவன் கொங்குநாடு சென்று அப்பக்கத்திலாண்ட கஙக அரசன் இரண்டாம் பிருதிவீ பதியை வென்று, அவனைத் தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசனுக்கி **வாணாதிராயன்** என்னும் பட்டமும் அவனுக்கு அளித்தானென்று பிருதீவிபதிச் செப்புப்பட்டயங்கள் 3 கூறுகின்றன. **இச்செப்புப் பட்டயம்** பராந்தகனது பதினேந்தாமாண்டிற் பிறந்தது. இதற்கேற்ப இச்சோழ அரசனது கல்வெட்டுக்களும் அப்பக்கங்களிற் காணப்படுகின்றன.

---

2. தில்லைஸ்தானம் பெரியகோயில் மகாமண்டபம் தென்புறத்திற் காணப்படும் கல்வெட்டு பின்வருமாறு-ஸ்வஸ்தி ஸ்ரீகோபரகேஸரி பனமர்க்கு யாண்டு அ-வது திருநெயத்தானத்து மகாதேவர்க்குப் பாண்டியனார் மானபரணன் தேவியார் கிழவன் தேசப்புகழ் சந்திராதித்தவல் நிசதம் உழக்குநெய் ஒரு நொந்தா விளக்கெரிப்பதற்கு வைத்தபொன் ௬௦. இப்பொன் முப்பதிஃகழஞ்சையுங்கொண்டு நிசதி உழக்கு நெய்சந்திராதித்தவல அட்டுவேனாகவும். 3. S. I. I. Vol. II. Part III.

இதனால், இவன் பாண்டிநாட்டை வென்ற சில ஆண்டுகட்குள்ளாகவே கங்கநாட்டையும் தன்னடிப்படுத்திக் கொண்டான் என்பது தேற்றம்.

வடாற்காடு சில்லாவில் ஒருபாகத்திற்கும் அதே பாகத்தினுள்ள தென்னாற்காடு சில்லாவின் பாகத்திற்கும் வாணகப்பாடி அல்லது வடுகவழிமேற்கு என்று பெயர். இக்காலத்தில் நாலாம் விசயாதித்தனும் அவனுக்கு முன் இவனது தந்தை வித்தியாதரனும் ஆண்டுவந்தார்கள். இந்நாட்டையும் வென்று இதனையும் தன் நண்பனும் தன் கீழ்ச் சிற்றரசனுமான கங்கவமிசத்தான் பிருதிவீபதிக்குக் கொடுத்தான்.

சென்னை மாகாணத்தில் சற்றேறக்குறைய சரிபாதியைத் தன் வசப்படுத்திக் கொண்டதைக்கண்ட இராஷ்டிரகூட அரசர்கள் மிகுதியிருந்த கங்கவமிசத்தாரோடு பெண் கொடுக்கல் வாங்கல் செய்து உறவையும் ஒற்றுமையையும் பலப்படுத்திக் கொண்டனர்.

கி. பி. 937-ல் இராஷ்டிரகூடப் பட்டத்துக்கு அமோகவர்ஷன் மகன் அகாலவர்ஷன் என்னும் மூன்றாங் கிருஷ்ணன் வந்தான். இவன் சிறுவன் எனினும் அஞ்சா நெஞ்சன். இவன் தைரியசாலியாயு மிருந்ததோடு பராந்தகனது செங்கோல் வளம் பெறுவதைக் காணப்பொறாதவனாய்த் தனது சேனைகளைத் திரட்டிக்கொண்டு கி. பி 942-ல் தொண்டை மண்டலத்துட் புகுந்தான். அக்காலத்தில் பராந்தகன் தென்னாட்டிலிருந்தபடியால் அங்ஙனம் புகுந்தானைத் தடுக்குந்தகுதியுடையார் ஒருவருமில்லை ஆகவே, இவன் காஞ்சிபுரம் முதல் வடஆற்காடு சில்லாவினுள்ள சித்தலிங்கமடம் வரையிற் றன்னிசையைப் பரப்பினான். இதைக் கேட்ட பராந்தகன் வடக்கே வந்து இம்மூன்றாங் கிருஷ்ணனை புறங்கண்டு **வீரசோழ**னென்னும் பட்டமும்சூடினான். இதனைக் கன்னியா குமரிக் கல்வெட்டுப் பின்வருமாறு கூறும்:—

“யஜ்ஜிக்ஃாய விஜயோப மத்யுதிஃ கிரஷ்ணராஜ மகிதம்
நபாதிஃபை:

பூஃரிவிக்ரமவிவர்திஃதத்ஃயுதி: வீரசோழ இதிதேந
கீர்த்யதே''

[இதன் பொருளாவது, அரசர்களால் வெற்றி பெறமுடியாத (பராக்கிரம முடைய) கிருஷ்ணராஜனை அர்ச்சுனனுக்குச்சமான மான காந்தியுடையவனும் அநேக வீரச்செயல்களால் கீர்த்தி (பெருமை) யடைந்தவனுமான பராந்தகன் சயித்ததினாலே **வீரசோழன்** என்று பேர்பெற்றான்.]

மூன்றாங் கிருஷ்ணனை கன்னர தேவன் தொண்டை மண்டலத்தில் நுழைந்ததற்குச் சான்றாகச் சித்தலிங்கமடம் என்ற ஊரில் அவனது ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டொன்று சிதைந்து புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு இராவிடின், கன்னியாகுமரிக் கல்வெட்டிற்கண்ட சுலோகத்துக்குப் பொருள் செவ்வனே விளங்காது. இதனால் கன்னரதேவன் சோழராச்சியத்திற் புகுந்தா னென்பதும் பராந்தகனால் விரட்டப்பட்டானென்பதும் வெளிப்படை.

இவ்வாறு கொள்ளாது சிலர் பராந்தகன் தனது ஆட்சியினிறுதிக்காலத்தே–தனது அரசாட்சியின் முப்பத்தைந்தாம் ஆண்டில்–வலிகுன்றி யிருந்தானென்றும், அதற்கு இக்கன்னர் தேவனது படையெடுப்பே போதிய சான்றென்றும் கூறுவர். இதற்குக் காட்டாய் நிற்பது சித்தலிங்க மடத்திற் காணப்படும் கன்னரதேவனது ஒரே கல்வெட்டேயாம். ஆனால் நாலைந்து தலைமுறைக்குப் பின்னெழுந்த கன்னியாகுமரிக் கல்வெட்டு கன்னர தேவனது படையெடுப்பையும் அவனது தோல்வியையும் கூறுகிறது. படையெடுப்பை யொப்புக் கொள்ளுகிறவர் அவனது தோல்வியையும் ஒப்புக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றனர். இதுவன்றிப் பராந்தகன் தனது இராச்சியத்தை இழக்க, கன்னரதேவன் தொண்டைமண்டலத்தைத் தன்னதாக்கிக்கொண்டிருந்தால் கன்னரதேவன் கல்வெட்டுக்கள் அந்நாட்டில் இவனது ஐந்தாவது ஆண்டுமுதற் காணப்படல் வேண்டும். அதற்கு மாறாக இவனது பதினைலாவது ஆண்டுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்களே காணப்படுகின்றன. இது மாத்திரமல்ல. பராந

தக தேவனை சோழபெருமானடிகள் தொண்டை நாட்டை யிழந்திருப்பானுனல் இப்போர்நடந்த இவனது முப்பத்தைந் தாண்டிற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படமாட்டா. வடார்க்காடு சில்லாவிலுள்ள சம்பை, எலவானுசூர் கிராமம், திருமால்புரம் என்ற ஊர்களில் பராந்தகனது முப்பத்தைந்தாண்டு கட்கு மேற்பட்ட ஆண்டுக் கல்வெட்டுக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இவைகள் கி. பி. 942 முதல் 948 வரையிலாகும். அதே ஊர்களிலிருக்கும் கன்னரதேவனது சாசனங்கள் 23 முதல் 28 ஆண்டு வரை கி.பி 960 முதல் 968-வரையிலாகின்றன.

கன்னரதேவன் சோழ பராந்தகப் பெருமானடிகளால் துறத்தப்பட்டானென்பதற்கு மற்ருெரு இலக்காய் நிற்பது "சக்கரவர்த்தி கன்னரதேவவல்லபர் ஆண்டு இரண்டாவது சகாவாண்டு எண்ணூற்றெழுபத்தொன்று இராஜாதித்ய தேவரைக் கிழித்துத் (கொன்று) தொண்டை மண்டலத்திற் பிரவேசித்த காலம்" என்னும் சோழபுரம் கல்வெட்டு. இதனாலே இதற்கு முன்பு இவர் தொண்டை நாட்டின்மேல் படை யெடுத்தனராயினும் தங்கவில்லை யென்பது விளக்கமாம். இதுபற்றியன அடுத்த அதிகாரத்தில் விளக்கமாகக் கூறப்படும்.

இவ்வாறு பராந்தகன் மூன்ருங்கிருஷ்ணனுன கன்னரதேவனைப் புறங்கண்டோட்டிய பின்பு மறுபடியும் பாண்டியன் முனைக்கவே அவனை மறுபடியும் தோற்கடித்தான். இந்தப் போரில் அவனுக்கு உதவிபுரிந்த ஈழத்தரசனை ஐந்தாம் தப்புலனையடக்கவெண்ணி ஈழத்தின்மேற் படையெடுத்துச் சென்று ஏழே நாளையில் எழுநூற்றுக் காதப் பரப்பையுடைய சிங்கள நாட்டைத் தன்னடிப்படுத்தி அநேக வேழங்களைத் திரையாகப் பெற்ருனென்று உலாக்கள் கூறுகின்றன. இங்ஙனம், ஈழநாட்டைத் தன்னடிப் படுத்திய பின்புதான் இவன் தனது மெய்க்கீர்த்திகளில் 'மதிரையும் ஈழமுங்கொண்ட பரகேசரி' என்று கூறிக்கொள்ளுகிருன்.

(தொடரும்.)

உ

மற்றொரு துயரம்.

நமது சங்கத்தின் உயிர்நிலைக்களனாகி விளங்கும் திருச்சிராப்பள்ளிக் கிளையில், தம் உடல் பொருளெல்லாம் தமிழ்த்தாய்க்கும், தமிழராம் உடன்பிறப்பினருக்கும் உரியனவாக்கித் தொண்டுபூண்டிருந்த திருவினர், T. N. குருமூர்த்திப்பிள்ளையவர்கள் காலவயப்பட்டுத்துஞ்சியது சங்கத்தின் மற்றொரு பெருந்துயரும் நலக்குறையுமாகும்.

இச்சிராப்பள்ளித் தமிழ்ச்செல்வர், கிளைச்சங்கத்தின்பெருந்தொண்டுகட்கு அடிப்படையாக விளங்கி வந்தவர். அக்கிளையின் சார்பாக நாட்டப்பெற்ற அச்சுச்சாலை இச்செல்வரின் பெருநெடு முயற்சியாலேயே தோன்றியது. மூலநோயின் மிகு துன்பினால் நலிவுறுவாராயும், அச்சாலையின் தலைமைப் பார்வையினைமேற்கொண்டு உழைத்துவந்தனர். நண்பர்கள், அவ்வுழைப்பினால் இவர்கட்குறும் பெருந்துன்பினை எடுத்துரைத்துத் தடுத்தும் கேட்டனரல்லர். படுக்கை விட்டெழுவியலாத நிலைமேவுங்காலும் அச்சாலையினை விடாது புரந்துவரத் துணிந்தனர். அவர்தம் உதவியின்றி அச்சாலை நன்கு நிகழாமையின் அச்சாலை நிறுத்தப்படவே, அதுபற்றிய துயர்மிகுதியால் உளவலியுங்குன்றினர். இங்ஙனம், தமிழ்த் தொண்டிற்கே பிறந்து வளர்ந்து தமிழ்த் தொண்டிற்கே வாழ்ந்திருந்த நம் தமிழ்ச்செல்வர் தம் ஆவியையும் தமிழ்த்தாய்க்கு உரியதாக்கி இறைவன் தண்ணடி நீழலுற்றனர்.

உண்மைத் தமிழன்பும் உண்மைத் தமிழர்மாட்
டுண்மைத் தனியன்பும் உற்றோயே!—உண்மை
யுருவாங் குருமூர்த்தி! உன்கூட் டுறவை
மருவாதேம் என்வல்லேம் மற்று.

வே.